தமிழ் நூதன வாசகம்

மூன்றும் புத்தகம்

வித்வான்
வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
எழுதியது.

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்
திருவல்லிக்கேணி, சென்னை

காபிரைட்] 1931 [விலை அணா

Printed at
The B. N. Press, Mount Road,
Madras.

முன்னுரை

இக்காலத்தில், மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய பொருள்கள் பல. அவற்றுள், முக்கியமானவற்றைத் தேர்ந்து, அவற்றைக் குறித்துத் தெளிவாக எழுதப்பட்ட பாட புத்தகங்கள், மாணவர்களுக்கு மிக்க பயன் தரும். ஆதலின், யான், அத்தகைய பொருள்களுள் முக்கியமான சிலவற்றைத் தேர்ந்து எழுதி, ‘தமிழ் நூதன வாசகம்’ என்னும் பெயரால் சில புத்தகங்கள் வெளியிட்டுள்ளேன்.

இப் புத்தகங்களில், பறவை, விலங்கு, அரசியல் முறை, சுகாதாரம் முதலான பலவற்றைக் குறித்தும், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு, பிறநாட்டவரின் பழக்க வழக்கம் ஆகியவற்றைக் குறித்தும், பல பாடங்கள் எழுதப்பட்டிருக்கின்றன; அன்றியும், நல்லொழுக்கங்களை யுண்டாக்கத் தக்க கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மரபுச்சொற்களும், கருத்துக்களை விளக்கத்தக்க பழமொழிகளும் இப்புத்தகங்களில் இடம்பெற்றுள்ளன. வகுப்பிற்குத் தக்கவாறு வசன நடை அமைந்துளது. சந்தர்ப்பத்தினால் பொருள் விளங்குவனவாகிய அருஞ்சொற்களும் வந்துள்ளன.

இப்புத்தகத்தில், ‘ஈக்கள்’ என்னும் பாடம். ம-ா-ா-ஸ்ரீ, G. ராஜகோபால நாயுடு அவர்கள் (Food specialist) ஈக்களைக் குறித்து விரிவாக எழுதியுள்ள கையெழுத்துப் புத்தகத்திலிருந்து சுருக்கமாக எழுதப்பட்டது. ‘தளவாய் அரிய நாதர்’ என்னும் பாடம், ம-ா-ா-ஸ்ரீ, சே. சோமசுந்தரம்

பிள்ளை யவர்கள் (Tamil Pandit, St. Bede's European High School) எழுதியுள்ள 'தமிழ்ச்சுவைக் கதைகள்' என்னும் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது. இப்பாடங்களைச் சேர்த்துக் கொள்ளுதற்கு அனுமதி தந்த இவரிருவருக்கும் யான் நன்றியறிதலுடையேன். ம-ா-ா-ஸ்ரீ, கா. நமச்சிவாய முதலியாரவர்கள், ஜனவிநோதினியிலிருந்து, 'சரீரநோயால் மனநோயுண்டாகும்' என்னும் பாடத்தை இதிற் சேர்த்துக் கொள்ள அனுமதி தந்ததோடு, இப் புத்தகம் முழுவதும் கடைக்கணித்து, திருத்தமுறச்செய்து தந்தார்கள். அவர்கள் பால் யான், என்றும் நன்றி யறியும் கடப்பாடுடையேன்.

யான் எழுதிய புத்தகங்களை ஆதரித்து, எனக்கு ஊக்க மளித்துவரும் அன்பர் பலருக்கும் நன்றியறித லுடையேன்.

மயிலாப்பூர்,
22-9-'31

வே. வேங்கடராஜுலு.

உள்ளுறை

வசன பாகம்.

எண்	பாடம்	பக்கம்
1.	பாண்டவர் தூதன்—I ...	... 1
2.	ஈக்கள் ...	... 9
3.	தளவாய் அரியநாதர்—I ...	... 17
4.	தளவாய் அரியநாதர்—II	... 22
5.	உலக அறிவு ...	... 28
6.	பாண்டவர் தூதன்—II ...	... 32
7.	கொதுகு—I ...	... 40
8.	கொதுகு—II ...	... 46
9.	புகழேந்திப் புலவர் ...	... 50
10.	அரசிறை ...	... 59
11.	பாண்டவர் தூதன்—III ...	... 63
12.	சரீர நோயால் மனநோயுண்டாகும்	... 71
13.	சில வழக்கங்கள் ...	... 78
14.	மின்னலும் இடியும் ...	... 83
15.	கும்பகருணன் ...	... 86
16.	அபாயங்களில் உட்னுதவி ...	... 96
17.	உழவுத்தொழிலின் நிலைமை ...	... 103

செய்யுட் பாகம்

I அறநெறிச்சாரம் (முனைப்பாடியார்) ... 111
II நீதிநெறி விளக்கம் (குமரகுருபர சுவாமிகள்)... 113
III சந்திரமதி திருமணம் (நல்லூர்-ஆசுகவி. வீரகவிராயர்) 115
IV கோவிந்த சதகம் (நாராயண பாரதி) ... 119
V பட்டினத்துப் பிள்ளையார் பாடல் 121

தமிழ் நூதன வாசகம்

மூன்றும் புத்தகம்

1. பாண்டவர் தூதன்-I

முற்காலத்தில், சந்திரகுலத்தில், பாண்டவர் கௌரவர் என்னும் இருதிறத்தரசர் திகழ்ந்திருந்தனர். கௌரவர்களுக்குத் தலைவனாகிய துரியோதனன், பாண்டவரிடத்து அழுக்காறுகொண்டு, அவர்கள் நாட்டை வஞ்சகச் சூதினால் கவர்ந்து, அவர்களைக் காட்டிற்குப் போக்கினான்; அவர்கள், பன்னிரு யாண்டு வனவாசம் செய்து, ஓர் யாண்டு நகரத்தில் கரந்து உறைந்து வரின், அவர்கள் நாட்டை அவர்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்தான்.

பாண்டவர் ஐவரும், தம் தேவியாகிய துரோபதையுடன் பன்னீராண்டு வனவாசம் செய்து, ஓர் யாண்டு விராடநகரத்தில் கரந்துறைந்து காலங்கழித்தனர். அதன்பின், அவர்கள் தம் நாட்டைத் தரும்படி, உலூகன் என்னும் முனிவனைத் துரியோதனனிடம் தூது விடுத்தனர். துரியோதனன், நாட்டைக் கொடுக்க மறுக்கவே, பாண்டவர் அவனோடு போர்செய்து, தமது நாட்டை யடைய எண்ணினர். ஆயினும், அவர்களுள் முதல்வராகிய தருமபுத்திரர், துரியோதனனுடன் அமர் புரிதற்கு மனமின்றி, மீண்டும் ஒருமுறை தூது அனுப்ப எண்ணி, அதற்குத் தக்கவர் கண்ணபிரானே யென்று உன்னி, அவரை யடைந்து, தம் கருத்தை விண்ணப்பம் செய்தார். அதனைக் கேட்டருளிய வாசுதேவர், பாண்டவர் ஐவரையும்

ஒருங்குகூட்டி, அவர்கள் உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் அறிய எண்ணினர்.

அவ்வாறே வாசுதேவர், பாண்டவர்களை ஒருங்குகூட்டி, அவர்களை நோக்கி, 'நீவிர் துரியோதனனோடு போர்செய்து, நம் நாட்டைக் கைப்பற்றி அரசாள எண்ணியுளீரோ? அன்றி, இன்னும் காடே கதியாகக்கொண்டு வருந்தித்திரிய மனங் கொண்டுளீரோ? நும் உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறே உரைமின்' என்று கேட்டார். தருமபுத்திரர் அவரை நோக்கி, 'யாம் இருதிறத்தாரும் செற்றம் மிக்கு, செருச் செய்து, ஒருசேர மாய்ந்து போகாவாறு, தேவரீர் சந்து செய்தருளல் வேண்டும்' என்று தமது கருத்தைத் தெரிவித்தார். அதைக் கேட்டு ஸ்ரீ வாசுதேவர், 'துரியோதனன் தான் சொல்லியவாறு நும் பாகத்தைத் தாராவிடின், அவனோடு பொருது வென்று, நாட்டைப் பெறுதல் நியாயமன்றோ?' என்றார். அதற்குத் தருமபுத்திரர், 'எம்பெருமானே, சுற்றத்தாரையும் நண்பினரையும் பெரியோரையும் கொன்று, வெற்றி பெற்று, நாட்டை யடைந்து அரசு புரிதலினும், கானினுறைந்து, காய்கனி யருந்தி, தவம் புரிதலே சாலச் சிறந்ததன்றோ? ஆதலின், நீவிர் துரியோதனனிடம் சென்று, எங்கள் உரிமையைத் தரும்படி கேளும்; அவன், முன்னர் மொழிந்தவாறே பாதிநாடும் உரிமையும் தர மனம் இயைந்திலனாயின், ஐந்து ஊர்களைக்கொடுக்குமாறு வினவும்; அதற்கும் உடம்படானாயின், ஐந்து இல்லங்களையேனும் ஈயுமாறு வேண்டும்; அதனையும் மறுத்தானாகில், பின்னர் அமர் தொடங்குவோம்' என்று கூறினர்.

அப்பொழுது, வீமன், அண்ணல் உரைத்த அறவுரைகளை அகங்கொள்ளாது வெகுண்டு, அவரை நோக்கி, 'அன்று துச்சாதனன், அரசவையில் அடாதன செய்த பொழுது, "வெகுளன்மின்" என்று நீவிர் எம்மை அடக்கினீர். அத

ஞல்நேர்ந்த வசை, இவ்வுலகம் அழிந்தாலும் அழியாது நிற்ப தாயிற்று. நாம் பன்னீராண்டு பழுவத்துறைந்து படாதன பட்டும், ஓர் யாண்டு ஒருவரும் அறியாது கரந்து உறைந்தும் வந்திருக்க, அவன் நம் உரிமையைத் தர மறுத்தானுயின், அவ னேடு அமர்விளைக்கத் துணியாது, இன்னும் இரவுரையே கூறு கின்றீரே; நும்மைக் கானகத்தனுப்பிய காவலனை ஒருநொடி யில் வானகத்தனுப்பி, நுமக்கு யானே முடி சூட்டுவேன். தாம், துரோபதையின் கூந்தலை முடித்ததும், இளையோர் கூறிய வஞ்சினத்தை நிறைவேற்றியதும், பகையை வென்று புகழடைந்ததும் மிகவும் நன்ருய் விளங்குகின்றன! இவ்வாறு எல்லாச் செயல்களும் செய்து முடித்தவர் நும்மையன்றி வேறு யாவருளர்!' என்று எள்ளி இயம்பினன்.

வீமன் வெகுண்டு கூறிய வெவ்வுரை யனைத்தும், பொறையுடன் கேட்டுக்கொண்டிருந்த யுதிஷ்டிரர், அவனை இனிது நோக்கி, 'போர்ப் புலியே, நீ சிற்றங்கொண்டு கூறிய மாற்றங்கள் ஏற்றனவல்ல; நம் தாயத்தவர் அறியாது இழைத் தவை பரிபவமாகா. "குற்றம் பார்க்கில் சுற்றமில்லை" அன்ருே? ஒரு குலத்தில் தோன்றியவர்கள் ஒற்றுமையுடன் கூடி வாழ் தலே உத்தமம். பற்கள் நாவைக் கடிப்பின், அது கருதி அவற்றைத் தட்டி உடைத்து எறிபவர் உளரோ? கண்ணில் குத்திற்று என்று கைவிரலைக் களைபவர் யாவர்? இவற்றை எண்ணிப்பார்; இவையேபோல, நம்துணைவன் அறியாமல் ஒன்றை ஆற்றினுயின், நாம் ஆறியிராது, அவனைச்சீறுவது அறமாமோ?' என்று இன்சொற்களால் அறிவு புகட்டினர்.

வீமன் அவற்றைக் கேட்டும் அமையாமல், 'என்னே நும் இரக்கம்! என் கையிலுள்ள கதையின் வலியையும், விஜயன் வில்லின் திறலையும், இரட்டையர்களின் ஆற்றலையும், வாசுதேவர் நம்மேல் வைத்துள்ள அருளையும் அறிந்திருந்தும், இன்னும் அமர்புரிதற்கு அஞ்சுதல் சரியன்று. கண்ணபிரான்

தூதுவனுகச் செல்ல வேண்டா ; வேண்டுமேல், யானே தூது சென்று, வினைமுடித்து வருகின்றேன்' என்று மீண்டும் வெகுண்டு கூறினன்.

அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த வாசுதேவர், வீமனை நோக்கி, 'நீ முனிவுடன் மொழிவது முறையன்று ; மூத்தவர் வேத்தியலை எடுத்துக் கூறின், அதனை ஏற்றுக்கொள்ளாமல் பின்னவர் வேற்றுமைப்படுதல் பிழையாகும். ஆதலின், நீ சினந்தணிந்து அமைவாயாக' என்று பணித்தார்.

பின்னர், விஜயன் எழுந்து, அண்ணனையும் கண்ணனையும் அடிவணங்கிக் கூறுவான் : 'வானவராயினும் தானவராயினும் வேறு யாவரேயாயினும் என்னுடன் எதிர்த்துப் பொருவாராயின், ஓரே வாளியால் அவர்களுயிரை நீக்குவேன். அத்தகைய வாளி என்னிடம் இருக்க, இன்னும் பணிமொழி பகர்ந்து, தூது விடுத்தல் ஏன்? அன்றியும், நம் தேவியை, காவலர் குழுமியிருந்த பேரவையில் தீங்கிழைத்த தீயோரை அழித்தல் அறமேயாகும். பாம்புக்குப் பால் வார்க்கினும், அது படுவிடம் ஈதல்போல, அறநெறி கூறினும் அரவக் கொடியோனுக்கு மறநெறியே தோன்றும். அவன்பால், கண்ணபிரான் தூது சென்று அறவுரை கூறினும், அவன் அதை மனங் கொள்ளான். "கெடுமதி கண்ணுக்குத் தோன்ருது" என்பது முதுமொழி யன்றே? ஆதலால், சந்துசெய்ய விடுத்தல் தக்கதன்று.'

இவ்வாறு இயம்பி அருச்சுனன் நின்றதன்பின், நகுலன் எழுந்து வணங்கி, 'நாம், துரியோதனுதியரிடம் நாட்டை இரந்து வேண்டுவோமாயின், நாவலந் தீவிலுள்ள காவலர் நம்மை எள்ளி நகையாரோ? அன்றியும், துரோபதைக்குத் தீங்கிழைத்த தீயவர்பால் அரசுபெற்று, அவருக்கு அடங்கியிருப்பின், உலகினர் இழித்துக் கூருரோ? "நம் துணைவர் படாதன பட்டு, பதின்மூன்று யாண்டுகளும் கழித்து வெளிப்

போந்துள்ளனரே ; அவர்கள் உரிமை முழுவதும் உடனே அளிப்பது முறைமை" என்று தானே தேருத துரியோதனன், பிறர் தெரிவிப்பதனுல் எவ்வாறு தெரிந்து கொள்வான்!' எனக் கூறி அமர்ந்தான்.

பின்னர், கண்ணபிரான் சகதேவனை நோக்கி, 'பேரறிவாள, தருமர் முதலாக நால்வரும் நவின்றவற்றைக் கேட்டேம் ; நின் கருத்து யாது? அதனைத் தெரிவிக்க வேண்டும்' என்று பணிக்க, அவன் எழுந்து அடிவணங்கி, 'பெருமானே, தருமபுத்திரர் எண்ணியுள்ளவாறே, நீர் தூது சென்ருல்தான் என்? செல்லாவிட்டால்தான் என்? துரியோதனன் நாட்டைக் கொடுத்தால்தான் என்? கொடாவிட்டால்தான் என்? துரோபதை கூந்தலை முடித்தால்தான் என்? விரித்தால் தான் என்? முடிவில் இன்னது நடக்கும் என்பது உமது திருவுள்ளம் அறியும்; அஃது அடியேனுக்கும் தெரியும் ; பிறர் யாவர் அறிவர்?' என்று நயமுறக் கூறினன்.

சகதேவன் கூறியவற்றைக் கேட்டருளிய வாசுதேவர், 'இவன், மற்றவர்கள் கூறியவாறு கூருமல், விரகுறப் பேசினன்; இவன் எண்ணத்தை அறிவோம்' என்று கருதி, அவனை வேருெரு மண்டபத்திற்கு உடன்கொண்டுபோய், தமியரா யிருந்து, 'என்னை, அவ்வாறு கூறினை? பாரதப்போர் நடவாதிருத்தற்கு யாது செய்யலாம்?' என்று வினவினர். அதற்குச் சகதேவன், 'பெருமானே, பாரதப்போரில் எல்லாரையும் அழிக்கவேண்டும் என்று, தேவரீர் திருவுள்ளங் கொண்டிருக்கின்றீர். அதனுல் பிறர் எவராலும் அப் போர் நிகழாவண்ணம் தடுத்தல் இயலாது. ஆயினும்,

பாராளக் கன்னன் இகல் பார்த்தனைமுன் கோன்றணங்
காரார் குழல் களைந்து காலில் தளை பூட்டி [கின்
நேராகக் கைபிடித்து நின்னையும்யான் கட்டுவேனேல்
வாராமல் காக்கலாம் மாபா ரதம்' என்றான்.

அதன்பின் வாசுதேவரும் சகதேவனும் சிறிது நேரம் உரையாடிவிட்டு, அம் மண்டபத்தினின்று வெளிப்பட்டு, மற்றையோரிருந்த இடத்தை அடைந்தனர்.

வாசுதேவர் அங்கிருந்த துரோபதையை நோக்கி, 'சகதேவன் சந்து செய்வதே தக்கது என்கின்றான்; தருமபுத்திரர் கருத்தும் அவ்வாறே யுளது; அதனால், யானும் அதுவே தகுதி என்று எண்ணுகின்றேன்' என்றார். உடனே அவள், மின்னல் நிலத்து வீழ்ந்தாற்போல் வீழ்ந்து, கண்ணீர் வடியக் கரைந்து, 'ஐயனே, பாண்டவர் துரியோதனனிடம் சில ஊர்களைப் பெற்று வாழ்ந்திருப்பாராயின், யான், அன்று அரசவையில் விரித்த கூந்தலை முடிப்பது எப்படி? துரியோதனனுதியர் அக்காலத்தில் எனக்கு இழைத்த மானக் கேட்டைத் தடுத்து, என்னைக் காத்தருளிய தேவரீர், இன்று என்னைக் கைவிடுதல் முறையாமோ?' என்று பலவாறு பன்னி யழுதாள்.

அப்பொழுது அருகிலிருந்த சாத்தகி, 'கௌரவர்களிடம் தூது விடுக்கும்படி ஆலோசனை கூறியவர் யாவர்? பகைவரிடம் சென்று பணிந்து இரந்து நாடாள்வதினும், பழையபடி காடாள்வதே நலமாகும். ஆதலின், தூது விடுத்தல் தக்கதன்று' என்று முனிவுடன் மொழிந்தான். அவ்வளவில் வாசுதேவர் பாஞ்சாலியைத் தேற்றி, 'நீ கவலாதை; தூது போய் வந்த பின்பு, நானே உன் கூந்தலை முடிக்கின்றேன்; நின் ஒருத்தியின் கூந்தலை விரித்த காரணத்தால், அந் நூற்றுவர் மனைவியரும் தம் கூந்தலை விரித்துப் புரளுவர்; அதனைக் கண்ணாரக் காண்பாய்' எனத் தேறுதல் கூறினர்.

அவற்றை யெல்லாங் கேட்டுக் கொண்டிருந்த தருமர், கண்ணபிரானை நோக்கி,

'துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர்
கன்று சினமனத்தர் கல்லா தவர் இளையர்
ஒன்றும் முறைமை யுணரா தவர் மகளிர்
என்றுமிவர் மந்தணத்தின் எய்தப் பெறாதாரே'

என்பர் பெரியோர். ஆகலின், இவர்கள் கருத்தைக் கருத்திற் கொள்ள வேண்டா; எனது வேண்டுகோளின்படியே விரைவில் தூது சென்று வருக' என்று வேண்டிக் கொண்டார். வாசுதேவர், அங்ஙனமே, சாத்தகி முதலியோர் தம்மைச் சூழ்ந்து வர, தேரில் எழுந்தருளினர். முரசு ஒலிக்க, சங்கு முழங்க, சாமரை யிரட்ட, வெண்குடை நிழற்ற, நால் வகைப் படைகளும் புடைசூழ, வாசுதேவர், காடும் மலையும் கான்யாறுங் கடந்து, மூன்றாம் நாள் அத்தினபுரியை அணுகினர்.

ஸ்ரீ வாசுதேவர் வந்தருளுவதைக் கண்ட தூதர், விரைந்து சென்று, அச்செய்தியைத் துரியோதனனுக்கு அறிவித்தனர்; அவனும் அதனைக் கேட்டு உவப்புற்று, தன் நகர் முழுவதும் அலங்காரம் செய்யுமாறு முரசறைவித்து, சிறந்ததொரு விடுதி யமைத்து, அவரை எதிர்கொள்ளப் புறப்பட்டான். அப்பொழுது, சகுனி புன்மொழி புகன்று, எதிர்கொள்ளச் செல்லாதபடி அவனைத் தடுத்தான். அதனால் அவனும், மாதுலன் கூறிய மதியை மனங்கொண்டு, வழிச்செல்லாது, தன் கோயிலில் வீற்றிருந்தான்.

அப்பொழுது பீஷ்மர், துரோணர், கிருபாசாரியர், அசுவத்தாமன், விதுரன் முதலாயினோரும், அரசர் பலரும் கண்ண பிரானை எதிர்கொள்ளச் சென்றனர். அவரும், அவர்களை முறையான் வணங்கி வாழ்த்திய பின், அவர்களோடு அளவளாவிக் கொண்டே நகரை யடைந்தார். அடைந்து, விதுரன் இல்லத்தைச் சார்ந்து, பீஷ்மர் முதலாயினோரை அனுப்பி விட்டு, அவனோடு உட்புகுந்தார். ஸ்ரீவாசுதேவர், தன் இல்லத்

திற்கெழுந்தருளியதைக் கண்ட விதுரன், பெருமகிழ்வெய்தி, தன் தவப்பயனைக் கொண்டாடி, உயரியதோராசனத்தில் அவரை அமர்வித்து, அவரடிகளில் வணங்கி,

'முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ!
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ!
சோன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ எய்தற்
கென்ன மாதவம் செய்ததிச் சிறுகுடில்' என்றான்.

இவ்வாறு, கண்ணபிரான் எழுந்தருளியதை எண்ணி, களிப்பென்னுங் கடலுள் திளைத்த விதுரன், அவர் முதலாக அனைவருக்கும் விருந்து படைத்தான். அனைவரும் இன்சுவை யடிசில் அருந்தி, மென்சொல் பயின்று, இனிதிருந்தனர். அப்பொழுது அருக்கன் மேற்கடலில் மூழ்கினான்.

விதுரன், கண்ணபிரானை வணங்கி, அத்தினபுரிக்கு எழுந்தருளியதன் காரணத்தை அருளிச்செய்யும்படி வினவினான். தாம், பாண்டவர்களின் தாயபாகத்தை வேண்டித் துரியோதனனிடம் தூதாக வந்தசெய்தியை ஸ்ரீவாசுதேவர் தெரிவிக்க, அதுகேட்ட விதுரன், 'பாண்டவர் போர் தொடங்கினாலன்றி, துரியோதனன், தான் சொல்லியவாறு அவர்களுக்கு உரிமையைக் கொடான்' என்றான். வாசுதேவர், 'பெருஞ்செல்வர், தம்மை இரந்து வேண்டும் சுற்றத்தாருக்கு ஒரு சிறிதும் உதவார்; தம்மை யெதிர்த்துப் பொருபவர் கேட்ட கேட்ட பொருள்களை யெல்லாம் அவ்வப்பொழுதே யீந்து அடிபணிவர். இஃது உலகியல். துரியோதனன், பாண்டவர்களின் உரிமையை வழங்க மறுத்தானாயின், அதன்பின் அவர்கள் முனைந்து போர் தொடங்குவார்கள். அப்பொழுது அவர்கள் உரிமையை அவர்களுக்குக் கொடுத்து, வணங்குவான்' என மறுமொழி கூறினர். இவ்வாறு வாசுதேவர் நெடுநேரம் உரையாடிய பின்னர், காவலர் காவல் செய்யக் கண் வளர்ந்தருளினர்.

2. ஈக்கள்

ஈக்கள் உலகத்தில் எல்லாவிடங்களிலும் உள்ள உயிரினமாயினும், அவற்றின் வகை, தன்மை, செயல் முதலானவற்றை மாந்தர் நன்கு அறிந்து கொள்வதில்லை. 'ஈ சுத்தம், எறும்பு வலு, நாய் அறிவு' என்னும் கட்டுரையொன்று வழங்குதலின், நம்மவர், ஈ மிக்க தூய்மையுடைய ஜந்து எனக் கருதியிருந்தனர் என்பது புலனாகும். ஆயினும், அஃது அழுக்கடைந்த இடங்களிலேயே தங்கியிருக்கும் இயல்புடையதாயிருத்தலின், அதிக அசுத்தமுடையதேயாகும்.

வீட்டு ஈ:—ஈக்களில் பலவகை உண்டு. நாம் சாதாரணமாகக் காணும் ஈ வீட்டு ஈ. இது காலங்குல நீளமுள்ள சிறிய பிராணி; இதைப் போன்ற மற்றொருவகை ஈ, தொழுவங்களில் இருப்பதுண்டு. வீட்டு ஈக்குப் பிராணிகளைக் குத்தித் துன்புறுத்தும் வன்மையில்லை.

மாட்டு ஈ:—மாடு, குதிரை முதலானவைகளின்மேல் தங்கியிருக்கும் ஈயை மாட்டு ஈ என்று சொல்லுகிறோம். அது, தோற்றத்தில் வீட்டு ஈயினும் பெருத்திருக்கும். அதன் வேறுபாடு எளிதில் அறியக்கூடும். பிராணிகளின் உடலிற் குத்தி, இரத்தம் உறிஞ்சத்தக்க கூரிய உறுப்பொன்று அதன் வாயில் இருத்தலின், அது பிராணிகளைக் குத்தும் வன்மையுடையதா யிருக்கின்றது. அம் மாட்டு ஈ, சாணம், இலத்தி, மட்கிய வைக்கோல், அழுகிய குப்பை முதலியவற்றில் முட்டையிடுகின்றது.

நீல ஈ:-கசாப்புக் கடைகளில் இருக்கும் ஈ, நீல நிறமுடையதாதலால், அது நீல ஈ எனப்பெயர் பெறும். அது பழங்களின் மேலும் மொய்த்திருக்குமாயினும், இறைச்சியின்மேல் தங்கியிருக்கவே அதற்கு விருப்பம் அதிகம்.

பச்சை ஈ:—நீல ஈயினும் சிறியதாய்ப் பச்சை நிறமுள்ள மற்றொருவகை ஈ உளது. அஃது, அழுகிப்போன இறைச்சியி லும், வேறு அசுத்தமான பொருள்களிலும் தங்கியிருக்கும்; ஆடுகளின் உடலில் சாணம் முதலானவை ஒட்டிக்கொண் டிருக்குமாயின், அவற்றில் முட்டையிடும். அம்முட்டைகளி னின்று தோன்றும் புழுக்கள், அந்த ஆடுகளின் உடலில் தங்கித் தசைக்குட்சென்று கெடுப்பதனால், பல ஆடுகள் இறந்துபோதலும் உண்டு; சில சமயங்களில் தம் உடலில் இடப்பட்டிருக்கும் முட்டைகளினால் தினவு உண்டாக, அவ் வாடுகள் அப்பாகத்தை உதட்டினால் உராயும்; அதனால், அம்முட்டைகள் அவற்றின் வயிற்றினுட்போய்ச் சேர்ந்து, அங்கே புழுக்கள் ஆகி வளர்ந்து வெளிப்படும்.

கோம்பு ஈ:—ஆடு, மான் முதலான விலங்குகளின் கொம்புகளுக்கு அண்டையில் ஒருவகை ஈக்கள் சேர்ந்திருக் கும். அதனால், அவற்றைக் கொம்பு ஈ என வழங்கலாம். அவ்விலங்குகளின் வாலினால் தமக்குத் துன்பம் நேரமுடியாது என அறிந்து, அவை அங்கே தங்குகின்றன. மழைக்காலத்தி லும் குளிர்காலத்திலும் பல நாள்வரை ஈரம் இருக்குமாகலின், அக்காலத்தில் அவை சென்று சாணத்தில் முட்டையிடும்.

ட்ஸீ ஈ:—மத்திய ஆபிரிக்காவில் 'ட்ஸீ' என்னும் பெயருடைய ஒருவகை ஈக்கள் இருக்கின்றன. அவை குத்து வதனால் மாந்தர்க்கு மயக்கமும் தூக்கமும் உண்டாகும். அத னால், சில வூர்களும் பாழ்பட்டுப் போயினவாம்!

நிற்க, இனி ஈயினது உடலின் உறுப்புக்களைக் கவனிப் போம்:

சாதாரணமாக, ஈயின் உடலில் தலை, மார்பு, வயிறு ஆகிய மூன்று பிரிவுகள் காணப்படும். தலை, பெரும்பாலும் நாற்புறத் தும் திருப்பத்தக்கவாறு அமைந்துளது. ஈக்கு, தலையில் எண்

ணிறந்த கண்கள் உள்ளனவாயினும், உச்சிக்கும் வாய்க்கும் இடையே சிறந்த கண்கள் மூன்று இருக்கின்றன. அவற்றுள், மேலிருக்கும் கண் பெண்ணீக்களுக்கு அகன்று இருக்கும். ஈக்களின் கண்கள், எப்புறத்தும் பார்க்கக்கூடியவாறு பலவாக அமைந்திருத்தலினால், சிறுவர் அவற்றைப் பிடிக்க முயல்கையில், அவை தப்பி ஓடிவிடுகின்றன. ஆயினும், அவற்றிற்குக் கூர்மையான பார்வையில்லை; ஆனால், வாசனையறியும் திறமை மிகுதியாக அமைந்துளது.

ஈயின் வாய் தும்பிக்கை போன்றது. அது, தலையின் கீழ்ப்புறத்தில் நீண்டிருக்கும்; ஈ சும்மா இருக்கையில்



பெண் ஈ



ஆண் ஈ

அது, தலையின் அடியில் படிந்தும், பறக்கையில் நீண்டும் தோன்றும். அதன் நுனியில், உணவை உறிஞ்சி இழுக்கும் உறுப்பு ஒன்று அமைந்துளது. கீழ் உதடு அரத்தைப்போலச் சொரசொரப்பாய் இருக்கும்.

சோறு, ரொட்டி முதலான உணவுப்பொருள்களின் மேல் ஈ உட்கார்ந்ததும், அது தன்னுட் சுரக்கும் நீரை அவற்றின்மேல் பெய்கின்றது. அது பட்டவளவில் அப்பொருள்கள்,

மிருதுவாகிக் கரையுந்தன்மை யடைவதனுல், ஈ உறிஞ்சி உட்கொள்ளுதற்கு எளிமையாயிருக்கின்றன. உமிழ்நீர், ஈயின் வயிற்றிலிருந்து சுரந்து வெளிப்படுதலால், ஈ, தின்ற உண வினலான கழிவுப்பொருள்களும் அந்நீரோடு கலந்து வரு கின்றன.

ஈயின் வயிறு, அடுக்குகள் போன்று இணைந்திருக்கும். பெண்ணீக்கு அடியிலிருக்கும் நான்கு அடுக்குகளில் முட்டை கள் இருக்கும்; அவ்வடுக்குகளை உள்ளே யிழுக்கவும்,வெளியே நீட்டவும் பெண்ணீக்கு இயலும். முட்டையிடும் காலத்தில் பெண்ணீயின் வயிற்றில் எண்ணிறந்த முட்டைகள் நிறைந் திருக்கும்.

ஈக்களுக்கு, முதுகில் இறகுகள் அமைந்திருக்கின்றன. அவை, மெல்லியனவாய், கறுப்புக்கோடுகள் பொருந்திப் பளபளப்புடையனவாய் இருக்கும். ஈக்குக் கால்கள் ஆறு; கால்களில் சிறு மயிர் செறிந்திருக்கும். ஈக்கள், இருநூறு முந் நூறு கஜ தூரமே பறந்து செல்லுமாயினும், ரெயில், மோட் டார், குதிரை முதலானவற்றின் மூலமாக நெடுந்தூரத்திலும் பரவிவிடுகின்றன.

ஈக்கள் பல்குதற்கு வெப்பமும் குளிரும் மிதமா யிருக்கவேண்டுமாதலின், அவை, ஆனி ஆடி ஆவணி புரட் டாசி மாதங்களில் முறையே பெருகுகின்றன. ஒரு பெண் ஈ, ஒரு முறை நூற்றிருபது முதல் நூற்றைம்பதுவரை முட்டையிடும். அது, தன் வாழ்நாளில் நான்குமுறை முட்டை யிடும் என அறியப்படுதலின், மொத்தத்தில் ஏறக்குறைய அறுநூறு முட்டை யிடுவதாகும். ஈக்கள் சாணம், குப்பை, முதலான இடங்களில் முட்டையிடும்.

ஈயின் முட்டை, ஓர் அங்குலத்தில் இருபதிலொரு பங்கு ($\frac{1}{20}$) நீளமும், நீண்ட உருவமும், கூர்மையான நுனி

யும் உடையதாயிருக்கும். எட்டுமணி நேரத்திற்குமேல் இருபத்துநாலுமணி நேரத்திற்குள், முட்டைகளிலிருந்து புழுக்கள் வெளிப்படும். அவை, முட்டையினும் இரண்டு மடங்கு பெரியவையாய்த் தோன்றும். அவற்றிற்குக் கால்கள் இரா; வயிற்றின் அடுக்குகள் தெளிவாகத்தோன்ரு ; அவை நகர்ந்து நெடுந்தூரம் செல்லும்.

புழுவின் உடல், ஒரு பக்கத்தில் கூர்மையாயும், மற்ெருரு பக்கத்தில் தட்டையாயும் காணப்படும். அது விரைவில் வளர்ந்து, ஒருவாரத்திற்குள் இரண்டு முறை தோலையுரித்துக்கொண்டு வெளி வரும் ; பின்னர், ஒருதோல் தோன்றிப் புழுவை மூடிக்கொள்ளும்; புழு, அவ்வாறு மூடப்பட்ட மேற்ருேலோடு, தனக்கு உணவாயிருந்த எருவிற்குட் புகுந்து, மண்ணில் மறைந்திருக்கும்; மூன்று நாட்களின்பின், மேல்தோல் கிழியப்பெற்று, ஈயாகி வெளிப்படும் ; வெளிப்பட்டதும் இறகுகள் காற்ருல் உலரப்பெற்று, கால்கள் உறுதியடைந்தபின், அது பறந்து உலவத் தொடங்கும். ஈ பிறந்து மூன்று நாள் ஆனபின், அது, முட்டையிட்டுத் தன் இனத்தை விருத்தி செய்யத் தக்கதாகின்றது.

அமெரிக்காக் கண்டத்து நியூயார்க் மாகாணத்தில், சுகாதார அதிகாரியா யிருந்த டாக்டர். பிக்ஸ் (Piggs, M. D.) என்பவர் ஈக்கள் பல்குதலைக் கணக்கிட்டிருக்கின்ருர். அதன்படி, ஏப்ரல் மாதம் பதினென்ருந் திகதியில் இரண்டு ஈக்கள் இருப்பின், செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதியில், ஐந்து லக்ஷத்து ஐம்பத்தொன்பதினுயிரத்து எண்ணூற் றெழுபத்திரண்டு கோடி ஈக்கள் (5,598,720,000,000) உண்டாகின்றன.

		ஈ.
ஏப்ரல்மீ	11-ம்உ	2.
மேமீ	2 "	120.
மேமீ	23 "	7,200.
ஜூன் மீ	13 "	432,000.
ஜூலைமீ	4 "	25,920,000.
ஜூலைமீ	25 "	1,555,200,000.
ஆகஸ்டுமீ	15 "	93,312,000,000.
செப்டெம்பர்மீ	5 "	5,598,720,000,000.

இதனால், ஈக்கள் பல்கிப் பரவுதல் விளங்கும்.

ஈக்கள், தம் வாழ்நாள் முழுதும் சேறுள்ள இடங்களிலும் குழிகளிலும் வசிக்கும்; ஆயினும், வெளிச்சமாயிருக்கும் இடங்களிலேயே சஞ்சரிக்கும். அவை, எப்பொழுதும் உணவைத் தேடி, தின்றுகொண்டே யிருக்கும். நம் உடம்பின் மேல் வந்திருத்தலும் உணவின்பொருட்டேயாம்.

ஈக்கள் அசுத்தமான இடங்களிலேயே திரிந்துகொண்டிருத்தலினால், வியாதிகளுக்கு மூலமான அணுவுயிர்கள் அவற்றின் கால்களில் ஒட்டிக்கொள்ளும். அவை, நாம் உண்ணும் உணவுப் பொருள்களின்மேல் வந்து தங்கியிருப்பின், அவ்வணுவுயிர்கள் அப்பொருள்களிற் படிந்துவிடும். அதுவேயன்றி, அசுத்தமான பொருள்களும் ஈக்களின் உமிழ்நீரின் வழியாக வெளி வருகின்றன. இவற்றால், ஈ உட்கார்ந்த பண்டம், நோய்களுக்குக் காரணமாகும் என்பது நன்கு விளங்கும். ஈ விழுந்த சோற்றை உண்ணுதல் ஆகாது என்று அறநூல்களும் கூறுகின்றன; அனுபவமும் அதுவே.

சில சமயங்களில், ஈ உணவோடு வயிற்றினுட்போய் விடுமாயின், வாந்தி உண்டாகும். ஈயின் தலையில் மாணிக்கம் உளது என்றும், அது நமது குடலைப் புரட்டுதலினால்

வாந்தி யுண்டாகின்றது என்றும் பலர் கருதினர். ஆயின், இக்காலத்து ஆராய்ச்சியினுல், ஈயின் கால்களில் உள்ள மயிர்க்குருத்துக்கள், நமது உணவுப்பையினுள் உள்ள பட்டுப் போன்ற ஜவ்வில் உராய்வதனுல், வாந்தியுண்டாகின்றது என அறியப்பட்டுளது.

ஈக்களால் உண்டாகும் நோய்களுள் மிக்க கொடுமை யானது விஷஜ்வரமாகும். இந்நோயினுல் குடலெல்லாம் புண்ணுகிவிடும்; வயிற்ருேட்டமாவது, மலச்சிக்கலாவது உண்டா தலே யன்றி, இரத்தப்போக்கும் நேரும். இவற்றிற்குக் காரண மான அணுக்கள், மாந்தர் உடம்பிற் புகுந்ததும், உடனே கெடுதி செய்தல் இல்லை; நோய் தீர்ந்த பின்னும் அவ்வணுக் கள் பலநாள்காறும் நீங்காமலிருக்கும். சிலருக்கு, நோய் நீங்கி ஓர் யாண்டாயின பின்னரும், அவ்வணுக்கள் மல மூத்திரங் களோடு வெளிப்படும். ஈக்களால் உண்டாகும் தீங்கு எவ்வளவு கொடியது பாருங்கள்!

மேற்கூறியவற்ருல், ஈக்களை யழிப்பது நமது சுகவாழ் விற்கு மிகவும் இன்றியமையாதது எனத் தோன்றுமன்ருே? ஈக்களை ஒழித்துவிடவேண்டும் என்று ஒருவரோ இரு வரோ முயன்ருல், அது முற்றுப் பெருது; மாந்தர் ஒவ் வொருவரும் இவ்விஷயத்தில் முயலுதல் இன்றியமையாத தாகும். ஒவ்வொருவரும் தத்தம் இல்லத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வாராயின், ஊர்முழுவதும் தூய்மை யடை யும். இவ்விஷயத்தில் முக்கியமாக நகர பரிபாலன சபையாரும், உழவரும் நாட்டங் கொள்ளுதல் வேண்டும். நகரபரிபாலன சபையார் சந்தைக்கடைகளை (markets) யும், சிற்றுண்டி விடுதிகளையும், கக்கூஸ்களையும் கவனித்துப் பாதுகாக்க ஏற் பாடு செய்யவேண்டும். உழவர் எருவைப் பாதுகாப்பதில் நாட் டங் கொள்ளுதல் வேண்டும். எருவை, அவ்வப்போது

கொண்டு போய், உழுத நிலங்களில் கொட்டி, மண்ணால் மூடுதல் சிறந்தது. அவ்வாறு செய்தல் இயலாததாகலின், தொழுவத்திலேயே, நீர் ஊறாதவண்ணம் தொட்டி கட்டி, அதில் குப்பை கொட்டி, ஈக்கள் அதனுட் புகுந்து முட்டையிடாதபடி, மூடியால் மூடிவைக்கலாம்.

ஈக்கள் முட்டையிடுதற்குரிய எருக்குவியல், மலம், அழுகிய பொருள் முதலியவை வீடுகளின் அருகில் இல்லாதபடி கவனித்து வந்தால், ஈக்கள் பெருகமாட்டா. இருளடைந்த இடத்தில் ஈக்கள் வசித்திருக்க விரும்புவதில்லை யல்லவா? கக்கூஸ்களில் தார் (Tar) பூசினால், ஈக்கள் அங்கே போய் அடையமாட்டா; ஜன்னல்களில் கறுப்புத் திரைகளைத் தொங்கவிட்டிருந்தால், அவ்வழியே அவை பெரும்பாலும் உட்புகா. ஈக்களைப் பிடித்தற்குச் செய்யப்பட்டுள்ள வலைகளையும் பொறிகளையும் உபயோகப்படுத்தலாம்.

நம் நாட்டினர் ஈயின் விஷயத்தில் சிறிதும் கவனஞ் செலுத்துதல் இல்லை; சந்தைகள், மளிகைக்கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் முதலான இடங்களில் உணவுப் பொருள்களின்மேல் ஈக்கள் மொய்க்கும்படி விட்டுவிடுகின்றனர். அத்தகைய இடங்களில் உணவுப் பொருளை வாங்கியுண்பதனால், வியாதிகள் உண்டாகிப் பரவக்கூடுமல்லவா?

'ஈக்கு விடம் தலையில் எய்தும்' என்றதனால், அதன் தலையில் மட்டுமே விஷம் உளது என நம் முன்னோர் எண்ணினராவர். இக்காலத்து ஆராய்ச்சியினால், ஈயின் எல்லா உறுப்புக்களாலும் தீங்கு நேர்கின்றது என அறியப்பட்டுளது. ஆதலின், உணவுப் பொருள்களின்மேல் ஈ தங்காதபடி பாதுகாத்துக்கொள்ளுதல், நமது சுகவாழ்விற்கு முக்கியமாகும்.

3. தளவாய் அரியநாதர்-I

'தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து' எனப் புகழ்ப்பெற்ற தொண்டை நாட்டில், காஞ்சிமா நகரைச் சார்ந்த மெய்ப்பேடு என்னும் சிற்றூரில், சைவ வேளாளர் மரபில், முந்நூற்று முப்பது யாண்டுகளுக்கு முன்னே அரிய நாதர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர், சிறு குழந்தையா யிருக்கும் போழ்தில், அவர்தாயார், ஒரு நாள் அவரைப் பாயிற் கிடத்திவிட்டு, தண்ணீர் கொணரப் போயினர். போயினவர், நீர்கொண்டு திரும்பி வந்தபோது, ஒரு கருநாகம் குழந்தையைச் சுற்றி வளைந்து, படமெடுத்து நின்றது. அதைக் கண்ட தாயார் பெருந்திகி லடைந்து, மொழிகுழறி அலறி ஓலமிடவே, பாம்பு ஒன்றுஞ் செய்யாது அகன்றது.

அந்த நிகழ்ச்சியைக் கண்ட அறிஞர் சிலர், 'இக்குழந்தை மணிமுடி தரித்த மன்னர்போல் சிறப்புடன் விளங்கும்' எனக்கூறினர். நிகழ்ந்த அற்புதத்தையும் பெரியோர் கூறும் மங்கல மொழியையும் நினைந்து, பெற்றோர் பெருமகிழ்வெய்தினர்; குழந்தை மையோலை பிடிக்கும் பருவம் அடைந்ததும், பள்ளியில் வைத்துக் கல்வி பயில்வித்தனர். அவர், கல்வி கற்கும் நாளில், கணிதநூற் பயிற்சியில் பெரு விருப்புடையவரா யிருந்தார்; அதனோடு அமையாமல், விற்போர் மற்போர்களிலும் பயின்று, திறமை யுற்றவராகி, கண்டோர் வியக்கும்படி வீரச் செயல்களைச் செய்துவந்தார்.

ஒரு நாள் மாலையில் அரியநாதர், ஊர்ப்புறத்தே தம் தோழர்களோடு விளையாடிக்கொண்டிருக்கையில், வழிப்போக்கராகிய அந்தணரொருவர், அவர் சிலம்பப் பயிற்சியைக் கண்டு வியப்புற்று, சிறிது நின்று பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் அவர் அவ்விளைஞர் கூட்டத்தை நெருங்கி, அரியநாதரை அழைத்து, 'உமது கையைச் சிறிது காட்டும், பார்ப்

போம்' என்று கூறினர். நாயகர் முதலிற் சிறிது வெள்கி, பிறகு அவர் விரும்பியவாறே தம் கையைக் காட்டினர். காட்டவும், அந்தணர், 'நல்ல கை; மேலான கை' என்று சொல்லிக்கொண்டே, கைரேகைகளை ஆராய்ந்து பார்த்தார். பார்த்த பின்னர், 'ஐயா, நான் சொல்வதைக் கேளும்; உமக்கு ராஜயோகம் இருக்கிறது; நீர் இந்தச் சிற்றூரில் காலங் கழிக்காமல், இதினின்று நீங்கி, விஜயநகர ஸம்ஸ்தானத்தைச் சேர்வீராயின், மன்னர்மன்னராகி விளங்குவீர். அக்காலத்தில், யானாவது, என் மக்களில் யாராவது வந்து, இப்போது நான் சொல்வதை ஞாபக மூட்டிக் கேட்பின், உமது வருவாயில் நாலில் ஒருபாகமேனும் கொடுப்பீரோ? பிராமணன் வாக்குப் பலித்ததே என்னும் நன்றி இருக்குமோ?' என்றார்.

அரியநாதர்:— தாங்கள் சொல்வதுபோல் நடந்தேறினால், ஒருநாளும் தங்களை மறக்க மாட்டேன். நானோ ஓர் ஏழை.

அந்தணர்:—எனக்கு அது தெரியும்; இப்பொழுது என்னினும் நீர் ஏழை என்பதை நான் அறிவேன். ஆனால், என் சொற்படி ராயர் ஸம்ஸ்தானத்தை அடைவீராயின், சிறிது காலத்திற்குப்பின் சுக்கிரதசை வரும்போது ராஜபதவியை நிச்சயமாகப் பெறுவீர். அப்பொழுது இந்தப் பிராமணன் செய்தி நினைவிருக்குமா என்பதுதான் சந்தேகம்.

அரியநாதர்:—தாங்கள் அப்படிச் சந்தேகிப்பது நியாயமே. தங்களுக்குள்ள சந்தேகம் நீங்க, இத்தனை பேர் முன்னிலையில், 'நான் வாக்குப் பிசகேன்' என்று சொல்வது போதுமோ?

அந்தணர்:—இந்த வாயப் பேச்சு வேண்டா; கைப்பட எழுதிக் கொடும், பார்ப்போம்.

அரியநாதர்:—'அப்படியே ஆகட்டும்; தடையில்லை' என்று சொல்லி, அந்தணர் சொன்னபடியே ஏட்டில்

எழுதி, கைச்சாத்தும் இட்டுக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு அந்தணர் போய்விட்டார்.

அவர் போனபின் நாயகரின் தோழர், அவரை, 'ராஜாதி ராஜன்' என்றும், அவர் ஆட்சியில் தங்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்றும் கூறி, ஏளனம் செய்யலாயினர்.

நாயகர், தம் வீடு சென்றதும், வெளியில் நடந்தவற்றைத் தம் பெற்ரோரிடங் கூற, அவர்கள் மிகவும் வியப்புற்றனர். அரியநாதரோ அந்தணர் சொன்னதைக் கேட்டதுமுதல் விஜயநகரஞ் செல்ல விருப்பம் மேலிட்டவராய்த் தெலுங்கு மொழியைக் கற்கத் தொடங்கினர். பெற்ரோர்கள், தம் மைந்தன் அத்துணை தொலைதூரம் செல்வதற்கு முதலில் இணங்கில ராயினும், சோதிட நம்பிக்கை இடைவிடாது தூண்ட, ஒருவாறு சம்மதித்து, மைந்தனை நன்னுளில் விஜயநகரத்திற்குப் பிரயாணப்படுத்தினர்.

அரியநாதர், பட்டினியும் பசியுமாக வழி நடந்து, விஜயநகரத்தை யடைந்தார். அவருக்கு முதலில் அரண்மனைச் சேவகம் கிடைக்கவில்லை; பெரிய தளகர்த்தரின் வீட்டில் கணக்கப்பிள்ளை உத்தியோகம் கிடைத்தது. அந்தத் தளகர்த்தருக்கு விசுவநாதர் என்னும் அரும் புதல்வர் ஒருவர் இருந்தார். அவர், அழகு, அறிவு, ஆள்வினையுடைமை முதலிய தன்மையினும், விற்போர் வாட்போர் மற்போர் முதலிய போர்வகையினும் சிறந்தவர். அவருக்கு நாயகர் விரைவில் சிறந்த நண்பின ராகிவிட்டார். நாளடைவில், தம் திறமையாலும் ஒழுக்கத்தாலும் வாய்மையாலும்,அவர் தந்தையாகிய தளகர்த்தரின் நன்மதிப்பையும் பெற்று, உத்தியோக பதவியில் உயர்வடைந்ததோடு, ராயரின் அறிமுகத்தையும் அன்பையும் பெறலானுர்.

இவ்வாறு நடந்துவருகையில் ஒரு நாள், தம் யஜமானருடன் அரியநாதர் மகாராயரின் சபைக்குச் சென்றார். அப்பொழுது, அந்த சபையில், புலவர் போர்வீரர் அமைச்சர் படைத்தலைவர் முதலியோர் நாள்மீன்கள்போல் சூழ்ந்திருப்ப, கிருஷ்ணதேவராயர் நிறைமதி போன்று, மணிமுடி புனைந்து விளங்கியிருந்தார். அவர், விநோதமாகக் காலங் கழிக்குஞ் சமயத்தில், 'இன்று காலை, நாம் அரண்மனைத் தடாகத்தில் நீராடச் சென்றபொழுது, அழகிய தாமரை மொட்டொன்று—ஒரு சாண் நீளமிராது, முக்காற் சாண்தானிருக்கும்,—தாள் முழுதும் தண்ணீர்க்குள்ளிருப்ப, நீர்மட்டத்திற்கு மேல் நின்றது. நாம் தடாகத்தில் குதித்த அதிர்ச்சியால், அம்மொட்டு, சிறிது தூரம் பின் சென்றது; அப்படிச் சென்ற தூரம், நாலு சாண் இராது, மூன்றே முக்கால் சாண் என்னலாம். அதன் முனை நீர்மட்டத்துக்குச் சமமாக உள்ளே மறைந்துவிட்டது. அது நின்ற இடத்தில் தடாகத்தின் ஆழம் எவ்வளவு இருக்கும்?' என்று சபையோரைக் கேட்டார்.

அந்த வினவிற்கு ஏற்ற விடையளிக்க மாட்டாராகிச் சிலர் விழித்தனர்; சிலர் முணுமுணுத்தனர்; சிலர் மண்டபத்தின் மேற்பரப்பைப் பார்த்தனர்; சிலர் கணக்கிடுவதுபோல நடித்தனர்; வேறு சிலர், 'எவராலும் சொல்ல முடியாது' என்றனர். இப்படிச் சபையினர் திகைக்கும் போழ்தில், தூணருகில் நின்றுகொண்டிருந்த சிறுவரொருவர், 'மகாராயனுகாரு உத்தரவானால் ஊழியன் விண்ணப்பம் செய்கிறேன்' என்று வணங்கிச் சொன்னார். எவருமே எதிர்பாராத அவ்வுரையைக் கேட்டதும், அங்கிருந்தோர் கண்களெல்லாம் அவர்மேல் திரும்பின. கிருஷ்ணதேவராயர், 'யார் அது, அரியநாதனா? முன்னே வா; சொல், கேட்போம்' என்று கட்டளையிட்டார். உடனே அவர் பணிவுடன்

அரியணையின் அருகிற் சென்று வணங்கி, 'அவ்விடத்தில் ஆழம், அதாவது, தாமரைத் தண்டின் நீளம், மகாராஜா வின் பக்கத்தில், இங்கே நிற்கிறரே விசுவநாத நாயகர், இவர் உயரமளவுதான்' என்று விநயமாக விடையளித்தார்.

உடனே நரபதி திரும்பி, 'உன் உயரம் என்ன விசுவா?' என்று கேட்க, விசுவநாதர் 'ஒன்பது சாண்' என்று விடை கூறினர்.

அரியநாதர் விடையைக் கேட்ட கணிதநூற்புலவ ரொரு வர் கணக்குப் பார்த்து, 'விடை சரிதான்' என்றார். மற்றொரு வர், 'இல்லை, தவறு' என்றார். பின்னர், நரபதியின் கட்ட ளைப்படி ஒருவன் சென்று, முழக்கோலால் அளந்துவந்து, 'அவ்விடத்தில் குளத்தின் ஆழம் ஒன்பது சாண்தான்' என்று தெரிவித்தான். அதனால் வியப்பும் உவப்பும் அடைந்த கிருஷ்ணதேவராயர், அரியநாதரைப் பார்த்து, 'அது சரி, விசுவாவின் உயரத்தை எப்படி அளந்தாய்?' என்று கேட்டார்.

அரியநாதர் மீண்டும் வணங்கி, 'ஊழியன் உயரம் எட் டரைச் சாண்; அவர்கள் என்னைவிட அரைச்சாண் அதிகம் இருப்பார்கள். 'கண் அளக்காததா கை அளக்கும்' எனப் பெரியோர் சொல்வர்' என்று பதில் அளித்தார்.

ராயர், அன்று முதல் அரியநாதரைத் தமது அரண்மனைச் சேவகத்தில் அமர்த்தி, சிறப்பாக நடத்திவந்தார். அநேக மண்டலேசுவரர்களாலும் மன்னர்களாலும் வணங்கப்பெறும் சக்கரவர்த்தியாகிய கிருஷ்ணதேவராயரது கடைக்கணிப்பை நம் அரியநாதருக்கு அளித்தது, அவரது கணிதநூற் புல மையே யாகும்.

4. தளவாய் அரியநாதர்-II

அரியநாதர், சிலகாலம் இராயர் அரண்மனை உத்தியோகத்தி லிருந்து, படிப்படியாக உயர்ந்து வருகையில், இந்தியச் சிற்றரசர்களாலும் முகம்மதியர்களாலும் கலிங்கத்திலும் இராயச்சூரின் பக்கங்களிலும் கலகங்கள் உண்டாயின. அக்கலகங்களை யடக்க மகாராயர் சென்றார். அவருடன் அரியநாதருஞ் சென்றார். அங்கே போர் நடக்கையில், அரிய நாதர் காட்டிய போர்த் திறத்தையும் சூழ்ச்சித் திறத்தையும் கண்ட ராயர், அவரை மெச்சி, மந்திர சபையில் ஒரு ஸ்தானத் தையும், முதலி என்னும் இராணுவப் பெரும் பட்டத்தையும், பல்லக்கேறும் உரிமையையும் அளித்தார்.

அதன் பின், விஜயநகரத்தில் முதலியாருக்குத் திருமணம் நடந்தேறியது. அக்காலத்தில் அவர், பத்து நூறாயிரம் பொற் காசுகள் செலவழித்ததாகவும், தம் இனத்தார் நாற்பதினாயிர வருக்கு விருந்தளித்ததாகவும் கூறுவர்.

அக் காலத்தில், பாண்டி நாட்டை ஆண்டு வந்த சந்திரசேகர பாண்டியன் இறந்ததன்பின், அந்நாட்டை உரி மைப்படி ஆளவேண்டியவனான சுந்தர குமாரனும் காலகதி யடைந்ததனால், அரிய நாதரைத் துணைக்கொண்டு அந்நாட்டை ஆளும்படி, விசுவநாதருக்குக் கிருஷ்ணதேவராயர் பணித்தார். பணிக்கவும், விசுவநாதர் பாண்டிய நாட்டிற்கு அரசரானார்; நம் முதலியாரோ தளவாய் என்ற பட்டம் பெற்று, தாமேஅரசியல் முறை, போர் முறை முதலாய எல்லாச் செயல்களையும் மகா ராயர் விருப்பத்தின்படி கண்காணித்து வந்தார். மகாராயர், முதலியாருக்குப் போர்த்திறனும், மந்திரச் சூழ்ச்சியும், ஆளும் வன்மையும் அமைந்திருத்தலை உணர்ந்தே, படைத்தலைமையும் மந்திரத் தலைமையும் அவருக்கு நல்கினார்.

தளவாய் அரியநாத முதலியாரும், விசுவநாத நாயகரும் கூடி, பாண்டி மண்டலத்தைக் கைக்கொண்டு ஆளத்தொடங்கிய காலத்தில், குடிகள் பலவகையினரான போர்வீரர்களின் கொள்ளை கொலைகளால் துன்புற்று வருந்திக்கொண்டிருந்தனர். அவ்வாறு அல்லற் பட்டிருந்த நாட்டை, முதலியார் சீர்திருத்தத்தொடங்கி, அவ்வீரர்களைத் தண்டனை செய்தும் அச்சுறுத்தியும் அவர்களால் உண்டாகும் தீங்கை அறவே ஒழித்தனர். பின்னர், தமது ஆட்சியில் இருந்த சோழநாட்டில் காவிரியாற்றின் இரு கரையிலும் அடர்ந்திருந்த காடுகளை அழித்துத் திருத்தி, ஊர்களை உண்டாக்கினர். அவ்வாறே தாமிரவருணியின் இருகரைகளையும் செப்பனிட்டு, சோலை வைத்து அந்தணர் வீதிகளை ஏற்படுத்தினர்.

அப்பால், அவர் தம் நாட்டுக்குத் தொல்லையும் துன்பமும் உண்டாகாமல், நன்மையும் இன்பமும் அமைதியும் ஒழுங்கும் நீடிக்க, பாளையப்பட்டுக்களை ஆங்காங்கே நிறுவினர்; மதுரைநகரைச் சூழ்ந்த பெரிய கோட்டையில் எழுபத்திரண்டு கொத்தளங்களைக் கட்டி, அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாளையக்காரரைக் காவலாக நியமித்தார். அந்தப் பாளையக்காரர், தமக்கு நல்கப்பட்டிருந்த பாளையங்களில் வரி தண்டுதல், குற்ற விசாரணை செய்து தண்டித்தல், தம் தலைவராகிய மதுரை நாயகர் சேவகத்திற்கும் தம் கொத்தளக் காவலுக்கும் பாளையப் பராமரிப்புக்கும் வேண்டிய படைகளை அமைத்துக் கொள்ளுதல் முதலிய உரிமைகளைப் பெற்றிருந்தனர். அவர்கள், தங்கள் மொத்த வருமானத்தை மூன்று பகுதிக ளாக்கி, ஒரு பகுதியை நாயகருக்குக் கப்பமாகச் செலுத்தி, மற்றொரு பகுதியைப் படைகளின் பாதுகாப்புக்காக வழங்கி, மூன்றாம் பகுதியைத் தம் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ள நியமனம் பெற்றிருந்தனர். அரியநாதரால் ஏற்படுத்தப்பட்ட ஊர்காவல்முறை, இன்றும் தென்பாண்டி

நாட்டிலே பல ஊர்களில், போலீசார் அதிகாரத்தினும் திற மாகச் சிறந்து விளங்குகின்றது.

இவ்வண்ணம் அரியநாதர் சீரும் சிறப்புமாகப் பாண்டி நாட்டை ஆண்டுவரும் நாட்களில், ஒரு நாள், பாளையக்காரர் பலரும் பரிவாரங்களும் புடைசூழ, அரசவையில் அவர் விசுவ நாதருடன் அமர்ந்திருந்தார். அச்சமயத்தில் மறையவர் ஒரு வர், வாயிற்காப்போர் தடுத்ததையும் மீறி, அவைக்குட் புகுந்து, அரியநாதரை அணுகினர். அணுகவும், அரியநாதர் அவரை நோக்கி, 'அரசவைக்குள் இவ்வாறு காவலை மீறி வந்த நீங்கள் யார் ஐயா?' என்று கேட்டார்.

மறையவர்:—தாங்கள்தாமே தளவாய் அரியநாத முத லியார் என்பவர்?

அரியநாதர்:—ஆம், நான்தான்; என்னைத்தான் அரிய நாதன் என்று சொல்வார்கள்.

மறையவர்:—நமக்கு ஊர் காஞ்சீபுரம்; இரண்டு வேதம் வரும்; சாஸ்திர அப்பியாசமும் சிறிது உண்டு; வடக்கே காசிக் குப் போய், பண்டித பட்டம் பெற்று வந்தோம். எங்கள் பிதாவுக்குச் சோதிடம் நன்றாக வருமாம். சரஸ்வதி பூசைக் காகப் பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் கைப்பட எழுதிய ஓலை நறுக்கும், இந்த நறுக்கும் அகப்பட்டன; பார்க்க, வியப்பாக இருந்தது. இது தங்கள் அஸ்த லிகிதந்தானோ? சற்றுத் தயைசெய்து பாருங்கள்' என்று சொல்லி, இடுப்பிலிருந்து, பழைய ஓலை நறுக்கொன்றை எடுத்து நீட்டினர். அரியநாதர் வாங்கிப் பார்க்க, அது, நாற்பது வருடங்களுக்கு முன், தமது சிறு பிரா யத்தில், மெய்ப்பேடு என்னும் ஊரின் வெளியில், குறிசொன்ன வேதியருக்குத் தாம் எழுதிக்கொடுத்த உறுதிச்சீட்டெனக் கண்டார். உடனே அவர் எழுந்து மறையவரை வணங்கி, தம் அருகில் ஓர் ஆசனமளித்து, அதில் வீற்றிருக்கச் செய்து,

விசுவநாதரும் சபையினரும் வியப்படையும்படி, முன் நடந்த வரலாற்றை எடுத்துக்கூறினர். அப்பால் அம்மறையவரை நோக்கி 'சுவாமி, இதுநான் எழுதிக்கொடுத்த ஓலைதான். நான் என்வாக்கை நிறைவேற்றச் சித்தமாக விருக்கிறேன்' என்றார்.

மறையவர்:—தங்கள் வாய்மையே வாய்மை. தாங்களோ, என் தந்தையார் சொன்னவாறு, ராஜாதிராஜராய் விளங்குகின்றீர்கள். நானோ ஏழைப் புரோகிதன். என் ஊராகிய காஞ்சிபுரத்தில் ஒரு வீடும், பிழைப்பிற்குத் தக்கவாறு வயல், தோட்டம், துரவு, மாடு, கன்று ஆகியவைகளும் கொடுத்தால் போதும். வேறென்ன வேண்டியிருக்கிறது?' என்றார். அதைக் கேட்ட அவையினர், மறையவரின் மனநிறைவிற்கு வியப்படைந்தனர். அரியநாதர் அவ்வேதியர் விரும்பியதினும் பன்மடங்கு மிகுதியாக உதவி, அவரை அன்றுமுதல் தம் குலகுருவாகப் பாவித்து வந்தார்.

அரியநாதரைத் துணைக்கொண்டு பாண்டி மண்டலத்தை ஆண்டுவந்த விசுவநாத நாயகர், 1563-ஆில் தம் குமாரரான குமாரகிருஷ்ணப்ப நாயகருக்கு முடிசூட்டி, தமது அரசாட்சியை அளித்தனர். பின்னர், சில மாதங்களுக்குள் அவர் தேக வியோகமானார். அதன்பின் 1565-ஆு ஜனுவரியில், கிருஷ்ணநதியின் வடகரையிலிருந்த மகம்மதியர் பெரும் படையுடன் வந்து, விஜயநகர ஸம்ஸ்தான எல்லையில் அணிவகுத்து நின்றனர். அவ்விடத்தில் பெரும் போர் நிகழ்ந்தது. அந்நாளில் கிருஷ்ணதேவராயரின் பதவியில் இருந்தவர் சதாசிவராயர். அப் போரில் கிருஷ்ணதேவராயரின் மருகராகிய ராமராயர் கொல்லப்பட்டார். போர் நிகழுங் காலத்தில் ராமராயர், "இப் போரில் நானவது, அந்த நிஜாம்ஷாவாவது இன்று இங்கே மடிவது திண்ணம். நானே மாளும்படி நேர்ந்தால், இப்பொழுதே உங்கள் முன்னிலையில் சொல்லுகிறேன், கேளுங்கள் : சதாசிவ மகாராயரால் பல இன்னல்கள் நேர்ந்

தன. என் தம்பியரோ, எனக்கே துரோகம் செய்தவர். நான் இறந்த பின் ஒருவரோ டொருவர் போர்புரிந்து நாட்டிற்குக் கேடு விளைப்பர். அவர்களுக்கு, இத்தருணத்தில் வேண்டிய வல்லமை இல்லை. அரியநாதர்தாம் இந்நாட்டைக் காவல் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர். அம்மான் கிருஷ்ண தேவ மகாராயர் காலம்முதல் அரியநாதரைப் போல் இந்நாட்டினிடத்து அபிமானமுள்ளவர் எவரும் இலர். அதனால் எனக்குப் பின் இந்நாட்டை, அவரே மகாராயராக முடி புனைந்து, பாதுகாப்பாராக' என்றார்.

ராமராயர் போர்க்களத்தில் மடிந்த பிறகு, அவர் கூறியவாறே அரியநாதர் முடிபுனைந்து மகாராயராக விஜய நகரத்தை ஆளுதற்கு, ராயர்மரபினர் உடன்பட வில்லை. அதனால் அரியநாதர் முடிபுனைந்து கொள்ளவில்லை; திறமையற்ற திருமலைராயர் என்பவர் மன்னராயினர். அவர் ஆட்சியில் நாட்டின் நிலைமையைக் கண்டு, அரியநாதர் அந்நாட்டை மூன்று பகுதிகளாக வகுத்து, (1) பெனுகோண்டாவைத் தலைநகராகக்கொண்டு, சிம்மாசனாதிபதியாயிருந்து மகாராயர் என்னும் பட்டத்துடன் வடவெல்லையை ஒருவர் காக்க வேண்டும் என்றும்; (2) சீரங்கபட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு மேற்குமலைத்தொடருக்கு அப்பாலுள்ள பிரதேசங்களை யெல்லாம் ஒருவர் ஆளவேண்டும் என்றும்; (3) சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு சேர சோழ பாண்டிய தொண்டைமண்டலங்களை மற்றொருவர் ஆள வேண்டுமென்றும் ஏற்பாடு செய்ததோடு, பின்னிருவரும் மகாராயருக்கு அடங்கிப் பிரதிநிதிகளாக இருந்து வரவேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார். முதலியார் தளவாயாயிருந்து அந்த மூன்று நாடுகளையும் பாதுகாத்து வந்தார்.

முதலியார் 1567-ஆம் ஆண்டுக்குப் பின் மதுரைக்குத் திரும்பிச் சென்று, தொண்டைமண்டலத்தி லிருந்த தம் இனத்தா

ரைப் பாண்டி மண்டலத்திற்கு வரவழைத்து, அவர்களுக்குச் சோழவந்தான் என்னுமிடத்தில் முந்நூறு வீடுகள் கட்டிக் கொடுத்து, அவர்களை அங்குக் குடியிருக்கச் செய்தார். மேலும் அவர்களுக்குத் துணைபுரிய உழவர் கருமார் முதலிய தொழிலாளர்களையும் குடியேற்றினர். மதுரைச் சோமசுந்தரக்கடவுள் திருக்கோயிலில் ஆயிரக்கால் மண்டபமும், அறுபத்து மூவர் மண்டபமும் கட்டிவைத்தார். மீனாட்சி யம்மைக்கு விலையுயர்ந்த பல அருங்கலன்கள் செய்து சாத்தினர்; பின்னும் அரிய தொண்டுகள் பல ஆற்றினர்.

கிருஷ்ணதேவ ராயர் உத்தரவின்படி மதுரையிலிருந்து அரசுபுரிந்த விசுவநாதநாயகர் 1563-வரை தம் குமாரரான குமாரகிருஷ்ணப்ப நாயகருக்கு முடிசூட்டி அரசாளுவித்தாரன்றோ? அந்தக் குமாரகிருஷ்ணப்ப நாயகர் 1573-வரை வரையில் அரசாண்டு, விண்ணுல கெய்தினர். எய்தவும், தளவாய் முதலியார், குமார கிருஷ்ணப்பர் புதல்வ ராகிய வீரப்ப நாயகருக்கு 1573-வரையில் முடிசூட்டி, அரசாளுவித்தார். அவர் 1595-வரையில் இவ்வுலகை நீத்தனர். பின்பு அரியநாதர் வீரப்பநாயகர் மூத்த மகனாகிய வீரகிருஷ்ணப்ப நாயகருக்கு (இலிங்கைய நாயகருக்கு) முடிசூட்டி, அரசு புரிவித்தார். இவ்வாறு மண்ணுலகை நெடுங்காலம் வாழ்வித்து வந்த முதலியார், 1600 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் விண்ணுலகை வாழ்விக்கச் சென்றார்.

அரியநாதர், அரசியல் நடாத்தும் திறமை, ராஜ விசுவாசம், தெய்வ பக்தி, சொற்றவறுமை, போர்வன்மை, மந்திரச் சூழ்ச்சி, சுயநலங் கருதாமை, சுற்றந் தழுவுதல் என்னும் இத்தகைய நற்குணங்களுக்கு உறைவிடமாக இருந்தார். அதனாலேயே தாற்றுக்கோலுக்கு உரிய அவர், செங்கோலேந்தும் அரசரை யமைக்கும் அருந்திறல்வீரராக விருந்து, எழுபத்தோர்யாண்டு உயர்பதவியில் விளங்கிப் பெரும்புகழ்பெற்றார்.

5. உலக அறிவு

உலகத்தில் உள்ள உயிரினங்கள் எல்லாவற்றுள்ளும் மனிதன் சிறந்து விளங்குதற்கு, அவன் பெற்றுள்ள அறிவே முக்கிய காரணம். சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகளை மனிதன் அடக்கியாளுதலும் தன் அறிவின் திறத்தினலேயே யாகும். அறிவுடையவர் வறியவரா யிருப்பினும், எல்லாப் பொருள்களும் எய்தப்பெற்று, பலரும் புகழப் பெருவாழ்வு எய்துவர். அறிவில்லாதவர் எத்துணைப் பொருள்களைப் பெற்றிருப்பினும், அவற்றை யெல்லாம் இழந்து, வறியர்போல் வருந்துவர். இதனை,

‘ அறிவுடையார் எல்லாம் உடையர்: அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் ’

என்னும் போய்யாமோழியினல் நன்கறியலாம்.

அறிவு பலதிறப்பட்டனவாகும். அவற்றை யெல்லாம் ஒருவன் அடைய இயலாது. ஆயினும், ஒவ்வொருவரும் உலக அறிவைப் பெற்றிருத்தல் முக்கியமானதாகும். உலக அறிவாவது, உயர்ந்தோரால் கூறப்படும் வழக்குக்களை அறிந்து ஒழுகுதலாம். பல்வேறு நாடுகளில் வாழும் மாந்தர்களின் இயல்பு, அவர்கள் பழக்க வழக்கங்கள், அரசியல், மதம் முதலானவற்றை அறிதலும் உலகஅறிவே யாகும். அத்தகைய அறிவு இல்லாதவர், பல நூல்களைக் கற்றவ ராயினும், அறிவுடையவ ராகார்.

‘ உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் ’

என்று தேய்வப் புலவர் அருளிச்செய்துள்ளார். ‘ஞான தத்துவம் உணர்ந் தாலும் உலகத்தினில் நடக்கைதனை அறியவேண்டும்’ என்பதும் இதனைப் பின்பற்றி எழுந்ததேயாம். இவற்றால்,

உலகஅறிவை உணரவேண்டுவது ஆவசியகம் என்பது தெளிவாகும். ஆதலின், அதனைக் குறித்து இங்குச் சிறிது கூறுவாம்:

நல்ல நூல்களைக் கற்றலினாலும், பிறர் செய்வனவற்றை நேரிற் காண்டலினாலும், வாழ்க்கைப்பயனாலும் ஒருவருக்கு அறிவு உண்டாதல் கூடும். ஆயினும், தருக்கம் இலக்கணம் போன்ற சாஸ்திரங்களில் மாத்திரம் ஞானம் பெற்றவரைஉலக அறிவு படைத்தவராக நாம் கருதுவதில்லை. பல்வேறுநாட்டினரின் வழக்காறு, அரசியல்முறை முதலானவற்றைக் கூறும் நூல்களை நன்கு கற்றறிந்தவரே உலகஅறிவு பெற்றவராவர். அன்றியும், நூல்களைக் கற்றலினால் உண்டாகும் அறிவினும், அனுபவத்தினால் உண்டாகும் அறிவே சிறந்ததாகக் கொள்ளப்படும். 'பட்டறி கெட்டறி, பத்தெட்டு இறுத்தறி' என்பது பழமொழி.

மாந்தருட் பெரும்பாலோர் ஒவ்வொரு செயலில் தேர்ந்த அறிவுடையரா யிருத்தல் கூடும்; ஆயினும், அவர் அவ்வளவிலேயே நிறைந்த அறிவு அடைந்தவ ராகமாட்டார். உலகஅறிவு உண்டாவதற்குத் தேச சஞ்சாரமும் இன்றியமையாததாகும். ஆகவே, கல்வியறிவு உடையவராய்த் தேச சஞ்சாரம் செய்தவரே நிறைந்த அறிவு பெற்றவராவர். கல்வியறிவு இல்லாதவரது தேச சஞ்சாரமும், தேச சஞ்சாரம் செய்யாதவரது கல்வியறிவும் மெய்யுணர்வைப் பயத்தல் அரிது. உலக அறிவு சிறிதும் இன்றி, ஏட்டுப் படிப்பு ஒன்று மட்டும் உடையவர், கற்றறிமூட ராகக் கருதப்படுவர்.

மாந்தர், கால தேசங்களின் வேறுபாடுகளை யறிந்து, அவற்றிற்கேற்ப ஒழுகுதல் வேண்டும். காலத்தின் இயல்பினாலும், தேசத்தின் இயல்பினாலும் பல செயல்கள் மாறிக்கொண்டே வருதல் இயற்கை. ஒரு காலத்தில், சிறந்த ஒழுக்கங்களாகக் கொள்ளப்பட்டவை, மற்றொருகாலத்தில் இழிந்த ஒழுக்கங்களாகத் தோன்றுதலும், ஒரு காலத்திலேயே ஒரு

நாட்டவரால் மேலானவை எனக் கருதப்பட்டவை, மற்றொரு நாட்டவரால் தாழ்வானவை எனக் கருதப்படுதலும் இயல்பே. 'உலகம் பலவிதம்' எனவும், 'தேசந்தோறும் பாஷைகள் வேறு' எனவும் வழங்கும் பழமொழிகளும் இக் கருத்தை யறிவிப்பனவேயாம்.

இக்காலத்தில், பல நாட்டினர்களும் ஒருங்குகூடி வாழ வேண்டிய ஆகவசியம் ஏற்பட்டுளது. ஒரு நாட்டில் உண்டாகும் பொருள்கள் வேறு பல நாட்டினருக்கு இன்றியமையாதனவா யிருத்தலின், கூட்டுறவு ஏற்படுகின்றது. இவ்வாறிருத்தலின், பிறநாட்டினரின் இயல்பு, வழக்கம் முதலானவற்றை நாம் அறிய வேண்டுவது ஆவசியகமே. அன்றியும், நம்முடைய சீர்திருத்தத்திற்கும் இவ்வறிவு காரணமாகும். பிறநாட்டினரின் நாகரிகத் தன்மையோடு நமது நாகரிகத் தன்மையையும், பிறர் கைத்தொழிலோடு நமது கைத்தொழிலையும் ஒப்பிட்டு நோக்கினலன்றோ, நமது நிலைமை தெளிவாக விளங்கும். அப்படி உணர்ந்தால்மட்டுமே நாம் உயர்நிலையை அடைய முயல்வோம்; நம் குறைகளை நீக்க முற்படுவோம். அத்தகைய அறிவு உண்டாகாவிடின், கிணற்றுத்தவளையைப் போல், நாம் இருக்கும் இடத்தையும் நமது வழக்கத்தையுமே புகழ்ந்து உயர்த்திக் கூறிக்கொண்டு, வீண்பொழுது போக்குபவ ராவோம்.

பல நாட்டினரும் பல ஜாதியினரும் பல சமயத்தினரும் பல மொழியினரும் ஒருங்குகூடி வாழ்கையில், கருத்து வேறுபாடுகள் உண்டாதல் இயல்பே. அவற்றை யெல்லாம் நடுநிலைமையில் நின்று சீர்தூக்கிப்பார்த்து நல்லவற்றைக் கைக்கொள்ள வேண்டும். இத்திறத்தில் சிறந்த அறிவாளிகளின் கொள்கைகளையும் நாம் அறியவேண்டும். இக்காலத்தில் அரசியல் முறைகளில் குடிகள் அனைவரும் ஈடுபடவேண்டியவர்களா யிருத்தலின், மேற் கூறிய உலகஅறிவு ஒவ்வொருவருக்

கும் இன்றியமையாததாகும். குடிகள் அவ்வறிவைப் பெற்ருலன்றி, நாட்டின் அரசியல் முறைகளில் அவர்கள் நன்கு ஈடுபடுதல் இயலாது.

ஆங்கிலேயர் அடைந்துள்ள செல்வத்திற்கும் சிறப்பிற்கும் முக்கியகாரணம், அவர்களுக்குள்ள உலகஅறிவேயாகும். இங்கிலாந்துமுதலான நாடுகளில் மிக்க ஏழைகளாயிருப்பவரும் அரசியல் முறைகளையும் பிறநாட்டுச்செய்திகளையும் ஒருவாறேனும் அறிந்திருப்பர். மேல்நாடுகளில் மாணவர்கள், கலாசாலைக்கல்வி முற்றுப்பெற்று நீங்குகையில், ஆசிரியர்கள் அவர்களை நோக்கி, 'நீங்கள் இதுகாறும் சில புத்தகங்களை உருப்போட்டுப் படித்திருக்கிறீர்களேயன்றி, உண்மையான உலக அறிவை அடையவில்லை; நீங்கள் இன்னும் உலகத்தைப் பார்க்கவில்லை; இந்தக் கலாசாலையே உங்களுக்குப் பெரிய உலகமா யிருந்தது; ஆதலின், நீங்கள் தேசசஞ்சாரம் செய்து அனுபவஞானம் அடையவேண்டும்' என்று போதனை செய்கின்ருர்கள். அவ்வாறே மாணவரும் பல நாடுகளுக்குச் சென்று, ஆங்காங்கு வாழும் மாந்தர்களோடு பழகி, அறிவைப் பெருக்கிக்கொள்கின்றனர். தேசசஞ்சாரம் செய்து வந்த மாணவனே உண்மையான அறிவைப் பெற்றவன் என்று அந்நாட்டவர் கருதுகின்றனர். நம் நாட்டிலும், 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது' என்னும் பழமொழி வழங்கினும், மாணவர் பல்வேறிடங்களுக்குச் சென்று அறிவைப் பெருக்கிக்கொள்ளுதல் இல்லை.

முற்காலத்தே, தமிழ் மக்கள் மணம் புரிந்துகொண்டதன் பின்னும் பிறநாடுகளுக்குச் சென்று மூன்று யாண்டுகளுக்கு மேற்படாமலிருந்து, பலவகையான கலைகளிலும் பயின்று வருதல் வழக்காரு யிருந்தது. அதனுல், அக்காலத்தில் தமிழ்நாடு பலவகையிலும் மேம்பாடு அடைந்து விளங்கிற்று. இனி, நம் நாட்டு மாணவர்கள் பிறநாடுகளிற் சென்று பலவகையான கலைகளையும் கற்றுத் தேர்ந்து, உலகஅறிவு பெற்று, நாட்டை உயர்

நிலைப்படுத்துவார்களாக. மாணவர்கள் அனைவரும், பிறநாடுகளுக்குச் சென்றுவருதல் இயலாதாயினும், நமது தேசத்திலாவது சஞ்சாரம் செய்து வருதல் நலமாகும். இவ்விஷயத்தில் நம் நாட்டுப் பெருமக்கள் தக்க முயற்சியும் ஊக்கமும் மேற்கொள்ளுதல் ஆவசியகம்.

6. பாண்டவர் தூதன்-II

விதுரன்மனையில் கண்வளர்ந்தருளிய வாசுதேவர், சூரியன் குணதிசைக் கடல்வாய்த் தோன்றுதலும், துயிலுணர்ந்தெழுந்து, கடன்களை முடித்து, வேத்தவை செல்லப் புறப்பட்டார். அப்பொழுது படைகள் புடை சூழ்ந்தன; சாத்தகி முதலிய தம்பியர் சார்ந்தனர்; அரசர் தொழுதனர்; அந்தணர் வாழ்த்தினர்.

இவ்வாறு வாசுதேவர் மன்னவை நோக்கிச் செல்ல, துரியோதனன் அரியணையின்கண் வீற்றிருந்து, அங்குக் கூடியிருந்த காவலரைநோக்கி, 'கிருஷ்ணன் நம் அவைக்குட் போதுகையில் எவரும் அவனை வணங்கலாகாது; எழவும் கூடாது. என்னுணையை மீறி அவனை வணங்குபவரது நாட்டைக் கைப்பற்றிக் கொள்வேன்' என்று வற்புறுத்திக் கூறினுன். அவ்வளவில், வாசுதேவர் அம்மண்டபத்தைக் குறுகி உட்புகுந்தார். அவர் வரவைக் கண்டதும், பீஷ்மர், துரோணர், அசுவத்தாமன், விதுரன் முதலாயினேரும் அங்குக் குழுமியிருந்த அவனிபர் அனைவரும் எழுந்து இறைஞ்சி நின்றனர்; கன்னன் தலை கவிழ்ந்திருந்தான்; சகுனி மனங் கொதித்து அழன்ருன்; துரியோதனன் அரியணையினின்றும் எழாது, அமர்ந்தவாறே யிருந்தான். பின்னர், அருகில் இட்டிருந்த ஆதனத்தில் வாசுதேவர் சிறக்க அமர்ந்தார். அப்பொழுது துரியோதனன் அவரை நோக்கி, யாம், தும்

வரவை யறிந்து, நமக்காகப் பலவகை உண்டியும் அமைத்து வைத்து, எதிர்நோக்கியிருந்தேம்; நீவிர், எம் இல்லத்தில் அமுதருந்த வாராமல், விதுரன் வீட்டில் விருந்துண்டதன்காரணம் யாது?' என வினவினன். அதற்கு வாசுதேவர், நின் இல்லம் என்றும், என் இல்லம் என்றும் வேறுபாடு இல்லையாயினும், பாண்டவர்களுக்குத் தூதனுகி வந்த யான், நின் மனையில் அமுதருந்தின், பின்னர், நின்னேடு செய்தியை அறுத்துப் பேசுதல் அறமாகாதன்றோ?

அரவம் மல்கிய பதாகை யாய், மதி
அமைச்ச ராய் அர சழிப்பினும்,
குரவர் நல்லுரை மறுக்கி னும், பிறர்
புரிந்த நன்றியது கோல்லினும்,
ஒருவர் வாழ்மனையில் உண்டு பின்னுமவ
ருடன் அழன்றுபோர உன்னினும்,
இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்
இவர்க ளே நரகில் எய்துவார்.

அன்றியும், விதுரன் எதிர்வந்து தன் இல்லத்திற்கு வரவேற்ருனதலின், அங்கே விருந்துண்டேம்' என மறுமொழி கூறினர். 'ஆயின், நீவிர் தூது வந்ததன் காரணம் யாது?' என்று துரியோதனன் வினவ, வாசுதேவர் செப்புவார்:

'குருகுல வேந்தே, நின் துணைவராகிய பாண்டவர், நீ குறித்த யாண்டுகள் கழித்து மீண்டுள்ளனர். நீ அவர்களை அழைத்து, அவர்களது அரசுரிமையை யீந்து, அவர்களோடு அளவளாவி வாழ்வாயாயின், உலகத்தார் நினது வாய்மையையும் அன்பினையும் கொண்டாடிப் புகழ்வர். ஆதலால், அவர்கள் பாகத்தை அன்புடன் நல்குவாய்' என்று இன்சொல் கூறி வேண்டினர். அதனைக் கேட்ட அரவக்கொடியோன், அரவம்போல் சீறி, 'நன்று, நன்று! பாண்டவர்,

சூதாட்டத்தில் தமது நாட்டை யிழந்ததை அனைவரும் அறிவர். இப்போது நீவிர் நம் விரகினுல் அதனை என்பால் பெறுதற்கு வந்துளீர்; யான் அவர்களினும் எளியேன் போலும்! சூதாட்டத்தில் அவரை வென்று கைப்பற்றிய நாட்டை, யான் மீண்டும் அவர்களுக்குக் கொடேன்; அவர்கள் பண்டுபோல் இனியும் பழுவத்தில் பயின்று உறைவதே நலமாகும். இதனுல், நீவிர் என்னை வெறுத்துக் கூறினும் சரி, என் வாய்மை தவறியது என்று எவரும் இகழ்ந்துரைப்பினும் சரி, பஞ்சவர் என்னோடு வெஞ்சமர் விளைப்பினும் சரி, யான், ஈ இருக்கத் தக்க இடமும் ஈய உடம்படேன்' என்று இயம்பினன். 'ஆயின், அவர் நாட்டில் பாதியாவது கொடு' என்று கண்ணபிரான் வேண்ட, குருபதி அதனை மறுத்தான். பின்னர், அவர், 'ஐந்து ஊர்களையேனும் வழங்கு' என்று வேண்டினர். அதற்குத் துரியோதனன், 'காட்டில் வதிந்து கரந்து திரிந்த பாண்டவர், யான் அளிப்பது ஒரு வீடேயாயினும் மறுப்பரோ! அதனையும் உவப்புடன் ஏற்பர். யான் அவர்களுக்குச் சிறு குடிலும் ஈயேன்' என்று இயம்பினன்.

அப்பொழுது வாசுதேவர், துரியோதனனை நோக்கி, 'குருகுலத்துதித்த கொற்றவனே, நீ கூறுவது நின் குலத்தோர் பெருமைக்கு அடுப்பதன்று; தமக்கே உரிமையான இவ்வரசு முழுவதையும் தம் சிற்றவ்வையின் சிறுவனுக்கு உவப்புடன் உதவிய பெருந்தகையராகிய பீஷ்மர் இங்கே இருக்கின்றுர்! அவருடைய ஒப்புயர்வில்லாப் பெருங் குணத்தை எண்ணிப் பார். இத்தகையராகிய பெருமக்கள் தோன்றிய உயர் குடியிற் பிறந்த நீ, நாடு முழுதும் தமக்கு உரிமையாக வுடைய பாண்டவர்களுக்கு ஐந்து வீடும் கொடுக்க மனங்கொள்ளாதது வியப்பினும் வியப்பே! ஒரு குலத்தில் இருவர் தோன்றின், அவ்விருவரும் தாயபாகம் அடைந்து வாழ்தல் உலக வழக்கு.

குருகுலத்துதித்த நுங்கள் இயற்கை, மிகவும் நன்றாயுளது' என்று பலபடப் பகர்ந்தார்.

அம் மொழிகளைக் கேட்ட அரவக்கொடியோன் அகம் புழுங்கி, 'பாண்டவர் எம் குலத்தவர் என்று நீவிர் கூறிய மொழியே எனக்கு வியப்பைத் தருகின்றது. அன்றியும், வீரராயிருப்பவரே நாட்டையாளுதல் இயற்கை' என்று முனிவுடன் மொழிந்தான். வாசுதேவர், 'நீ பாண்டவர்களுடன் போர் புரிய உடன்படுகின்றனையோ? அங்ஙனமாயின், கையறைந்து தா' என்று அறைந்தார். அம் மாற்றம் கேட்டதும், துரியோதனன் சீற்றங் கொண்டான். 'ஆயர் மனையில் அளையும் பாலும் களவுசெய் துண்ட மாயனே, நீ யாது கருதி இவ்வாறு இயம்பினை? நின் குடிப் பிறப்பை அறிந்தாயல்லை போலும்! யான், போர்புரிதற்குப் பின்னிடைவேன் என்று எண்ணினையோ! யானோ போருக்கு அஞ்சுவேன்! நீ கூறியது மிகவும் அழகிது!' என்று கடுகடுத்துக் கூறினான். அவற்றை யெல்லாங் கேட்ட வாசுதேவர், 'இனி, பாண்டவர் எண்ணம் நிறைவேறும்' என்று தம்முள் உறுதி கொண்டு, அங்குநின்று நீங்கி, விதுரன் மனையை யடைந்தார்.

அவ்வமயத்தில் குருபதி, கண் சிவக்கவும், இதழ் துடிக்கவும், முகம் வியர்க்கவும் நெடிது உயிர்த்து, அவையிலுள்ளோர் திடுக்கிட்டு அஞ்சி அயரும்படி முனிவு கொண்டு, 'இவ் விதுரன் இன்றளவும் என் அன்னத்தை யுண்டு வந்தும், இன்று, என் பகைவனுக்குத் தன் வீட்டில் உணவு இட்டது யாது கருதி? இவன், தனது இழிபிறப்பிற்குத் தக்கவாறே இழிகுணங்களை யுடையவனா யிருக்கின்றான்?' என்று பலவாறு இகழ்ந்து கூறினான்.

அந்தகன் புதல்வன் அறைந்த வெஞ்சொற்களைக் கேட்ட விதுரன், உள்ளம் புழுங்கி, சினத்தாற் பொங்கி, 'என்னை வசை கூறிய நின் வாயினின்றும் குருதி வடிய வாளாற் குத்தி,

நின் சிரத்தைத் துணிப்பேன்; "குருகுலத்திற் றோன்றிய ஒரு வன், தன் மைந்தனைத் தடிந்தான்" என்று வானவர் நகைப்பரே என்று அஞ்சுகின்றேன். இன்றேல், இன்னும் நீ உயிருடன் இருப்பையோ? அறமும், ஆண்மையும் வாய்ந்த பாண்டவர்களுக்கு யான் உதவி செய்தால், அதனால் எனக்கு நேரும் பழி யாது? பார்த்திபர் பழிப்பரோ? இனி யான், உனக்காக அமர் புரியேன்' என்று இயம்பி, தனது வில்லை வெட்டி வீழ்த்தி விட்டு, அங்குநின்றும் அகன்று, தன் இல்லம் அடைந்தான்.

விதுரன் வில்லை வெட்டியதைக் கண்ட வேந்தர், 'ஆ! இனி, விசயனோடு எதிர்த்துப் பொருதற்குத் தக்க வில்வீரர் எவருளர்!' என்று மனங் கவன்றனர். அப்போது பீஷ்மர் துரியோதனனை நோக்கி, 'விதுரனை வெகுண்டுரைத்து, வீணே கேடு சூழ்ந்தனையே! இனி, பாண்டவர்களை எங்ஙனம் வெல்வாய்?' என்று வெறுத்துரைத்தார். அவன், அவரை நோக்கி, 'விதுரன் ஒருவன்தான் வில்லாளியோ! தாமும் துரோணரும் அசுவத்தாமனும் இருக்கையில், எனக்கு என்ன குறை? கன்னனுடைய வில்லொன்றே சாலும். விதுரன் விலகியதைக் கருதி, யான் வருந்தினேனில்லை' என்று புகன்றான். அவ்வளவில், கன்னனும் தன் விற்றிறத்தை வியந்து கூறினான். பின்னர், துரியோதனன் அவையோருக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

வாசுதேவர் விதுரனை நோக்கி, 'நீ, நினது வில்லை வெட்டி வீழ்த்தியதற்குக் காரணம் யாது?' என்று வினவ, விதுரன், 'தேவரீர் எழுந்தருளியும், துரியன் அறநெறி யோராது கொடுஞ் சொல் கூறினனன்றோ? அன்றியும், அவன் என்னை இழித்துக் கூறிய புன்மொழிகள் பொறுத்தற்கரியனவா யிருந்தமையின், யான் அவ்வாறு இழைத்தேன்.

ஆவது கருதா னாகில் அமைச்சர் சொல் கேளா னாகில்
வீவது குறியா னாகில் விளைவதும் உணரா னாகில்
நாவது காவா னாகில் அவனுக்கா நடந்து போரில்
சாவது பழுதென் றன்றோ சகத்துளோர் சாற்று கின்றார்.

செல்வம்வந் துற்ற காலை
தெய்வமும் சிறிது பேணார்
சொல்வன அறிந்து சொல்லார்
சுற்றமும் துணையும் நோக்கார்
வெல்வதே நினைப்ப தல்லால்
வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் ஓரார்
மண்ணின்மேல் வாழும் மாந்தர்'

என்று தெரிவித்தான். பாண்டவதூதர் அவற்றைக் கேட்டு, 'நல்லது, கௌரவருக்கும் பாண்டவருக்கும் சமர் நிகழ்கை யில், நீ கௌரவர் பக்கலில் சாராதிருப்பின், நின் அன்புடைப் புதல்வராகிய பாண்டவரே வெற்றி பெறுவர்; அதற்கு எட்டுணையும் ஐயமின்று. அரசன் இயம்பிய புன் மொழிகளை மனங்கொள்ளாது விடுதி' என்று மனத்துயர் மாற்றினார். விதுரனும் அவ்வுரையை மேற்கொண்டு, சீற்றம் தணிந்தான். அவ்வளவில், வாசுதேவர், குந்திதேவியின் கோயிலை நாடிச் சென்றார்.

வாசுதேவர் வரவைக் கண்ட குந்திதேவி, தன் குறை களை யெல்லாஞ் சொல்லி யழுது, பின்னர் தெளிந்து, அவர்க் குச் சிறந்த ஆதனம் நல்கி, உபசாரம் சொல்லி, தானும் ஓராசனத் தமர்ந்து, அத்திநகர்க்கு வந்த செய்தியை அறிய வினவினாள். பாண்டவ தூதர், தாம் போந்ததன் காரணத்தைக் கூறி, துரியோதனன் சந்துக்கு உடம்பட வில்லை என்றும், அதனால் விரைவில் பெரும்போர் நிகழும்

என்றும் தெரிவித்தார். போர்புரிய நேரும் என்று புகன்றதைக் கேட்ட குந்திதேவி, போரில் யாருக்கு வெற்றியுண்டாகுமோ என ஐயுற்று, மனக்கவலையால் மாழ்கினள். மாயவர், தம் அத்தையைத் தெளிவித்து, அவள்பால் சிலவற்றைக் கூறுவார் :

'நீவிர், இளமையிற் பெற்ற புதல்வனைப் பேழையுள் வைத்து, ஆற்றில் விட்டுவிட்டமையான், அம் மகவைத் திருதராஷ்டிரன் தேர்ப்பாகன் அவ் யாற்றிலிருந்து எடுத்து வளர்த்துவந்தான் ; அம்மகவே கன்னன். அவனது வலியும் திறலும் அறிவும் கண்டு மெச்சி, அவனைத் துரியோதனன் அங்கர்கோன் ஆக்கினன். கன்னன், யுதிஷ்டிரர் முதலியோரைத் தன் பின்னவர் என்று அறியான். ஆதலின், அவனுக்கு இவ்வுறவை யறிவித்து, பாண்டவர்களோடுகூடி, அரசுரிமை பெற்று வாழுமாறு அவனை வேண்டுதிர். அவன் அதற்கு இணங்கானயின், பார்த்தன்மீது பகைகொண்டுள்ள பாம்புக் கணைக்கு அப்பார்த்தன் ஒருமுறை தப்பினனயின், அதனை மறுமுறை தொடுக்காவாறு வரம் பெற்று வருதிர். நீர் இது செய்வீரேல், பாண்டவர் வெற்றி பெறுதல் உறுதி' என அறிவித்தார்.

மருகன் வாய்மையைக் கேட்ட குந்திதேவி மனமயங்கிச் சோர்ந்து, பின்னர் தெளிவடைந்து, 'இவ் வரலாற்றை முன்னரே எனக்கு அறிவித்திருந்தால், கன்னனைக் கௌரவருடன் சேரவிடமாட்டேன்; இன்று யான் என் செய்வேன்! அரவக்கணையை விலக்குவேனயின், இரவிசிறுவன் இறப்பானே ; அதனைத் தடுத்திலேனேல், வாசவன் மைந்தன் மாய்வானே. அந்தோ, என் நிலைமை, "இருதலைக் கொள்ளி எறும்பு" போல் ஆயிற்றே! நீ அறிந்திருந்தும் இப்படிக் கெடுத்தனையே' என்று துயருற்றுள். மாயவர், அத்தையைத் தேற்றி, நீர் உரைப்பவை உண்மையே; ஆயினும், பாண்டவர் ஐவருள்,

ஒருவர் மாயின், ஏனையோர் உயிர்வாழ்ந்திரார். ஆகலின், மைந்தர் ஐவரும் மாய்தல் அழகிதோ! தனிமகன் ஒருவனே சாதல் தக்கதோ? ஏற்றது இஃது என்று நீரே ஆராய்ந்து தெளிதிர்' என்றார். கண்ணபிரான் சூழ்ச்சியால் கருத்தழிந்த குந்திதேவி, கன்னன்பால் செல்ல உடம்பட்டாள். பின்னர், பாண்டவ சகாயர் அங்குநின்றும் மீண்டு, விதுரன் மனையை யடைந்தார்.

இங்கு இவ்வாறாக, துரியோதனன், தன் தாதையையும் துணைவரையும் சகுனியையும் அமைச்சரையும்உடன்கொண்டு, இரவில் சூழ்ச்சிசெய்வானாயினன். அப்பொழுது திருதராஷ்டிரன், 'வரிப்புலி வலையி லகப்படின், வேடர் அதனை விடுவரோ? அவ்வாறே இங்கு வந்த மாயக்கள்வனைப் பற்றி, இவ்விரவிலேயே வதைசெய்வது தக்கதாகும்' என்றான். அக் கொடுஞ்சொற் கேட்ட விகர்ணன் புன்முறுவல் புரிந்து, தாதையை நோக்கி, 'ஐய, இந் நீதியை நீர் யாங்குக் கற்றனிர்? இதுகாறும், தம்பால் வந்த தூதுவரைச் சதிசெய்த வேந்தர் எவரும் இலர்.

மூத்தவர் இளையோர் வேத முனிவரர் பிணியின் மிக்கோர்
தோத்திரம் மொழிவோர் மாதர் தூதர் என் றிவரைக் கொல்லின்
பார்த்திவர் தமக்கு வேறு பாவமற் றிதனி னில்லை
பூத்தெரி தொடையாய் பின்னும் நரகினும் புகுவர் அன்றே!

அன்றியும், பகைவராயினும் தம்பால் வந்தவிடத்து, அவரைக் கோறல் கொடுமையேயாகும்; அஃது ஆண்மையும் அன்று. அதுபோகட்டும். நீவிர் வளைத்துப் பற்றின், அவர் எளிதில் அகப்படுபவரோ! எண்ணித் துணிமின்; முடிவும் இடையூறும் பயனும் பார்த்துச் செய்தல்வேண்டும்' என்றான்.

இவ்வாறு, விகர்ணன் விளம்பிய அறவுரை கேட்கப் பொறாத துச்சாதனன், அண்ணலை நோக்கி, 'அரசே, மந்திரம்

சூழும் மண்டபத்தில் இளைஞரை வரவிடுதல் கூடாது; அவர், அரசியல் முறையும் சூழ்ச்சியும் அறியார். நாம் இப்பொழுதே சென்று, விதுரனில்லில் எரியூட்டி, அவனையும் மாயனையும் ஒருசேர அழிக்க வேண்டும்; இதுவே தக்கது' என்று அறைந்தான். அவ்வளவில், கன்னன், 'அதுவேண்டா; ஒரே வாளியில் அவரை இன்னே மாய்ப்பல்' என்றான். அவ் வுரைகளைக் கேட்ட சகுனி, 'மாயவன் இங்கு நின்றும் அகன் றால், மாயம் செய்து நம்மை வென்றுவிடுவான். அதனால், அவனை மீளவிடுதல் தகாது; கொல்லுதலும் கொடுமையாகும். ஆதலால், வஞ்சகமாகப் பற்றிச் சிறையிடுதல் செவ்விது; தூதுவரை இங்ஙனம் செய்தலும் முறையே' என்றான்.

மாதுலன் சூழ்ச்சியை மனங்கொண்ட மன்னர் மன் னன், அவ்வாறே செய்யத் துணிந்து, அப்பொழுதே அகன்ற தொரு நிலவறை யமைத்து, அதனுள் வீரர் பலரை யிருத்தி, பின்னர் வெதிர்ங்கோல்களால் அவ்வறையை மறைத்து, அதன்மேல் பலவகை மணிகளாலலங்கரித்த ஆதனத்தை அமைத்து, மேலே விதானமும் கட்டி, அழகு செய்வித்தான். அவ்வளவில் கங்குலும் கழிந்தது; கதிரவன் அவற்றை யறிந்து சினங்கொண் டெழுபவன்போல், குணதிசையில் சிவந்தெழுந் தான்.

7. கொதுகு—I

மாந்தருக்குத் துன்பம் விளைக்கும் சிறு பிராணிகளுள் கொதுகும் ஒன்று. கொதுகினால், நாம், இரவு முழுதும் உறக்கமின்றித் துன்புறுகையில், கொதுகுகளே இல்லாதபடி நிர்மூலப்படுத்திவிட்டால் நலம் என்று நினைப்போம்; ஆயினும், அவை உண்டாகிப் பல்குதலின் காரணத்தையும், அவை பெருகவொட்டாதபடி தடுக்கும் முறையையும் ஆராய்வ தில்லை. ஆதலின், கொதுகுகளைக் குறித்து இங்கே சில கூறுவாம்:



வளர்ச்சியடைந்த கொதுகு

கொதுகுகளில் பலவகைகள் உள்ளன; ஒவ்வொரு வகையும் வடிவில் வேறுபட்டிருக்கும். நமது இந்தியாவில்மட்டும் ஐம்பது வகையான கொதுகுகள் உள்ளன. ஆயினும் அவற்றுள், க்யூலெக்ஸ், அனோபிலிஸ் என்னும் இரண்டு வகைக் கொதுகுகளே முதன்மையானவை.

சில சமயங்களில், கொதுகுகள் நமது செவிக்கருகில் வந்து, பாட்டுப் பாடுதல் போல, ஒலி செய்தலை நாம் கேட்டிருக்கிறோம்.

'வைய முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவி கோதுகின் சில்பாடல்— இவ்விரவில்
கேட்டவா !'

என்று, தமயந்தி வருந்தியதைப் புலவர் அழகாகக் கூறியிருக்கின்றார். இவ்வாறு ஒலி செய்பவை க்யூலெக்ஸ் இனத்தைச் சேர்ந்தவையே; அனோபிலிஸ் இனத்துக் கொதுகுகள் இப்படி இரைச்சலிடுவதில்லை.

இனி, கொதுகின் உடற் கூறுகளைக் கவனிப்பாம்: கொதுகினை நோக்கின், தலை, மார்பு, வயிறு ஆகிய மூன்று பிரிவுகள் நன்கு தோன்றும். தலையில், துதிக்கை போன்ற உறுப்பும், பரிசனிகளும் அமைந்திருக்கின்றன; மார்பின் அடிப்புறத்தில், இணையிணையாக மூன்று கால்களும், மேற்புறத்தில் மென்மையவான இரண்டு சிறகுகளும் உள்ளன; வயிறு கணுக்கணுவாய் நீண்டு தோன்றும். பெண்கொதுகிற்குச் சிறகுகள் பெரியவையா யிருக்கும். கொதுகுகள், தமது

உடம்பு முழுவதிலும் பரவியுள்ள காற்றுக்குழாய்களின் மூலமாகச் சுவாசம் விடுகின்றன.

கொதுகுகளின் தலையில் நீளமான சில உறுப்புகள் உள்ளன. அவற்றை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, பிராணிகளைக் குத்தி இரத்தம் உறிஞ்சுவதற்கு உதவுகின்ற துதிக்கை; மற்றையது, பரிசனி. பரிசனி இரண்டிலும் இறகு போன்றவை அமைந்துள்ளன.

கொதுகின் துதிக்கையில் உள்ள உறுப்புக்களுட் சில பகுதிகள், பிராணிகளைக் குத்துதற்கு உதவும்; சில, உதவுவன அல்ல. படத்தில், ஒன்று முதல்நான்குவரைஎண்ணிடப் பட்டிருப்பவையே, கொதுகு குத்துகையில், நமது தோலினுள் செல்பவை.



பெண் கொதுகின் தலை

கொதுகு, தோலிற் குத்துகையில், அதன் வாய்க்குள்ளிருக்கும் கோளங்களிலிருந்து விஷநீர் சுரந்து, குத்தும் உறுப்புக்களின் வழியே உள்ளே சென்று, இரத்தத்திற் சேர்கின்றது. கொதுகு, ஊசிபோன்ற நுனியுடைய அவ்வுறுப்புக்களால் இரத்தத்தை இழுக்கும்; அங்கு இரத்தம் வாராவிடின், பிறகு வேறிடத்தில் குத்தி உறிஞ்சும்.

கொதுகு நம்மைக் குத்துவதனால், நோவுண்டாதல்இல்லை; ஆனால், குத்திய விடம் தடிப்பாதலும், அவ்விடத்தில் நமைச்

சல் உண்டாதலும், அது, தோலினுட் செலுத்திய விஷ நீரி னாலேயேயாம். உடம்பில் நமைச்சல் உண்டானதும், கொதுகு குத்தினதை யறிந்து, நாம் அதனை ஒட்டிவிடுகின்றோம். அது விஷநீரைத் தோலினுட் செலுத்தாதிருப்பின், பின்னும் சிறிது நேரம் நம்மைக் குத்துதல் கூடும். ஆயின், அது, நம் உடம்பி னுள் விஷநீரை உகுத்தல் ஏன் எனின், கொதுகு கடித்தலினால் இரத்தம் இறுகிப் போகாதபடி, அவ் விஷநீர் அதனைத் திரவரூபமாகவே இருக்கச் செய்கின்றது. அவ்வாறு இருந் தால்தான், கொதுகு இரத்தத்தை எளிதில் உறிஞ்சித் தன் னுள் இழுத்துக்கொள்ள இயலும்.

நம்மைக் குத்தித் துன்புறுத்துபவை பெண்கொதுகு களே. அவை, விலங்கு முதலியவைகளையும் குத்தி இரத் தம் குடிப்பதுண்டு. ஆண் கொதுகுகள், பழம் முதலான வற்றின் சாற்றை உட்கொண்டு, உயிர் வாழ்கின்றன. வாழைப் பழரசம் அருந்தின், அவை நெடுநாள் உயிரோடிருக்குமாம்.

கொதுகுகள், குளிர் நாடுகளில் வேனிற்காலத்து மாத் திரமே மாந்தரைத் துன்புறுத்தும்; வெப்பமிக்க நாடுகளில் அவை எந்நாளும் துன்புறுத்தும். அவற்றிற்கு இருட்டு நேரமே ஏற்றதாயினும், வெளிச்சமின்றி இருண்டிருக்குமிடங் களிலும், புதர்களிலும், மரநிழலிலும், வீட்டுக்கூரை தாழ் வாரம் முதலான இடங்களிலும் அவை எந்நேரமும் தங்கி யிருக்கும். கொதுகுகள், நீலம், கறுப்பு, ஊதா ஆகிய நிறமுள்ள பொருள்களில் விரும்பி விழும்; சிவப்பு, பச்சை, மஞ்சள் இந் நிறங்களில் அவற்றிற்கு அத்துணை விருப்பம் இல்லை.

இனி, கொதுகுகளின் பிறப்பு வளர்ப்பைக் குறித்துச் சிறிது கவனிப்போம்: பெண் கொதுகுகள், நிலையாகத் தேங்கி அழுக்கடைந்துள்ள நீர்நிலைகளைச் சேர்ந்து, அங்கு நீரில் முட்டையிடும். அம்முட்டைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்

கொண்டு, நீரில் மிதக்கும். ஒருமுறை ஒரு கொசுகு இரு நூறு முதல் முந்நூறு முட்டைவரை யிடுகின்றது.

முட்டைகளிலிருந்து மூன்றாம் நாள் புழுக்கள் வெளிப் படும். அவை, நீரில் நெளிந்து உலவிக்கொண்டிருக்கும். அவற்றை அணுதரிசனி என்னும் கண்ணாடியின் மூலமாகப் பார்த்தால், இரண்டு கண்கள் அமைந்த தலையும், உருண்டை யான உடம்பும், கணுக்கணுவான வாலும் தோன்றும்; வாலின் நுனியில் சுவாசக்குழாய் இருக்கும். புழுக்கள் பூரண வளர்ச்சி யடைந்தபின், அரையங்குல அளவினவாய்க் காணும். அவற்றிற்கு, உணவு மிகுதியாக வேண்டியிருத்த லின், அவை எந்நேரமும் ஒழிவின்றி அலைந்து கொண்டே யிருக்கும். புழுக்கள் அடிக்கடி தண்ணீரின் மேலே வந்துவந்து, உள்ளே போவதை நீங்கள் பார்த்திருக்கலாம். அஃது ஏன், தெரியுமா? அவை, வாயுவை உட்கொள்ளுதற்காகவே அவ் வாறு மேலே வருகின்றன. வாயுவை உட்கொள்ளும்போது, அவை, நீர் மட்டத்திற்கு வந்து, தலை கீழா யிருந்துகொண்டு, வாலை நிமிர்த்தும். புழுக்கள், சிறு மீன்களுக்கு அஞ்சி, நீரில் வளர்ந்திருக்கும் புல் பூண்டுகளிலும், கரையோரங்களிலும் ஒதுங்கித் தங்கியிருக்கும்.

கால நிலைமை ஏற்றதாயிருப்பின், கொசுகின்புழுக்கள் இருபது நாள் வரையிலும் பிழைத்திருக்கும். அவை பூரண மாக வளர்ந்ததும், மிருதுவான ஜவ்வினால் மூடப்பெற்று, ஒரு கூடுபோல் ஆகி, நீர்மேல் இருக்கும். அதனால், கூட்டுப் புழு என்று அவற்றிற்குப் பெயரிட்டிருக்கின்றனர். கூட்டுப் புழுக்கள், அலைந்து திரிவதில்லை. அவை, மார்பிலுள்ள நுட்ப மான இரண்டு குழாய்களினால் சுவாசம் விடுகின்றன. காலநிலை வெப்பமாயிருப்பின், அவை விரைவில் வளர்ச்சியடையும்; பூரண வளர்ச்சியடைய மூன்று நான்கு நாட்கள் ஆகும்; வளர்ந்ததும், கூட்டின் மேற்பாகம் பிளவுபடும்; உடனே

கொதுகு வெளிப்படும். இவற்றால், கொதுகின் முட்டையி லிருந்து முதலிற் புழு உண்டாகி, பின்பு அது கூட்டுப்புழு வாகி, அதன் பின்னரே கொதுகு ஆகின்றது என்பது விளங்கு மன்றோ? இனி, கொதுகுகளில் முக்கியமான இனங்களைக் குறித்துச் சற்று ஆராய்வாம்:

கோதுகுகளில், க்யூலெக்ஸ் என்றும் அனோபிலிஸ் என்றும் இரண்டு முக்கிய வகைள் இருக்கின்றன என மேலே கூறி னோமல்லவா? க்யூலெக்ஸ் இனத்துக் கொதுகுகள் சிறிது பருத்திருக்கும்; சிறகுகள் பசுமையாகவோ, பசுமை கலந்த கருமையாகவோ காணும். அவற்றின் முட்டைகள் கபிலநிற முடையனவாய்ச் சிறிது நீண்டு, ஒரு பக்கம் தட்டையாக இருக் கும். நீர், நிலையாகத் தங்கிக்கிடக்கும் குளம் குட்டைகளிலும், பள்ளங்களிலும் கொதுகுகள் முட்டையிடும்; நம் வீடுகளில் தொட்டிகள், உடைந்த பானையோடுகள் முதலானவற்றில் தண்ணீர் தேங்கியிருக்குமாயின், அவற்றிலும் முட்டையிடும். முட்டைகள் புழுக்களாகி அங்கே வளர்வதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

அனோபிலிஸ் ஜாதிக் கொதுகுகள் விரைந்து பறக்குந் திறத்தனவா யிருத்தலின், பறக்கும்பொழுது அவற்றைக் காணுதல் அரிது. அவை ஒலி செய்யாமல் வந்து குத்துவத னாலும், அதனால் நோவு உண்டாகாமையாலும் அவை குத்துவதை மாந்தர் உணர்ந்துகொள்ளாமல் இருக்கலாம். அவை அரை மைல் தொலைவு பறக்கக்கூடியவை. அனோ பிலிஸ் இனத்துக் கொதுகுகளாலேயே மலேரியா என்னும் விஷஜ்வரம் வருகின்றது எனக் கண்டறிந்திருக்கின்றனர். இனி, அதனைக் குறித்துச் சிறிது கூறுவாம்:

8. கொதுகு-II

மலேரியா என்னும் சொல், இத்தாலிய மொழியில் அசுத்த வாயு (அஃதாவது விஷவாயு) என்னும் பொருளையுடையது. தண்ணீர் தேங்கிக்கிடக்கும் குட்டைகளிலும் சதுப்புநிலங்களிலும் எழுகின்ற அசுத்தவாயு, மாந்தர் உடம்பினுட் சென்று, மலேரியா நோயை உண்டாக்குகின்றது என முதலில் எண்ணியிருந்தனர். ஆனால், கி. பி. 1880-ஆம் வருடத்தில், லாவேரன் என்னும் பண்டிதர், மலேரியா நோயால் வருந்தினவனது இரத்தத்தைச் சோதித்து, அவ் விரத்த அணுக்களுக்கு இடையே வேறு சில அணுவுயிர்கள் இருந்ததைக் கண்டறிந்தார். அவை, மலேரியா நோய் அணுக்கள் எனப்பட்டன. லாவெரன், அவ்வாறு கண்டறிந்ததன்பின், அத்துறையில் பலர் ஆராய்ச்சி செய்துவந்தனர். அவர்களுள், ஸர். ப்ரேடேரிக் மான்ஸன் என்பவர், அந்த அணுக்களை, ஒருவனது இரத்தத்தினின்று மற்றொருவனது இரத்தத்திற் சேர்த்தற்கு, இரத்தத்தை உறிஞ்சும் தன்மையுள்ள பூச்சிகள் இருக்க வேண்டும் என்று எண்ணினர். பின்னும் அத்துறையில் ஆராய்ச்சி நிகழ்ந்து வருகையில், 1897-ஆம் வருடத்தில், ரோனல்ட் ராஸ் என்பவர், மலேரியா நோயின் அணுக்கள், ஒருவகைக் கொதுகின் உடம்பிலும் இருக்கக் கண்டு, அக்கொதுகுகளே அந்நோயைப் பரவச் செய்பவை என்று உறுதிப்படுத்தினர்.

இத்தாலி தேசத்தில், புழுநிலையிலிருந்தே கொதுகுகளை வளர்த்து, அவற்றை மலேரியா நோய் கண்ட ஒருவன் உடம்பிற் கடிக்க விட்டு, பின்னர், பத்திரமாக இங்கிலந்துக்குக் கொண்டுபோய், வைத்தியரொருவர் அக்கொதுகுகளைத் தம் உடம்பிற் கடிக்கும்படி செய்துகொண்டார். அதனால் அவருக்கு ஜ்வரம் உண்டாயிற்று. அவர்

உடம்பின் இரத்தத்தைச் சோதித்துப் பார்க்கையில், இத்தாலி தேசத்து நோயாளியின் இரத்தத்திலிருந்த அணுக்களின் வகையே காணப்பட்டன. இந்தச் சோதனையினால், மேற்கூறிய உண்மை நிலைநாட்டப்பட்டது.

மலேரியா நோய், சாராயம் முதலானவற்றைக் குடிப்பவர்களிடையே விரைவில் பரவி, மிக்க கெடுதி விளைக்கின்றது. ஏனெனின், அவர்களுடம்பில் இரத்தம் கெட்டுப்போயிருக்கும். மாந்தருடைய இரத்தத்தில், சிவப்பு அணுக்கள், வெள்ளை யணுக்கள் ஆகிய இரண்டு வகை யணுக்கள் இருக்கின்றன. சிவப்பு அணுக்கள் சுமார் ஐந்நூறு இருப்பின், வெள்ளையணு ஒன்று இருக்கும். வெள்ளை யணுக்கள் வலியனவாய்ப் பல இருக்குமாயின், அவை, இரத்தத்துட் புகும் நோயணுக்களைக் கொன்று பாதுகாக்கும்; நோயுண்டுபண்ணும் அணுவுயிர்கள், வெள்ளை யணுக்களினும் பலவாயும் வலியனவாயும் இருப்பின், அப்பொழுது வெள்ளை யணுக்களின் பாதுகாப்பு பயனில்லாததாகிவிடும்.

மலேரியாவிற்குக் காரணமான அணுவுயிர்கள், அனோபிலிஸ் இனத்துப் பெண்கொதுகுகளால் மாந்தர் உடம்பினுட் சேர்க்கப்படுகின்றன. அக் கொதுகுகள் நோயாளியின் இரத்தத்தை உறிஞ்சுதலினால், நோயணுக்கள் அவற்றின் உடம்பிற் சேர்ந்து, சில நாட்களுள் பல கருக்களை (Spores) உண்டாக்குகின்றன. கருக்கள், கொதுகுகளின் உமிழ்நீர்க் கோளத்திற் சேர்ந்திருப்பதனால், கொதுகுகள் நோயில்லாதவனைக் கடிக்கையில், அக்கருக்கள் அவன் இரத்தத்திற் கலந்து பல்கி, அவனுக்கு நோய் விளைக்கின்றது. அதனால், இந்நோயைத் தொத்துநோய்களுள் ஒன்றாக வழங்குகின்றோம்.

மலேரியா நோயணுக்கள், மாந்தர் உடம்பினுட் புகுந்ததும், உடனே நோயுண்டாக்குதல் இல்லை. அவை, இரத்தத்திலிருக்கும் சிவப்பணுக்களைத் தின்று வளர்ந்து, பல கருக்கள்

(Spores) ஆகின்றன. இவ்வாறு நடைபெறுதலினால், எண்ணிறந்த சிவப்பணுக்கள் அழிந்துவிடுகின்றன. நோயணுக்கள் பல்க, இரத்தம் கெடுமளவும், அம்மனிதன் வெளித்தோற்றத்தில் நோயில்லாதவனாகவே காணப்படுவான். கருக்கள் சிவப்பணுக்களைத் தின்று, மிகப் பல்கிய பின்புதான், நோய் கடுமையாக உண்டாகும்.

மலேரியா ஜ்வரம் வருமுன் மிக்க குளிரும், ஜ்வரம் நிற்கும்போது வியர்வையும் உண்டாகும்; தலைவலி காணுதலும் உண்டு. சிலருக்கு நாள்தோறும், சிலருக்கு ஒருநாள் விட்டு மற்றொருநாளும், சிலருக்கு மூன்று நாளுக்கு ஒருமுறையும் இந்நோய் வரும். இவ்வாறு முறையாக வருவதற்குக் காரணம் என்ன ?

நோய்க்குக் காரணமான அணுக்களில் மூன்று வகையுள்ளன. அவற்றுள் ஒருவகை யணுக்கள் ஒருநாளுக்கு ஒரு முறையும், மற்றொருவகை யணுக்கள் இரண்டு நாளுக்கு ஒரு முறையும், பிறிதொருவகை யணுக்கள் மூன்று நாளுக்கு ஒரு முறையும் இரத்தத்துள் கருக்களை ஆக்கிப் பல்குகின்றனவாம். நோயாளியின் இரத்தத்தைச் சிறந்த வைத்தியரால் சோதனை செய்யின், அவ்வணுக்களின் வகையை அறிந்துகொள்ளலாம்.

மலேரியா நோய்க்குக் காரணமான கொதுகுகள், புல், பூண்டு, பாசி, சிறுபுழுக்கள் முதலியன இருக்கும் குளம் குட்டைகளிலும், சிறிய வாய்க்கால்களிலும் சாதாரணமாக வாழ்ந்திருக்கின்றன. அவை, முட்டையிடும் இடங்களுக்கும், மாந்தரின் இரத்தத்தைக் குடிக்கும்பொருட்டு அவர்களிருக்கும் இடங்களுக்கும் அடிக்கடி சென்று வருமாதலின், ஊர்களுக்கு நெடுந்தூரத்தில் வசிப்பதில்லை. சதுப்பு நிலங்களினால் மலேரியா நோய் உண்டாகாதாயினும், அவை அந்நோயை உண்டாக்கும் கொதுகுகளுக்கு ஆதாரமாயிருக்கின்றன.

கொதுகுகளை அழிக்கவேண்டுமாயின், முதலில், அசுத்தமான நீர்நிலைகளைத் தூர்க்க வேண்டும்; ஊருக்கு அருகில் நெற்பயிர் விளைத்தல் ஆகாது. வீடுகளுக்கு முன்புறத்தில் சூரியனொளி படாவாறு மரம் செடிகள் அடர்ந்திருத்தல் கூடாது. வீட்டிற்குள், வெளிச்சமும் நல்ல காற்றும் தாராளமாக வருதற்கு வசதி செய்யவேண்டும். வீடுகளில் உடைந்த பானையோடுகள், தொட்டிகள் முதலானவற்றில் தண்ணீர் தங்குமாயின், அங்கும் கொதுகுகள் சென்று முட்டையிடுமாதலால், ஊர்ப்புறங்களைப் பாதுகாத்தலோடு, ஒவ்வொருவரும் தத்தம் இல்லங்களையும் சுத்தமாக வைத்துப் பாதுகாத்தல் அவசியமாகும். இவ்விஷயத்தைத் துரைத்தனத்தார் கவனித்தாலும், மாந்தர் மனங்கொள்ளாவிடின், பயன் உண்டாதல் அரிது. ஆகலின், ஒவ்வொருவரும், தாமும் தம்மை யடுத்திருப்பவர்களும் நோயின்றி வாழ மனங்கொண்டு, அத்துறையில் முயலவேண்டும்.

குடிதண்ணீர்க் குளத்தின் கரையில், புல் பூண்டுகள் வளர்ந்து செறியாமலும், மரக்கிளைகள் கவிந்து படியாமலும் கவனித்துவரவேண்டும். ஏனெனின், கொதுகின் புழுக்கள், புல் பூண்டுகளிலும் பாசியின் அடியிலும் மறைந்திருக்க ஏதுவாகும். அப்புழுக்களைத் தின்னக்கூடிய கெண்டை முதலான சிறு மீன்களைக் குளங்களில் விட்டு வளர்த்தல் நன்று. அசுத்தமான நீர்நிலைகளில், சிறிது மண்ணெண்ணெயாவது 'பெட்ரோலியம்' (Petroleum) ஆவது ஊற்றினுல், அது நீர்மேற் பரவி, அங்கிருக்கும் கொதுகின் புழுக்களை அழித்துவிடும். எங்ஙனமெனின், புழுக்கள் சுவாசம் விடும்பொருட்டு நீர்மேல் வருகையில், அந்த எண்ணெயினுல் அவற்றின் சுவாசக் குழாய்கள் கெட்டுப்போகும்.

கொதுகுகளினின்று நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின், இரவிற் படுக்கும்பொழுது, கொதுகு வலையை

உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். அனேபிலிஸ் கொசுகு கள் இருக்குமிடங்களிற் குடியிருப்பவர் 'குவினின்' மருந்தை உட்கொள்ளவேண்டும். அம்மருந்து இரத்தத்திற் கலந்து, நோயணுக்களைக் கொல்லத் துணைபுரியும். ஆயினும், அதனை மூன்று, நான்குநாள் மட்டும் உட்கொண்டு, பின்பு நிறுத்தி விட்டால், முழுப்பயன் உண்டாகாது. நோய் தீர்ந்துவிடினும் பின்னும் அதனைப் பலநாள், இடைவிடாது உட்கொள்ள வேண்டும். இன்றேல், நோய் மீண்டும் தொடரும். குவினின் மருந்து உட்கொள்வதனுல் வயிறு பெருத்துவிடும் என்று சிலர் கூறுவராயினும், அஃது உண்மையன்று.

பொதுவாக, வீடுகளையும் வீட்டுப் புறங்களையும் சுத்த மாக வைத்திருப்போமானல், மலேரியா முதலான தொத்து நோய்கள் பெரும்பாலும் அணுகமாட்டா.

9. புகழேந்திப் புலவர்.

நமது தமிழ்மொழியிற் சிறந்த காப்பியங்களை இயற்றி, மக் கட்கு அறிவைப் பெருக்கி, புகழ் பெற்று விளங்கிய பெரும் புலவர் பலருட் புகழேந்திப் புலவர் ஒருவர். அவரது வாழ்க்கை வரலாறு உண்மையாக எழுதப்படவில்லை; எழு தப்பட்டிருப்பவற்றிலும் பெரும்பாலன புனைந்துரைகளே யாகும். ஆயினும், அக்கதைகளினுல், சில உண்மைச் செய்திகளும் நாம் அறியக்கூடும். ஆதலின், அவரைக் குறித்து வழங்கும் கதைகளுட் சிலவற்றை இங்குக் கூறுவாம்:

'தெண்ணீர் வயற்றொண்டை, நன்னுடு சான்றோர் உடைத்து' என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற தொண்டை மண்டலத்தில், பொன்விளைந்த களத்தூரில் நந்தம் புகழேந்திப் புலவர் தோன்றினர். அவர், இளமைப் பருவத்திலேயே தமிழ்மொழியை நன்கு பயின்று, பெரும் புலமை யடைந்தார். பின்னர், அவர், பாண்டி நாட்டில் மதுரையை யடைந்து,

ஆங்கு அரசு புரிந்திருந்த பாண்டியனைச் சார்ந்து, அவனால் நன்கு மதிக்கப்பெற்று, அவன் அவைக்களத்திற் பெரும் புலவராய் விளங்கியிருந்தார். 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பது உண்மையுரையே அன்றோ!

அக்காலத்தில், சோழநாட்டை யாண்டுவந்த குலோத்துங்க சோழன் அவையில், ஒட்டக்கூத்தர் என்பவர் பெரும் புலவராக விளங்கினார். அவர், அவ்வரசனுக்கு ஆசிரியராயும் அமர்ந்திருந்தா ராகலின், அவரை அரசன் பெரிதும் போற்றி வந்தான்.

அந்நாளில், அவ்வரசனுக்கு மணம் பேசும்பொருட்டு ஒட்டக்கூத்தர் மதுரையை யடைந்தார். அவர், பாண்டியன் அவையில் புலவராய் விளங்கிய புகழேந்தியாருடன் அளவளாவிக் கொண்டிருக்கையில், பொன்னியாறு பாய்வதனால் செந்நெல் விளைந்து செழிப்புறும் தமது சோணாட்டினையும், சோழனையும் புகழ்ந்து,

'கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை'
'ஆதித்த னுக்கு நிகர் அம்புலியோ அம்மானை'
'வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை'
'ஊருக்கு உறந்தை நிகர் கொற்கையோ அம்மானை'

என்று கூறினார். அவற்றைக் கேட்ட புகழேந்தியார்,

'கரையெதிர் ஏ டேறியது காவிரியோ அம்மானை'
'சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை'
'திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானை'
'ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானை'

என்று, பாண்டி நாட்டின் மேம்பாடும், வழுதியர் மரபின் மாண்பும், செந்தமிழின் சீர்மையும் தெரிவித்தார். அவர் கூறிய சொற்களால், ஒட்டக்கூத்தர் உள்ளம் கொதிப்புற்று

ராயினும், அப்பொழுது ஒன்றும் கூறாது அமைதியுற்றிருந்தார்.

பின்னர், கூத்தர் வேண்டியவாறே பாண்டியன் தன் புதல்வியைச் சோழனுக்கு ஈய வுடம்பட்டதனால், திருமணம் செவ்விதின் நிகழ்ந்தது. பாண்டியன், தன் புதல்விக்குப் பல வகை வரிசைகளை நல்கி, தோழியரையும், தாதியரையும் உடன்விடுத்தான்; அன்றியும், அக்கோமகளுக்குத் தமிழாசிரியராய் விளங்கிய புகழேந்தியாரையும் துணைபுரியுமாறு அனுப்பினான். அவரும் காவலன் கருத்திற் கியைந்து, ஆண்டுநின்றும் அகன்று, சோணாட்டை யடைந்தார்.

இவ்வாறு புகழேந்திப் புலவர் சோழனவையை யடைந்ததை அறிந்த ஒட்டக்கூத்தர் உள்ளங்களித்தார்; தமது நாட்டையும் தம் அரசர் குடியையும் இழித்துக்கூறிய புலவரை இழிவுபடுத்தச் சமயம் வாய்த்தது என்று கருதி இன்புற்றார்; பின்பு, சோழன்முன் சென்று, 'அரசே, யான் தமக்கு மணம்பேசப் பாண்டியன் அவைக்குச் சென்றிருந்த ஞான்று, சிறிதும் அஞ்சாது, நும் குடியையும் நுமது நாட்டையும் என்முன் இகழ்ந்து கூறிய புன்புலவன் இங்கு எய்தியுள்ளான்; அவனை யொறுத்தல் கடனாகும்' என்று அவன் மனங்கொள்ளுமாறு புகன்றார். புலவர் கூறியதை யறிந்த புரவலன், பாவலரைக் காவலிலிடுதற்கு மனம் இயைந்திலனாயினும், அவர் மாற்றத்தை மறுக்கவொண்ணமல், அவ்வாறு செய்ய உடன்பட்டு, புகழேந்திப் புலவரைச் சிறையிலிடுமாறு காவலருக்கு ஆணையிட்டான். அதனையறிந்த புகழேந்தியார், மாறு கூறாது, சிறைச்சாலையைச் சேர்ந்திருந்தார்.

புகழேந்திப்புலவர் சிறைச்சாலையில் இருக்கும் காலத்தில் ஒரு நாள், சோழன், ஒட்டக்கூத்தர் முதலானவருடன் உலாவச் செல்கையில், அச்சிறைச்சாலையை யணுகினான். அப்பொழுது புகழேந்தியார் சிறைச்சாலையின் மேலிடத்தில் உலா

விக்கொண் டிருந்தார். அவரைக் கண்ட வேந்தன் ஒட்டக் கூத்தரை நோக்கி, 'இவர், பாண்டி நாட்டுப் பெரும் புலவ ரல்லரோ?' என்று வினவ, கூத்தர், 'ஆம், ஆயினும், ஞாயிற் றின்முன் மின்மினி ஒளி செய்வதுண்டோ?' என்று செருக் குடன்,

'மான் நிற்குமோ அந்த வாளரி வேங்கை முன்;
வற்றிச் சேத்த
கான் நிற்குமோ அவ் வெரியும் தழல்முன்;
கனே கடலின்
மீன் நிற்குமோ அந்த வேங்கட் சுறவமுன்;
வீசு பனி
தான் நிற்குமோ அக் கதிரோன் உதயத்தில்
தார் மன்னனே'

என ஒரு பாட்டுப் பாடினர்.

அதனைக்கேட்ட புகழேந்தியார் அரசனை நோக்கி, 'கூத் தர் பாடிய பாட்டை ஒட்டிப் பாடவோ, அன்றி வெட்டிப் பாடவோ?' என்று வினவினர். அரசன் ஒட்டிப் பாடுமாறு வேண்டவும், உடனே அவர்,

'மான் அவன் நானந்த வாளரி வேங்கையும்;
வற்றிச் சேத்த
கான் அவன் நானவ் வெரியும் தழலும்;
கனே கடலின்
மீன் அவன் நானந்த வேங்கட் சுறவமும்;
வீசு பனி
தான் அவன் நானக் கதிரோன் உதயமும்
தார் மன்னனே!'

என்று, அவர் பாடிய பாட்டை ஒட்டிப் பாடினர். அப் பாட்டு, கூத்தர் உள்ளத்தில், 'வெந்த புண்ணில் வேல் நுழைத்

தாற்போல' வருத்துவதாயிற்று. அரசன் புகழேந்தியாரது கவித்திறமையை வியந்தானாயினும், கூத்தர் குறிப்பிற்கு இணங்கி வாளா சென்றான்.

அக்காலத்தில், ஒட்டக்கூத்தர், தம்பால் வரும் புலவர்களைச் சிறையிலிட்டு வைத்து, நவராத்திரி பூசனை நாட்களில் அவரை வருவித்துப் பரீக்ஷைசெய்து, பரீக்ஷையில் தோல்வியுற்றோர்களுள் ஒருவர் சிகையை மற்றொருவர் சிகையோடு முடிந்து, ஒருங்கே தேவிமுன் நிறுத்தி, பலியிடுதல் வழக்காறா யிருந்தது. அவ்வண்ணம், கூத்தர் சிறையில் இடுவித்த புலவர்களுட் கூரறிவுடைய சிலரைத் தேர்ந்து, அவர்களுக்குப் புகழேந்திப் புலவர், செந்தமிழின் இயல்களை நன்கு கற்பித்தார். அவர்களுள், குயவன், கொல்லன், தச்சன் முதலான பலகுலத்தினர் இருந்தனர். அவர்களனைவரும் புகழேந்திப்புலவரால் ஆழ்ந்த அறிவும், தேர்ந்த புலமையும் அடைந்தனர்.

வழக்கம்போல், நவராத்திரி நாட்களில் ஒட்டக்கூத்தர், சிறையிலடைத்திருந்த புலவரைத் தருவித்து, ஒவ்வொருவரையும் பரீக்ஷை செய்யலாயினர். அவர்கள் கூத்தர் வினவுக்கு ஏற்ற மறுமொழியாகத் தனித்தனியே பாட்டுப் பாடி விடையிறுத்தனர். புலவர்கள் பாடிய பாட்டுக்கள் ஒட்டக்கூத்தரின் செருக்கை யடக்கின. செருக்கடங்கிய கூத்தர், அவரனைவருக்கும் பரிசில் வழங்கி விடைகொடுத்தார்.

புலவர்கள் ஒட்டக்கூத்தர்பால் பரிசில் பெற்ற செய்தி, நகர் முழுவதும் பரவியது; கேட்டோரனைவரும் வியந்தனர்; புகழேந்தியாரின் புலமையைப் புகழ்ந்தனர். அதனை யறிந்த பாங்கியொருத்தி அரசியை யணுகி, 'தாயே, இன்று நிகழ்ந்த புதுமையை யறிந்தீரோ! மதுரையிலிருந்து வந்த புலவரால், இன்று புலவர் பலர் பரிசில் பெற்றனர்' என்று வியப்புடன் தெரிவித்தாள். அதனைக் கேட்ட தேவி, தம் ஆசிரியரின்

நினைவு வர, அவ்வரலாறு முழுதும் அறிவிக்குமாறு வினவினள். அவள், பாண்டிநாட்டுப் புலவர் ஒருவர் ஒட்டக்கூத்தரால் சிறையிடப்பட்டிருக்கின்றார் என்றும், அவர், புலவர் பலருக்கு நன்கு கற்பித்ததனால் அவர்கள் ஒட்டக்கூத்தர் வெள்குமாறு பாடிப் பரிசில் பெற்றனர் என்றும் நிகழ்ந்தவற்றைப் பகர்ந்தாள்.

அச்செய்தியை யறிவுற்ற அரசியார், சிறையிலிருக்கும் புலவர் தம் ஆசிரியரே என உறுதிகொண்டு, மனம் நொந்து, அரசன்மேற் சினம்கொண்டு, கோயிலினுள் ஓரறைக்குட் போந்து, கதவைத் தாழிட்டுக்கொண்டிருந்தார். கோயிலையடைந்த கொற்றவன், தேவியின் சினத்தை அறிந்து, அதனைத் தீர்க்குமாறு ஒட்டக்கூத்தரை வேண்டினன். கூத்தர், கோத்தேவியிருக்கும் அறையைக் குறுகி,

'நானே இனி உன்னை வேண்டுவதில்லை; நளினமலர்த்
தேனே கபாடம் திறந்திடுவாய்; திறவாவிடிலோ
வானே அனைய இரவிகுலாதிபன் வாயில் வந்தால்
தானே திறக்கும் நின் கையிதழாகிய தாமரையே'

என்று ஒரு பாட்டுப்பாடி, கதவம் திறக்குமாறு வேண்டினர். அச் செய்யுளைக் கேட்ட தேவி, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' எனச் சொல்லிக்கொண்டு, பின்னும் ஒரு தாழிட்டு, அகத்தே யிருந்தார்.

தேவி சினம் தணியாதிருத்தலைக் குறித்து வருந்திய அரசன், புகழேந்திப் புலவர் சிறையிலிருப்பது நினைவிற்கு வரவே, அவரைச் சிறையினின்று விடுவித்து, அழைத்துவருமாறு பணியாளரை ஏவினன். பணியாளர் சென்று புகழேந்தியாரை அழைத்து வந்தனர். புரவலன் புலவருக்கு, தேவி சினங்கொண்டிருத்தலைத் தெரிவித்து, சீற்றத்தை மாற்றுமாறு வேண்டிக்கொண்டான். அவரும் அரசியையணுகி,

‘இழையோன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை ஏந்துவள்ளைக்
குழையோன் றிரண்டு விழியணங்கே கொண்ட கோபந் தணி
மழையோன் றிரண்டுகைம் மானுபரணன்நின் வாயில்வந்தாற்
பிழையோன் றிரண்டு பொறுமரோ குடியிற் பிறந்தவரே’

என்று இனிது வேண்டினர். ஆசிரியரின் குரலை அறிந்த அரசியார், உடனே தாழ் நீக்கிக் கதவம் திறந்து வெளிவந்து வணங்கினர்; வணங்கி, தம் அறியாமையினல் நேர்ந்த பெரும் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். புலவர், அரசியின் அன்புரைகளைக் கேட்டு அகமிக மகிழ்ந்தார். அப்பொழுது, காவலனும் நாவலரை வணங்கித் தான் இழைத்த குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டான். அதன் பின்னர், அவனது அரண்மனையிலேயே புகழேந்தியார் சிறிது காலம் தங்கியிருந்தார்.

சோழன், ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும் பகைமை விடுத்து அன்புபூண்டு நண்புடனிருக்கும்படி, அவ்விருவரையும் வேண்டிக்கொண்டான். ஆயினும் ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவரிடத்து உள்ளன்பு செலுத்தினரல்லர். இங்ஙனம் சிறிதுகாலம் கழிதலும், புகழேந்தியார் உள்ளன்பில்லாதவருடன் கூடியிருத்தலினும் அவரைப் பிரிந்துறைதலே சிறந்தது எனக் கருதி, சோழனவையை நீங்கிச் செல்வாராயினர்.

சென்றவர், மள்ளுவ நாட்டை யடைந்து, அங்கு முரணை நகரில் வாழ்ந்து அரசு செலுத்திய சந்திர சுவர்க்கி என்னும் வேந்தனைச் சார்ந்து, அவனது அவைக்களத்திற்கு ஓர் அணிகலமாகத் திகழ்ந்து, அங்கே வாழ்ந்திருந்தார். அவ்வரசன் தமிழ்ச்சுவை யின்பும், புலவரின் பண்பும் நன்கு அறிந்தவனாதலின், புகழேந்திப் புலவரின் பெரும் புலமையைப் பாராட்டி, அவரைப் போற்றிவந்தான்.

அக்காலத்தில், புகழேந்தியார், நளன் கதையை வெண்பாவில் அமைத்து, நளவெண்பா என்னும் சிறந்ததொரு காப்பியம்

இயற்றி, சந்திர சுவர்க்கியின் அவைக்களத்தில் அரங்கேற்றினர். அந்நூலின் சொல்நயம், பொருள் நயம், நடைநயம், அணிநயம் முதலானவற்றை யறிந்து, அரசனும் புலவரும் புகழேந்தியாரைப் பாராட்டினர். அதனைக் கேள்வியுற்ற சோழன், அக்காப்பியத்தைத் தானும் கேட்க விரும்பி, புகழேந்தியாரை அழைப்பித்து, தன் அவைக்களத்தில் அரங்கேற்றுமாறு வேண்டிக் கொண்டான். அவரும் அதற்கு இயைந்து, தமது காப்பியத்தைச் சோழனவையிலும் அரங்கேற்றுவாராயினர்.

புகழேந்தியார், நளவெண்பாவை அரங்கேற்றி வருகையில், ஒட்டக்கூத்தர், பலவிடங்களில் குற்றம் கூறினர். அவற்றிற்குத் தக்க சமாதானம் கூறி, புகழேந்தியார் தம் காப்பியம் முழுதும் அரங்கேற்றினர். அக் காப்பியத்தின் மேன்மையை யறிந்த ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவரின் பெரும் புலமையை நன்கு அறிந்து வியந்து, தம் உள்ளத்தில் அவரைக் கள்ளமின்றி மதித்துவந்தார்.

புகழேந்திப் புலவர், வெண்பாப் பாடுதலில் வல்லவர். இதனை, 'வெண்பாவிற் புகழேந்தி' என்பதனல் அறியலாகும். அவர், தமக்குப் பிறர்செய்த நன்றியை மறத்தலில்லாத நற்குணம் வாய்ந்தவர். தம்மைப் புரந்து வந்த சந்திர சுவர்க்கியைக் குறித்து, அவர், தமது காப்பியத்தில் பல இடங்களிற் புகழ்ந்து கூறியிருப்பதனல், இஃது அறியப்படும். நளனைப் பற்றியிருந்த கலி, அவனை விட்டு நீங்கியதைக் கூறுமிடத்து,

'வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரசுவர்க்கி—கோண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி'

என்று பாடியிருத்தலினல், சந்திர சுவர்க்கி என்னும் அரசன் புலவரைப் புரந்து, அவரது வறுமைப்பிணியை யொழிப்பவன் என்பது நன்கு விளங்கும்.

புகழேந்திப்புலவர், வைணவ சமயத்தைச் சார்ந்தவர். நளனைக் கலி பற்றியதைக் கூறுமிடத்து, 'நாராயணாய நம' என்று, திருமால் திருவடிகளைச் சரணம் அடையாதவர்களைக் கடுந்துன்பங்கள் பற்றுதல் போல, நளனைக் கலி பற்றினான்' என்றும், நளனது விகாரமான வடிவம் நீங்கியதைக் கூறுமிடத்து, 'திருமால் திருவடிகளை அடைந்தவர்களின் அருவினை தீர்தல்போல, நளனது வேற்றுருவம் நீங்கிற்று' என்றும் பாடியிருப்பதனால், அவரது கொள்கை புலனாகும். அவர், வைணவ சமயத்தவராயினும் பிறமதங்களை இகழ்பவரல்லர்.

நம் நாட்டில், சாதாரண மாந்தரிடையே வழங்கிவருகின்ற அல்லியரசானிமாலை, பவளக்கொடிமாலை முதலான புத்தகங்கள் பலவற்றையும் பாடியவர் புகழேந்திப்புலவரே எனக் கூறுகின்றனர். அவற்றின் நடையும் அமைதியும்நோக்குவோர்க்கு, அவை, அவர் செய்தன அல்ல என்பது தெற்றெனவிளங்கும். ஆனால், அவை, புகழேந்திப்புலவர் சிறையிலிருந்தபோது பாடியவை எனக் கதை கூறுகின்றனர். அஃதாவது, புகழேந்திப்புலவர் சிறையிலிருந்த காலத்தில், அரசன். அவருக்கு ஏற்ற உணவு அளிக்கவில்லை. அதனால், அவர். அச்சிறைச்சாலையின் அருகிலிருந்த கேணியில் தண்ணீர் எடுக்கச் செல்லும் பெண்டிருக்குப் பொருள் விளங்கும்படி எளியநடையில், பெண்களின் வரலாறுகளைச் சிறு நூல்களாகப் பாடலாயினர்; மகளிர், அப்பாட்டுக்களைக் கேட்டு உவப்புற்று, புலவருக்குச் சிறந்த உணவுப்பொருள்களைக் கொண்டுபோய்க் கொடுத்துப் பாராட்டி வந்தனர். புலவர் அப்பொருள்களைப் பெற்றுத் தாமும் உண்டு, எஞ்சியவற்றை காவலருக்கும் ஈந்து வாழ்ந்துவந்தனர். ஆதலின், மேற்குறித்த நூல்களெல்லாம் புகழேந்திப் புலவர், மகளிர் பொருட்டுப் பாடியவை என்கின்றனர். ஆயினும், இக்கதைகளெல்லாம் உண்மையெனத் துணிதற்கு இடமில்லை. இவ்வாறே, பெரும்

புலவர் செய்யாத நூல்களை, அவர் செய்தனர் என்று அவர் மேல் ஏற்றிக் கூறும் வழக்கம் எல்லா நாடுகளிலும் உளது. ஆதலின், அல்லியரசாணிமாலை முதலானவை புகழேந்திப் புலவர் செய்தன அல்ல என்று கோடலே முறையாகும்.

10. அரசிறை.

அரசர் நாடுகளைப் பாதுகாத்து வாராவிடின், குடிகளுட் கலகங்கள் அடிக்கடி நேரும். தத்தம் பொருள்களைத் தாம் தாம்அனுபவிக்கமுடியாதவாறு,வலியோர்,எளியோர்பொருள்களைக் கைக்கொள்வர்; உழவர், தாம் விளைத்த தானியங்களைத் தம் மனைக்குக் கொண்டுபோகுமுன், கொள்ளைக்காரர் அவற்றைக் கொண்டுபோய்விடுவர். நாகரிகம் இல்லாத நாடுகளில் இவ்வாறு நிகழ்ந்ததுண்டு. அந்நாடுகளில், உழவர், தம் பாதுகாப்புக்காக, ஆண்மை மிக்க வீரர் சிலருக்குப் பொருள் உதவி, அவரைத் தம்முடன் அழைத்துச் செல்லுவர். அப்பொழுதும் கொள்ளைக்காரர் பலர் ஒருங்குகூடி வரின், அவர்கள் உழவர் பொருள்களைக் கைக்கொண்டு செல்லுதல் திண்ணம். அந்தோ, இஃது எத்துணைக் கொடுமை! உழவர், வருந்திப் பாடுபட்டு விளைவித்த பொருள்களை, அவர்கள் அனுபவிக்க முடியவில்லையே! உலகத்தில் அரசாட்சி இல்லாதிருப்பின், இவ்வாறு பல தீங்குகள் நேரும் என்பது இதனால் விளங்குமன்றோ?

நமக்குப் பிறர் தீங்கிழைக்காமலும், நமது பொருளைக் கள்வர் கவர்ந்து கொள்ளாமலும் பாதுகாப்பவர் அரசாங்கத்தாரே. இதற்காக அரசாங்கத்தார் அநேக அதிகாரிகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். நம்மைப் பாதுகாப்பவருக்கு நாம் பொருள் கொடுக்கவேண்டுவது முறையேயன்றோ? அரசாங்கத்திற்கு நாம் கொடுக்கும் பொருளுக்கு அரசிறை, அல்லது

வரி என்று பெயர். இங்கே அதனைக் குறித்துச் சிறிது கூறு வோம்:

நம் நாட்டில் இக்காலத்தே அரசாங்கத்தார் விதித்திருக் கும் வரிகளைக்குறித்து அறிவதன்முன்,முற்காலத்தில் நிகழ்ந்த வரிமுறையைச் சிறிது அறிவது அவசியம். பண்டைக்காலத் தில் நம் நாட்டில், பெரும்பாலும் உழவுத்தொழில் ஒன்றே சிறப்பாக நிகழ்ந்து வந்தது. ஆதலின், உழவர்களிடம் ஒரு பகுதியை அரசாங்கத்தார் இறையாகப் பெற்றுவந்தனர். மாந் தர், தம் பொருள்களால், கடவுளரையும் பிதிர்களையும் சுற்றத் தாரையும் விருந்தினரையும் தம்மையும் பேணிவந்தனர். அதனால், அவர்களிடம் ஆறிலொரு பகுதியே அரசர் பெற்று வந்தனர். அதுவேயன்றி, பகைவர் நாடுகளிலிருந்து கைக் கொள்ளும் பொருளும், தோற்ற அரசர் திறையாகத் தரும் பொருளும், சுங்கங்களில் வரும் பொருளும் அரசருக்கு உரியவையே.

அக் காலத்தில் தொழிலாளர்களும், பெருஞ் செல்வர் களும் துரைத்தனத்தாருக்கு வரியாகப் பொருள் செலுத்த வேண்டியதில்லை. பயிர்களின் விளைவில் ஒருபகுதியைமட்டுமே அரசர் பெற்று வந்ததனால், பயிரிடப்படாத காம்பு நிலங்க ளுக்கு வரி ஏற்பட்டிருக்கவில்லை. ஆயினும், உழவர் பயிரிடுவ தற்கும்,அறுவடை செய்தற்கும் அரசாங்கத்தார் கட்டளையை எதிர்பார்க்க வேண்டி யிருந்தது. அதனால், அவர்கள் பட்ட பாடும், உற்றகேடும் அளவிறந்தன.

ஆங்கிலேய அரசாட்சி, நம் நாட்டில் நிலைபெற்றதன் பின்னர், நாட்டில் விளைநிலம் முதலியவற்றை அளவு செய்து, நிலங்களின் தராதரத்தை நன்கு ஆராய்ந்து, அவற் றின் விளைவிற்குத் தக்கவாறு வரியைப் பொருளாகச்செலுத்த ஏற்பாடு செய்தனர். அதுவே நம்நாட்டில் ஏற்பட்ட முதல் 'ஸெட்டில்மெண்டு' ஆகும். பின்னர், சில யாண்டுகளுக்கு முன்

னர் மறுமுறையும் நிலங்களை நன்கு அளந்து பார்த்து, வரியை யமைத்துள்ளார்.

நம்நாட்டில், அரசாங்கத்தார் குடிகளுக்குச் செய்யும் பல விதமான நன்மைகளுக்கும் நிலவரியினுல் வரும்பொருள் சாலா தாயிற்று. ஆயினும், நிலவரியை மிகவும் கூட்டுதல் அமையாது என்று உணர்ந்து, அதற்காக வேறு வழிகளில் பொருள் பெற லாயினர். அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட நலன்களை யெல்லாம், உழவரைப்போன்றே பிறரும் அடைகின்றனரே; ஆதலின், அவர்களும் தாம் அடையும் நலன்களுக்காக அர சாங்கத்திற்கு வரிசெலுத்துதல் முறையே யன்றே?

இக்காலத்தில், வாணிகத்தாலும், பிற தொழில்களா லும், உத்தியோகங்களாலும், பெரும்பொருள் ஈட்டுவோர் பலர். இவர்கள், உழவர்களைப் போலவே துரைத்தனத்தா ருக்கு வரி செலுத்துதல் நியாயமாகு மல்லவா? ஆதலின், ஓர் யாண்டிற்கு 2000-ரூபாய்களுக்கு மேலாக வருமானமுள்ள வர்களுக்கு வருமான வரி' (Income tax) ஒன்று ஏற் படுத்தினர். அன்றியும், உத்தியோகஸ்தர், தொழிலாளர் முதலியோருக்குத் தொழில் வரியும், பிற நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வரும் பொருள்களுக்கும் கள் சாராயம் முதலான வற்றை யுண்டாக்குதற்கும் விற்பதற்கும் தீர்வையும் அமைத்த னர். வேறு சில பொருள்களுக்கும் வரி ஏற்படுத்தினர்.

இவ்வாறு பலவகை வரிகளை ஏற்படுத்தியிருத்தல் கொடுங்கோல் முறை என்று சிலர் நினைக்கக்கூடும். அஃது அவர்களின் ஆராய்ச்சிக் குறைவேயாம். என்னெனின், அரசி யல் நடை பெறுதற்கு வேண்டும்பொருள் முழுவதும் குடிகளே இறுக்கக் கடப்பாடுடையர். அரசியலிற்கு வேண்டும் பொருளை இவ்வாறு பலவழிகளில் பெருமல், முன்போல் உழவர்களிட மட்டுமே பெறுவார்களாயின், அந்தோ, ஏழையுழவர் என்ன பாடு படுவர்! வேறு வழிகளில் பெரும்பொருளீட்டுபவர் வரி

செலுத்தாதிருத்தலும், வருந்திப் பயிரிடும் ஏழைக்குடிகளே எல்லாவரியையும் இறுத்தலும் முறையாகாதன்றோ? ஆதலால், இவ்வாறு பல வரிகளை விதித்திருத்தல் குடிகளுக்கு நன்மையும், அரசியலுக்கு முறைமையும் ஆகும்.

குடிகள், தாங்கள் செலுத்தும் வரியை இரண்டு வகையாகச் செலுத்துகின்றனர் என்னலாம்: ஒன்று, தாம் நேராகச் செலுத்துதல்; மற்றொன்று, பிறர் மூலமாகச் செலுத்துதல். உத்தியோகஸ்தர், தொழிலாளர் முதலியோர் தங்கள் வரிப் பொருளை நேரே செலுத்துகின்றனர். உப்புவரி, இறக்குமதிவரி முதலான வரிகளை மாந்தர், தாமே நேராகச் செலுத்தாமல், பிறர் மூலமாகச் செலுத்துகின்றனர். எவ்வாறு எனின், இறக்குமதிப் பொருள்கட்கு ஏற்பட்டுள்ள வரியை முதலில் வணிகர் கொடுக்கின்றனராயினும், அவர்கள், அவ்வரியை, பொருள்களின் விலையோடு சேர்த்து விற்கின்றனர்; அதனால், அப்பொருள்களை வாங்குபவர்களால் அவ்வரிப்பணம் அவர்களுக்குக் கிடைத்துவிடுகின்றது. ஆதலின், உண்மையில் அவ்வரியைச் செலுத்துபவர், பொருள்களை விலைக்கு வாங்குபவரே. ஆயினும், அவர்கள் 'இறக்குமதி வரி' என்று நேராக ஒரு வரி செலுத்துதல் இல்லை. இப்படிப்பட்ட வரிகள் பிறர்மூலமாகச் செலுத்துபவையாகும்.

நிலவரி செலுத்துபவர், பயிர்கள் அறுவடையாகும் காலங்களில் வரி செலுத்துதல் எளிது. அது கருதி, அக்காலங்களிலேயே நிலவரி வசூல் செய்யப்படுகின்றது. அதுவும் ஒருசேர ஒரே தடவையில் செலுத்துதல் எளிதன்று. ஆதலின், நிலவரியை அவ்வவ்விடங்களுக்குத் தக்கவாறு, பல தடவையிற் செலுத்தும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவ்வேற்பாடு, குடிகளுக்குச் சாலவும் நலமானதே.

உலகத்தில் எல்லா நாடுகளிலும் குடிகளிடமிருந்து வரி வாங்கப்படுகின்றது. ஆயின், வரிகளின் அமைப்பிலும்

முறையிலும் மாறுபாடு உண்டு. நமது நாட்டில், அரசாங்க வருமானத்திற்கு நிலவரியே முதன்மையானது. நிலவரியும், பிறநாடுகளில் பலவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறு யினும், எல்லா நாடுகளிலும், அரசாட்சி நடை பெறுதற்கு வரிகளே துணையா யிருக்கின்றன.

11. பாண்டவர் தூதன்-III

ஸ்ரீவாசுதேவர், வைகறையில் துயிலுணர்ந்து, காலைக் கடன்களை முடித்து, விதுரனுடன் உரையாடிக்கொண் டிருந்தார். அப்பொழுது, குருபதியின் ஏவலர் ஆண்டுக் குறுகி, அடியில் இறைஞ்சி எழுந்து நின்று, வேத்தவைக்கு எழுந்தருளுமாறு வேந்தன் விரும்பியதைத் தெரிவித்தனர். வாசுதேவர், காவலர் கூறியவுரையைக் கேட்டு, தம் சுற்றமும் தானையும் சூழ்ந்துவர, அரசவை அடைந்தார். அரசன், தூது வராய் வந்த மாதவரைமட்டும் அவைக்குட்புகவிட ஆணை யிட்டிருந்தான். அவ்வாறே வாயிற்காவலர் வாசுதேவரை உள்ளே விடுத்தனர். துரியோதனன் அவரை வரவேற்று, புதிதாக அமைத்த ஆதனத்தில் அமர்வித்தான்.

வாசுதேவர் அவ்வாதனத்து அமர்ந்ததும், அது நெறுநெறெனத் தகர்ந்து, கீழே நிலவறையில் வீழ்ந்தது. தவிசு கீழ் இழியவே, அதன் வஞ்சத்தை நெஞ்சத்துக்கொண்ட மாயவர், திருவடி அதலத்துப் பொருந்தவும், திருமுடி சேணுலகெய்தவும் நெடிய திருவுருவெடுத்து நிமிர்ந்தார்; அப்பொழுது, பன்னூறு கைகள் பல திசைகளிலும் பரவின; அவற்றுள், சில கைகள் வானுலகத்துத் தருக்களை முறித்தன ; சில கைகள் வாரிதிநீரை யள்ளின ; சில கைகள் வில்லை வளைத் தன; சில கைகள் கணையைத் தெரித்தன; சில கரங்கள் குந்தம் எறிந்தன ; சில கரங்கள் சங்கம் வாய்வைத்தன ; சில, சூலம் ஏந்தின; சில, தோமரம் தாங்கின. வாசுதேவர், தம் திருவடி

களை யூன்றி மிதித்தார். அதனால், அங்கிலவறைக்குள் மறைந்திருந்த பலவகை வீரரும், இடியேறுண்ட நாகங்களேபோல் ஒடுங்கி விழுந்தனர். வானவர் அஞ்சி யடங்கினர். அப்பொழுது முனிவர் கூட்டமும் தேவர் திரளும் தலைதாழ்த்தி,

'மாதவ னேமுனி யேல்;எமை ஆளுடை
வானவ னே முனியேல்;
யாதவ னேமுனி யேல்;இத யத்தில்
இருப்பவ னே முனியேல்;
ஆதவ னேமுனி யேல்;மதி வெங்கனல்
ஆனவ னே முனியேல்;
நீதவ னே முனி யேல்,முனி யேல்' என
நின்று பணிந் தனரே.

அப்பொழுது பீஷ்மர், திருதராஷ்டிரன், கன்னன் முதலான மன்னர் அனைவரும் எழுந்து, சிரமேற் கரங்குவித்து, பிழை பொறுத்தருளுமாறு வேண்டி வழுத்தினர். வாசுதேவர் தமது நெடிய திருவுருவை ஒடுக்கி, பழைய வுருக்கொண்டு ஒரு தவிசில் அமர்ந்தார். தேவர்கள் முதலான எல்லா உயிர்களும் அஞ்சிவணங்கி வாழ்த்தவும்,சுயோதனன் சிறிதும் அஞ்சினனல்லன்; ஆதனத்தில் நின்று எழுந்து வணங்கினனல்லன்.

இவ்வண்ணம் வணங்காமுடி மன்னன் இறுமாப்புடன் வீற்றிருந்ததை நோக்கிய வாசுதேவர், 'அரவக்கொடியோய், நீ என்னை மாய்க்க நினைத்தது நன்று நன்று! இப்பொழுதே நுங்களை யமலோகம் சேர்த்து விடுவேன்; ஆயின், அன்று நின்பால், "யான் படையெடுத்து அமர் செய்கிலேன்" என்று கூறிய வாய்மை பழுதாகுமே என்று, அது செய்யப் பின்னிடுகின்றேன். அன்றியும், பஞ்சவர் தனித்தனியே சொன்ன வஞ்சின மொழியும் பழுதாகும்' எனச் சினந்து மொழிந்து, அங்கு நின்று அகன்றார். அவரை மன்னர் பலர் பின் தொடர்ந்து சென்றனர். அவர், அவர்களுக்கு விடை கொடுத்

தனுப்பிவிட்டு, கன்னனைத் தம்மொடு கூட்டிச் சென்று, அவனை நோக்கி, 'அன்பனே, நின் வரலாற்றைக் கேள்; நீ, குந்திதேவியின் முதற் புதல்வனுவை; ஆதலின், நின் தம்பியர் ஐவரொடு கூடி வாழ்தலே தக்கது; அவரும் நினக்குக் குற்றேவல் செய்து, நின்னடிக்கீழ் நிற்பர்; நீயே பொன்முடி புனைந்து, புவியைப் புரப்பாய்' என்று நயம்பட நவின்றார். வாசுதேவர் அருளிய கனிவுரைகளைச் செவியுறக் கேட்ட கன்னன், 'பெருமானே, இன்று தமது திருவருளால் என்பிறப்புணர்ந்து பெரிதும் மகிழ்கின்றேன். ஆயினும், உடன்பிறப்பு என்னும் பாசத்தால், இதுபோழ்து யான் பாண்டவர் பக்கல் சேர்வேனுயின், பாரினுள்ளோர் பழி கூறுரோ! யான் இன்னவன் என்பது அறியப்படாத காலத்தில், என்பாற் பேரன்பு செலுத்தி, என்னைப் பெருவேந்தனுக்கி முடிசூட்டி, தன் செல்வமுழுதும் எனக்கு அளித்த அப்பார்த்திவனுக்கும் பாண்டவர்களுக்கும் பெரும்போர் நிகழ்வதாயுள்ள இவ்வமயத்தில், யான் அவனைப் பிரிந்து வேறுபடுதல் தக்கதோ!

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை,
செய்நன்றி கொன்ற மகற்கு'

என்னும் வாய்மை மொழியை மறக்கலாமோ! நீரே நும் திருவுள்ளத்து ஆராய்ந்தருள்வீர்' என்று இசைத்து இறைஞ்சினன். அச் செஞ்சொற்களைக் கேட்ட வாசுதேவர் வேறொன்றும் கூறுது, அவனை யனுப்பி விட்டு, தனியே ஒரு சார் இருந்த அசுவத்தாமனை நோக்கினர். நோக்கி, 'சிலையாசிரியன் செம்மலே, பாண்டவர் கானிலலைந்து, கரந்து வதிந்து, பதின் மூன்று யாண்டுங் கழித்து வந்தனர். அவர்கள் ஐந்து ஊர்களை வேண்டவும், இவன் மறுத்து விட்டான். இதற்கு நீயே சான்றுவாய். பாண்டவர்களின் நற்செயல்களை நீ நன்கு அறிவை; அவர்பால் நினக்கும் பேரன்பு உண்டு; ஆகலின், பாரதப்போர் நிகழ்கையில், அரவக்கொடியோன்

நின்னைச் சேனுபதியாகும்படி வேண்டினல், நீ அதற்கு உடம்படாவிடின், நின் அன்பர் ஐவரும் வெற்றிபெற்று அரசாள்வர்' என்று, இவ்வாறு பல மொழிந்து, தன் விரலாழியைக் கிழே வீழ்த்தினர். அதனை அசுவத்தாமன் எடுத்துக் கண்ண பிரான் கரத்தில் கொடுக்கையில், அவர், அதனை வாங்காது, 'பரித்தாமனே, இதுகாண், பரிதியைச் சூழ்ந்த ஊர்கோள்' என்று, வானத்தை நோக்கி நின்ருர். அவனும் அருக்கனை நோக்கினன். அச்செயலைக்கண்ட வேத்தவையோர், 'பாண்டவர் தூதன் பரித்தாமனையும் பிரித்தான்' என்று பகர்ந்தனர். மன்னர் மன்னனும், 'முனிமகன் செயல் நன்று! தூதுவனுய் வந்து, தனியே செல்லும் பொதுவனைப் புறம்போ யணுகி, மணியாழியைத் தொட்டுச் சூளுரைத்தான்; இனி அவன், நம்பால் வரினும் அவனை எங்ஙனம் நம்புவது!' என்று அவையினரை நோக்கி, இடியேறுபோல இயம்பினன். அரசனும் அரசவையினரும் அறைந்த சொற்கள் அசுவத்தாமன் செவியிற் படலும், அவன், 'இது கண்ணன் இழைத்த கைதவம்; இவர், என் உள்ளம் தெளியாது இவ்வாறு உரைத்தனர். "தெளிந்தான்கண் ஐயுறவு, தீரா இடும்பை தரும்" என்பதை அறிந்தாரல்லர்' என்று, தன்னுள் எண்ணி நின்ருன். அவ்வளவில், வாசுதேவர் அவனுக்கு விடையருளி, விதுரன் மனையை யடைந்தார்.

விதுரன் மனையை அடைந்த வாசுதேவர், வானவர் கோனை நினைத்தார். அவன், உடனே வந்து வணங்கி நிற்ப, அவனை ஒருதவிசில் அமர்வித்து அருளிச்செய்வார்: 'வேந்தே, விசயனுக்குப் பகையாகிய விடவரவு, கன்னன் கையில் உளது. அன்றியும், அவனிடத்துக் கவசமும் குண்டலமும் இருக்குமளவும், அவனை எவராலும் வெல்லுதல் அரிது. அவனல் நின் மைந்தன் மாய்வானுயின், ஏனையர் நால்வரும் மடிவர். அவ்வாறு நடைபெறுமேல், அவர்க்கே யன்றி, நினக்கும்

வசை நிலைபெறும். ஆகலின், நீ கன்னன்பால் சென்று, அவன் கவசகுண்டலங்களைப் பெற்று வருதி.

வல்லார் வல்ல கலைஞருக்கும்
மறைநூ லவர்க்கும் கடவுளர்க்கும்
இல்லா தவர்க்கும் உள்ளவர்க்கும்
இரந்தோர் தமக்கும் துறந்தோர்க்கும்
சொல்லா தவர்க்கும் சொல்பவர்க்கும்
சூழும் சமயா திபர்களுக்கும்
அல்லா தவர்க்கும் இரவிமகன்
அரிய தானம் அளிக்கின்றான்.

ஆதலின், அவனிடம், நீ மறையவ னுருக்கொண்டு சென்றால், நீ வேண்டியவற்றை அவன் வெறுப்பின்றி யீவான்; இதற்கு ஐயமின்று. காலந் தாழ்க்காது இன்னே விரைந்து செல்லுதி' என்று ஏவினர். இந்திரனும் அதற்கு உடம்பட்டுச் செல்வானாயினன்.

கண்ணபிரான் திருமுன் நின்று நீங்கிய வாசவன், நரைத்துத் திரைத்த முதிய மறையவன் வடிவுகொண்டு, தண்டூன்றி, குடை கவித்து, தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று, கன்னன் கோயில்வாயிலைக் குறுகினன். மறையவனைக்கண்ட வாயிலோர், 'அந்தணீர், எம் அரசர்,இரவலர் முதலியோருக்குத் தானம் வழங்கி, முற்பகல் கழித்து, இப்போழ்தே இங்கெய்தியுள்ளார்; ஆதலின், நீர் இன்று போய், நாளை வாரும்' என்றனர். அவற்றைக் கேட்ட மறையவன், மனம் தளர்ந்து வருந்திக் கூறினன். அச்சொல் செவியிற் படலும், கன்னன், அம் மறையவனை உள்ளே புகவிடுமாறு பணித்தான். உடனே அவ்விருத்தவேதியன் உள்ளே செல்ல, அவனைக் கண்ட கன்னன், அடியில் விழுந்து எழுந்து, முகமன் கூறி, இறைஞ்சி நின்றான். அப்பொழுது அந்தணன், 'வள்ளலே, யான் விரைந்து வந்தும், என் தளர்ச்சியினால்

இத்துணை நேரமாயிற்று' என்று வருந்தியுரைக்க, கன்னன், 'அது கருதிக் கவலைப்பட வேண்டா; விரும்பியவற்றை விளம்பும்' என்றான்.

கன்னனது வாய்மையைக் கேட்ட கள்ளமறையோன், 'நினது கவச குண்டலங்களைத் தருதி; அவையே சாலும்' என வேண்ட, அவ்வளவில் ஒன்றும் கூறாது, தன் ஆருயிரன்ன அவற்றைக் கழற்றி அளித்தான். அவ்வருங் கொடையைக் கண்டுவியந்த விருத்தன், உடனே தன் உண்மைவடிவைக் காட்டி நிற்ப, கன்னன் கண்ணாரக் கண்டு களிகூர்ந்தான். அப்பொழுது வாசவன், கன்னனது வள்ளற் றன்மையைப் புகழ்ந்து, ஒரு வேற்படையை அவன் கையில் கொடுத்து, 'இது, நினக்கு வெற்றியைத் தரும்; இதனை அருச்சுனன்மேல் ஏவற்க; கடோற்கசன்மேல் எறிக' என்று கூறி, அதற்குரிய மந்திரமும் ஓதி, வாழ்த்தினன். கன்னன் வணங்கி அதனைக் கைக்கொண்டான்.

பின்னர், வாசவன், வாசுதேவரைச் சார்ந்து நிகழ்ந்தன கூற, அவரும், கன்னனது அருங்கொடையைப் புகழ்ந்து கொண்டாடி, 'இனி, பாண்டவர் வெல்வர்! யான் விஜயனை விஜயனாக்குவேன்!' என்று வேந்தனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, குந்தி தேவியின் கோயிலை யடைந்தார்.

வாசுதேவர் அங்குச் சென்று, குந்திதேவியை அனுப்ப, அவள் தினகரன் புதல்வன் திருமனையைச் சேர்ந்தாள். அம்மையின் வரவைக் கண்ட கன்னன், அடியில் வணங்கி, 'வந்த காரியம் என்?' என வினவ, குந்தி தேவி, 'யான் நின்னை ஈன்ற தாய்காண்!' என்று, முன் நடந்த செய்தி நவின்று வருந்தினள். அம்மொழிகளைச் செவியுற்ற கன்னன், 'இது, மாயவன் இழைத்த வஞ்சகம்' என்று உட்கொண்டு, குந்தி தேவியைத் தன் அன்னை எனத் தெளிந்து, 'நீர் விரும்பியதை வேண்டிக் கொள்ளுதிர்' என்று இறைஞ்சி நின்றான். அன்னை, தன்

அருமந்த மைந்தனை நோக்கி, 'என் செல்வமே, நீ நின் துணைவர்களாகிய பாண்டவர்களுடன்கூடி, ஒற்றுமையுடன் வாழ்தி; அவர் நின்னடிக்கீழ் நின்று, நின் ஏவல்செய்து ஒழுகுவர். நீ மணிமுடி சூடி மன்னர் மன்னனாய் விளங்குவை' என்று வேண்டி நின்றாள். கன்னன் அவற்றைக் கேட்டு, 'அன்னையே, பெற்ற தாயாகிய நீயே பற்றில்லாமல் கைவிட்டாய்; அன்று முதல் இன்றுவரை என்னைத் தன் ஆருயிர்போல நேசித்து, அரசனாக்கிய அன்பனை இன்று அகன்று வருதல் அறநெறி யாமோ? அன்றியும்,

திடம்படுத் திடுவேல் இராச ரா சனுக்குச்
சேருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே எனக்கினிப் புகழும்
கருமமும் தருமமும்' என்றான்.

இவ்வாறு தன் கருத்தை வெளியிட்ட கன்னன், பின்னும் அன்னையை நோக்கி, 'நீர் வந்த செய்தியை உள்ளபடி உரைத்தருளும்' என்று வேண்ட, குந்திதேவி, கண்ணீர் சொரிந்து, வாய் குழறி, நாத் தழுதழுத்து, ஏங்கி நின்றாள். கன்னன், தாயின் கண்ணீர் துடைத்துத் தேற்றி, 'விதிவலியை யாரால் விலக்க முடியும்; வருவது வந்தே தீரும்; அதுபற்றி அவலங் கொள்ளாதீர்; நீர் வேண்டுவதை வேண்டியவாறே விருப்புடன் தருவேன்; கேளும்' என, குந்திதேவி, 'வீரனே, நின்னோடு பார்த்தன் அமர்புரியுங் காலத்து, நின்பாலுள்ள அரவக் கணையை அவன்மேல் ஒருமுறையேயன்றி மறுமுறை எய்யலாகாது; அன்றியும், மற்றையோரை மலைதலாகாது. இவ்விரண்டு வரமே யான் வேண்டுகின்றேன்' என்று வேண்ட, தாயின் தன்மையை அறிந்த வள்ளியோன், 'அன்னையே, அருச்சுனன், யான் முதலில் ஏவும் கணைக்குப் பிழைத்துக் கொள்வானாயின், இரண்டாம்முறை அவன்மீது அதனை ஏவமாட்டேன்; அங்ஙனம் மறுமுறை தொடுப்பது ஆண்மையும் அன்று; அறமும்

அன்று. மற்றவரை யான் மலைவதில்லை' என்று அவ்விரண்டு வரமும் நல்கியபின், தாயை இறைஞ்சி வேண்டுவான் : 'அன்னையே, தாமும் அடியேனுக்கு, இரண்டு வரம் தந்தருள வேண்டும். அவை யாவை யெனின், பாரதப்போர் முடியுமளவும், யான் உமக்கு மகன் என்னும் உண்மையைப் பாண்டவர்களுக்கும் அறிவியாதிருப்பது ஒன்று; மற்றொன்று, ஒருவேளை யான், விஜயனால் வீழ்ந்து படுவேனாயின், அப்போது போர்க்களத்திற்குச் சென்று, யான் உமக்கு மகன் என்பது அனைவரும் அறியுமாறு அறிவிப்பது. இவ்விரண்டு வரமும் எனக்கு அருள்புரியும்' என்று தொழுது நின்றான். மைந்தன் மனநிலை அறிந்த மாதா, மனங்கரைந்து, 'அந்தோ, யான், நினக்கு முன் மாயும் பேறு பெறுதல் நேரிது' என்று மிகவும் இரங்கி, பின்னர், மைந்தன் வேண்டியவற்றை வழங்கி, தன் மனையை யடைந்தாள்.

நடந்தவற்றைக் குந்தி தேவியால் அறிந்த வாசுதேவர், 'நாம் எண்ணியது முடிந்தது' என்று மகிழ்வு கொண்டு, அவளிடம் விடை பெற்று மீண்டு, தம் பரிசனங்களுடன் கூடி வழிக்கொண்டு, யுதிஷ்டிரர்பால் அடைந்தார். கண்ணபிரான் வரவை எதிர்நோக்கியிருந்த பாண்டவர்களுக்கு, அவர், தாம் தூது சென்று கேட்டதும், துரியோதனன் மறுத்து மொழிந்து போர் செய்யத் துணிந்ததும் கூறி, மகிழ்வித்தார்.

12. சரீர நோயால் மனநோயுண்டாகும்

சாதாரணமாகப் பிள்ளைகள், காலையில் எழுந்து வீட்டுக்கு வெளியே சென்று, நல்ல காற்றை உட்கொண்டு, பாடசாலைக்குப் போனால், அவர்களுக்குப் பாடம் படிக்க அதிக உற்சாகம் உண்டாகும். அப்படியே இரவில் அயர்ந்து நித்திரை செய்து, காலை உணவு நன்கு புசித்தால், பள்ளிக் கூடத்திற்குப் போகப் பிள்ளைகளுக்கு அதிக சந்தோஷகரமாகும். இராத்திரியும் நன்ருய்த் தூங்காமல், காலையிலும் உணவு இல்லாமற் போனால், ஒரு வேலையிலும் உற்சாகம் பிறப்பதில்லை. இவைகளைப் பார்த்தால், தேகத்திற்கு நன்மை செய்கின்றவை எவையோ, அவைதாம், நினைப்புக்கு ஏதுவான உறுப்புக்களுக்கும் நன்மை செய்கின்றன என்று தெரியவருகிறது.

நினைப்புக்கு ஏதுவான இந்திரியமானது, அதி மெதுவான வெளுத்த ஒருவகைப் பொருளோடு ஏதோ ஒருவகையாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றது. அந்தச் சம்பந்தம் இப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியாது. அந்தப் பொருளை அதற்குத் தக்கதான ஒரு மூடி, யாதொரு தீங்கும் நேராதபடி கவிந்துகொண் டிருக்கின்றது; அந்த மெதுவான பொருள் தான் மூளை; அதைக் கவிந்து கொண்டிருப்பது கபாலம். எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானம் என்று நன்ருய் விளங்குதற்குத்தான், இந்தப் பொருள், நமது உடலில் உயர்ந்த இடமான சிரசில் அமைக்கப்பட்டிருப்பதுபோ லிருக்கிறது. அதை நாம் சீராய் உபயோகித்தால், நமக்கு எதுவும் ஈடில்லையென்று சொல்லும்படி, சிறந்த கருத்துக்களை உண்டாக்கத் தக்க திறமையுண்டாகும். அப்படியின்றி, அநீதமாய் உபயோகித்தால், மந்த புத்தியும் மடமையும் ஏற்படும்.

மூளை, நாம் நினைப்பதற்கு ஏதுவாயிருக்கிறதென்பது மாத்திரமேயல்ல, நமது உணர்ச்சிக்கும் அதுவே காரணம். மூளை மந்தப்பட்டுப் போமாகில், உடலில் உணர்ச்சி இராது. அறுத்தல் குத்தல் முதலிய வைத்தியங்கள் செய்யும்போது, மூளை யடங்கிக் கிடக்குமாயின், அவைகளால் உண்டாகும் நோவு எள்ளளவும் நமக்குத் தெரியாது. நமது உடலின் அந்த அந்த அவயவங்களில் உணர்ச்சியும் அசைவும் உண்டாகும்படி, மூளைக்கும் அந்த அவயவங்களுக்கும் நடுவே நரம்புகள், தந்திகள்போலக் கட்டப்பட்டிருக்கின்றன. அவை, மின்தபாலிலுள்ள கம்பிகள்போல, மூளையின் செய்தியை அந்தந்த உறுப்புகளுக்குத் தெரிவிக்கவும், உறுப்புகளில் நடக்கும் செய்திகளை மூளைக்குத் தெரிவிக்கவும் ஏதுவாயிருக்கின்றன.

நாம் கையை அசைக்கவேண்டும் என்று நினைத்தால், அந்தச் செய்தியை, மூளை, நாடிகளின் மூலமாகக் கைக்குத் தெரிவிக்கின்றது; பிறகு அந்தக் கட்டளைப்படியே, கை அசைகின்றது. நடுவே கம்பி யறுந்து போனால் மின்தபால் செய்தியை எப்படி அப்புறம் போகச் செய்யாதோ, அப்படியே நரம்புகள் நடுவே துண்டாய்ப் போனால், மூளை, தான் கருதியபடி கையை அசைக்க முடியாது.

உடலில் எங்கேயாவது கொஞ்சம் காயப் பட்டால், அந்த உறுப்பிலிருக்கும் நரம்பு, அந்தச் செய்தியை உடனே மூளையில் அண்ட விடுகிறது. அதன்பிறகுதான், அந்த இடத்தில் நோவென்று நமக்குத் தெரியும். அந்த அவயவத்திற்கும் மூளைக்கும் நடுவே இருக்கிற நரம்பு அறுந்து போனால், நமக்கு நோவே தெரியாது. சிலர் திமிர்வாதம் பிடித்து உறுப்புக்களில் உணர்ச்சியே இல்லாமலிருப்பதை நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோமே; அவயவங்களோ, அல்லது, மூளையோ

ஒன்றுக்கொன்று நரம்பின் வழியாகச் சங்கதிகளைத் தெரிவிக்கக் கூடாமல் பலவீனப்பட்டு, நோய்பிடித்துப் போவதினுலேயே அப்படியாகிறது.

இந்த நரம்புகளுக்கெல்லாம் மூலமான நரம்பு, முதுகெலும்புக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றது. அது மூளையிலிருந்து வருகிறது. முதுகெலும்பிலிருக்கிற சிறிய துவாரங்களின் மூலமாய், அது பல சிறு நரம்புகளாகக் கிளைக்கின்றது. எந்த உறுப்புக்கு அதிகமாய் உணர்ச்சியும் அசைவும் தேவையோ, அங்கே நரம்புகள் அதிகமாய்க் கூடியிருக்கக் காணலாம்.

மனம் விஷயங்களை ஆராய்வதற்கு, மூளை செய்யும் உதவி இவ்வகையென்று நமக்குத் தெரியவில்லையாயினும், மூளை, செம்மையா யிராவிடில், ஆலோசிக்கிற சக்தி குறைந்து போகிற தென்பது மாத்திரம் நமக்கு நன்ருய்த் தெரிகிறது. அப்படியே, சரீரத்தைச் சுகமாய்ப் போஷிக்கின்ற உடற்பயிற்சி, ஓய்வு, சுத்தமான ரத்தம் சரீரத்தில் பரவுதல், முதலியவைதாம் மூளையையும் செம்மைப் படுத்தி, நன்கு உபயோகமாகும்படி செய்கின்றன என்பதுந் தெரிகிறது.

கூட்டங்கூடிய இடங்களிலாவது, ஒடுக்கமான அறைகளிலாவது இருந்து நாம் கெட்ட வாயுவை உட்கொண்டால், அதனுல் உண்டாகும் தீமை உடனே நமது மூளைக்குத் தெரிகிறது. தலைவலி யுண்டாதலினுல் புத்தி மந்தப்படத் தலைப்படுகின்றது. அதன் பிறகு ஒன்றை நினைப்பதென்ருல் தலைச்சுமையாய்த் தோன்றும். அந்தக் காற்று முழுதும் கெட்டுப்போயிருக்குமாயின், ஆயாசம் களைப்பு முதலியவை யுண்டாகும். அதன்பிறகு, நினைக்கிற சக்தி முழுதும் அற்றுப்போம். இவ்வாறு அநேகர், சபைகளுக்கும் கூட்டங்களுக்கும்போய், நல்ல காற்றில்லாமையால் களைத்து மதிமயங்கி, மறுபடி வெளியே கொண்டுவந்து விட்டபிறகு, நல்ல காற்றை உட்கொண்டு,

கொஞ்சநேரங் கழித்து மூர்ச்சை தெளிந்தார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

கெட்ட காற்றுள்ள இடத்திலேயே எப்போதும் வாசஞ் செய்துகொண்டு இருப்பவர்களுக்கு, மூளையில் ஒருபோதும் சுத்த ரத்தம் வந்து சேராமையால், அவர்கள் பலவீனப்பட்டு, தீராநோய்களுக்கு ஆளாகின்றனர். நரம்புகளில் வலியுண்டாகும்; மதி மயங்கிப்போம். ஒருவகைக் கெட்ட தலைநோயுண்டாகும்; பிறகு அவைகளைப் போக்குவது வருத்தம்.

மூளைக்குச் செல்லும் ரத்தத்தில் வேண்டுமளவு சாரம் இல்லாவிட்டாலும், வேண்டுமளவு உணவில்லாவிட்டாலும் இத்தன்மையான நரம்பைப் பற்றிய நோய்கள் உண்டாகும். உட்கொண்ட உணவு ஜீரணமாகாவிட்டாலும் உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உட்கொண்டாலும் மதிமயக்கம் முதலிய கெடுதிகள் உண்டாகும். ஏனெனில், அதனால் செம்மையான அன்னரசம் உண்டாவதில்லை. அஃதில்லாமற்போனால் அதனாலுண்டாகும் ரத்தம் செம்மையாய் மூளையிற் பரவி, புத்தியை நன்றாய் விளங்கச் செய்வதில்லை.

குடியன் ஒருவன், வீட்டுக்குத்தலைவனாயிருந்தால், அவன், குடியினால் மூளை பலவீனப்பட்டு, தன்புத்தி தனக்குத் தெரியாமல், தன் பெண்டுபிள்ளைகளை வாயில்வந்தபடி திட்டத் தலைப்படுகிறான். அவன் எப்போதும் ஓய்வில்லாமல் திட்டுவதை வீட்டுக்காரி பொறுக்கமாட்டாமல் அவளும் எதிரே பிதற்றுகிறாள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளைகள் அப்படியே தாங்களும் நடக்கிறார்கள். கடைசியில் அந்த வீடு, அடங்கி அமைதியாய் இருப்பதை விட்டு, எப்போதும் சண்டையும் சச்சரவும் இரைச்சலும் உள்ளதாகிறது.

உடலின் மற்றப் பாகங்களைப் போல மூளைக்கும் பயிற்சி அவசியமானது. நம் கைகால்களை நாம் செம்மையாய் உபயோகிக்கா விட்டால், அவை உறுதியாய் வளரா;

அதுபோலவே, மூளைக்கும் சரியான வேலை கொடாவிட்டால், அதுவும் செவ்வையாய் வளராது.

நாம் பாடசாலைக்குப் போவது, படிப்பதற்கு மாத்திரமே யன்று; நமது வாழ்நாள் முழுதும் நாம் செய்யவேண்டிய நல்ல காரியங்களைச் செய்து முடிக்க வேண்டிய நல்ல வழிகளெல்லாம் நமக்கு நன்றாய்த் தெரியும்படி, நமது மூளையைச் செவ்வையாய்ப் பயிற்சி செய்வதற்கும் அது உபயோகமாகும். ஒருபோதும் ஒன்றையும் சிந்தியாமல், மனத்தைப் பிறந்த வடிவமாக வைத்துக் கொண்டிருப்பவன், ஒரு நாளும் நல்ல வழிக்கு வரமாட்டான்.

ஆதிமுதல் தங்கள் புத்தியைக் கூர்மையாக்கிக்கொண்டு வருகிறவர்கள், ஒருபோதும் கெட்டுப்போவதில்லை. ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள்: சாதாரணமாய்ப் பயித்தியக்கார மடத்திற்கு வந்து சேருகிற பித்தர்கள், பெரும்பாலும், படிக்கப் பாடசாலை யில்லாமல், அடிநாளில் தங்கள் காலங்களை வீணாகக்கழித்து, பின்பு ஒன்றுஞ் செய்யத் தோன்றாமல் இருப்பவர்களே; சிறந்த இடங்களி லிருக்கிற மனிதர்களை அங்கே காண்பதரிது. அவர்கள் விசேஷமாய்ப் படித்து, புத்தியை நன்றாய்க் கூர்மைசெய்து, எப்போதும் தேகமும் மனமும் உழைக்கும்படி பயின்றிருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டிய சகல காரியத்திலும், நமது புத்தியை நன்றாய்ச் செலுத்தி ஆலோசிப்பதுதான், மூளையின் பயிற்சியாம்.

நமக்கு வேண்டியவைகளைப் படிக்கவும், நல்ல மாதிரிகளை அப்பியாசஞ் செய்து கொள்ளவும் இளமைப் பருவமே தக்க தருணம். ஏதாவது ஒரு வர்த்தகத் தொழிலில் பிரவேசிக்க வேண்டுமென்ற கருத்துடையவர்கள், தங்கள் உறுப்புக்களெல்லாம் முதிர்ந்து போகாமல், இளமையாயிருக்கிற காலத்திலேயே வேண்டிய வேலைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

'செடியில் வணங்காதது மரமாய் வணங்குமா?' அப்படிப் பழக்கிக் கொள்ளாமல் முதிர்ந்து போவார்களானால், பிறகு உடம்பு வணங்கி வேலை செய்வது தலைச்சுமையா யிருக்கும். மூளையின் குணமும் அப்படிப்பட்டதுதான். அது கொஞ்ச காலம் வரையில்தான் வளர்ந்து கொண்டிருக்கும்; பிறகு ஒரே நிலையில் நின்றுபோம்.

நாம் வாலிபத்தில் மூளையை எவ்வளவு நன்றாய்ப் பயிற்சி செய்விக்கிறோமோ, அவ்வளவுதான் அது நமக்குப் பிற்காலத்திலும் உபயோகப்படும்; இளமையில் நாம் எதையும் சுலபமாயும் சீக்கிரமாயும் கற்கக்கூடும். மூளை ஒரு நிலையில் நின்று உறுதிப்பட்டுப்போனால், முடியாது. அப்படிப் பட்ட நல்ல பருவத்தை யெல்லாம் ஒரு வேலையுமின்றி வீண் போக்கி விட்டால், பிற்காலத்தில் பலவித சங்கடங்களும் வந்து வருத்தும்போது, அவைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய வழி தெரியாமல் வருத்தப் படுவோம்.

பிள்ளைகளாகட்டும், பெண்களாகட்டும், தங்களுக்குப் பிற்காலத்தில் அறிவும் ஆலோசனையும் இல்லாவிட்டால், மிகவும் சங்கடம் நேருமென்று மாத்திரம் முன்னரே அறிந்திருப்பார்களானால், காலத்தை வீண் போக்காமல், பிற்காலத்திற்கு உபயோகமாகும் வழிகளில், மனத்தைப் பயிற்றுவதிலேயே கண்ணுயிருப்பார்கள்.

மூளைக்கு உழைப்பு எப்படி அவசியமோ, அப்படியே ஓய்வும் அவசியமானதென்று, சிறு பிள்ளைகளுக்கு நாம் சொல்ல வேண்டுவதில்லை; ஏனெனில், அவர்கள் கடினமாய்ப் பிரயாசை எடுத்துக்கொண்டு வருந்திப் படிப்பது அருமையா யிருக்கும்; மனத்துக்கு ஓய்வு கொடுக்கும்படி இராத்திரிகாலங் களில் நித்திரைசெய்வதில் அவர்களுக்கு ஆசை அதிகம் அல்லவா? அப்படியே பகற்பொழுதிலும் மூளை வேலை

செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டிய காலமும்உண்டு. வயிறுநிரம்பப் புசித்தவுடன் மூளையை அதிகமாக வருத்தக் கூடாது.

மூளை, இரைப்பை இரண்டும் ஒரே காலத்தில் வலிந்து வேலை செய்யக்கூடாது; அப்படியாயின் அவைகளுக்குச் சேதம் உண்டாகும். இரைப்பை, இரையைச் செரிப்பிக்கிற பொறுப்பிலிருக்குங் காலத்தில், மூளையும் ஆலோசிக்கிற வேலையில் பொறுப்பா யிருக்கக்கூடாது. ஏனெனில், உடலில் ஏதாவது ஓர் உறுப்பு, அவசியமாய் ஒரு வேலை செய்ய வேண்டி யிருந்தால், அதற்கு வேண்டிய நரம்புகளின் வலிமையை, மூளை, அவ்விடத்திற்குப் போகும்படி செய்கிறது. அந்த வேலை செய்வதற்குப் போதுமான பலம் உண்டாகும்படி அளவுக்கு அதிகமான ரத்தமும் அவ்விடத்திற்குப் போய்ச் சேரும்.

ஆகாரம் ஜீரணமாகவேண்டுமானல், மூளையிலிருந்து நரம்புகளின் முயற்சி அதிகமாய் இரைப்பைக்குள் வந்து சேருகின்றது. ஜீரணமாவதற்கு வேண்டிய சூடும் சுறுசுறுப்பும் உண்டாகும்படி அந்த நரம்புகளின் வழியாய் அபரிமிதமான ரத்தம், ஜீரணமாகிறவரையில் அவ்விடத்திற்கு வந்து கொண்டிருக்கும். அதனல் ஜீரணமாகிற காலத்தில் மூளையிலும் மற்றப் பாகங்களிலும் நரம்புகளின் முயற்சி குறைந்திருக்கும். நாம் வயிறு நிரம்பப் புசித்தவுடன் உடலில் குளிர்ச்சியும் மந்தமும் உண்டாகின்றனவே; நரம்புகளின் முயற்சியும் ரத்தமும் மூளையிலிருந்து அதிகமாய் இரைப்பைக்குப் போய்விடுவதனலேதான் அப்படியாகின்றது.

இரைப்பை போலவே, மூளையும் கடினமாய் நினைக்கிற வேலையில் இருக்குமானல், ரத்தமெல்லாம் இரைப்பையை விட்டு விட்டு, மூளைக்குப் போய்ச் சேருகின்றது. அதனல் ஜீரணமாவது நின்றுபோய், இரைப்பையும் அதைச் சேர்ந்த உறுப்புக்களும் கெட்டுப்போகின்றன.

நாம் புசித்துக்கொண்டிருக்கிற காலங்களில், ஏதாவது துக்க சமாசாரங்களாவது, அல்லது, நமது மூளையைத் தாண்டிவிடத்தக்க வேறெந்தச் செய்தியாவது நாம் கேள்விப்பட்டால், உடனே பசி மந்தித்து, ஜீரணசக்தி அடங்கிப் போவது நமக்குத் தெரிந்திருக்கிறதல்லவா? அது, பாதி நரம்பு சம்பந்தத்தாலும், பாதி ரத்தமெல்லாம் திடீரென்று இரைப்பையை விட்டு மூளையில் போய்விடுவதாலும் உண்டாகின்றது. அப்படியே பூர்த்தியாய்ப் புசித்தபின்பு வேகமாய் நடந்தாலும், கடினமாக வேலை செய்தாலும், வருந்திப் படித்தாலும் அநேகமாக அஜீரணம் உண்டாகும். ஆகையால், பகற்பொழுதிலும், போஜனமான பின்பு, சிறிது நேரம் சும்மா இருப்பதே நலம்.

13. சில வழக்கங்கள்

உலகத்தில் எல்லா நாடுகளிலும் மாந்தர் வாழ்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு வகுப்பினர் உளர். ஒவ்வொரு வகுப்பினருக்கும் சில செயல்கள் இயல்பாக அமைந்துள்ளன. நாம், நம்முடைய வழக்கங்களும் கொள்கைகளுமே சிறந்தவை எனக் கருதுகின்றோம்; பிறருடைய வழக்கங்களும் கொள்கைகளும் இழிந்தவை என எண்ணுகின்றோம். இவ்வாறே ஒவ்வோர் இனத்தவரும் தத்தம் வழக்கங்களை உயர்வாகவும், பிறர் வழக்கங்களை இழிவாகவும் கருதுகின்றனர். இது, மக்களுக்கு இயற்கையான குணமேபோல் அமைந்திருக்கின்றது. நாம், சில வகுப்பினரின் வழக்கங்களை அறிவோமாயின், நமக்கு மிக்க வியப்பு உண்டாகும். அப்படிப்பட்டவற்றுள் சிலவற்றை இங்கே கூறுகின்றோம்:

ஒரிஸாவில், கொண்டர்கள் என்னும் ஒரு வகுப்பினர் இருக்கின்றனர். அவர்களுள் மணம் நிகழுங்காலத்தில், மண

மகன், தன் சுற்றத்தார் பலருடன் சென்று, மணமகளைத் தன்னுடன் கொண்டுசெல்வான். அப்பொழுது மணமகளைச் சேர்ந்த இளமகளிர் ஒருங்கு கூடி, அவளை மீட்டு வருதற்கு முயலுவதுபோல நடித்து, கற்களையும் தடிகளையும் அவர்மேல் எறிந்து கூச்சலிடுவர். மணமகன் தன் இல்லம் அடையும் வரையிலும், சில மகளிர் பின்தொடர்ந்து செல்லுதல் வழக்கம். அதனைக் கண்ணுறும் பிறர், அங்கு ஏதேனும் கொடுஞ் செயல் நிகழ்கின்றதோ என்று ஐயுறுவர்.

காருவர் என்னும் இனத்தவரில்,மகட்பேசி உறுதிசெய்த பின்னர், மணமகள் சிலவகைச் சிற்றுண்டியை எடுத்துக் கொண்டு, ஒரு காட்டினுட்சென்று மறைந்திருப்பாள். மணமகன், சிறிதுநேரத்தின் பின், அவளைத் தேடிச் செல்பவன் போலச் செல்வான். அவள் மறைந்திருக்குமிடம் அவனுக்குத் தெரியுமாதலின், அலைந்து திரியாமலே, அவளைக் கண்டுகொள்வான். அவர்கள் இருவரும் மூன்று நான்கு நாட்களின்பின், தங்கள் உறவினர் இருக்கும் இடத்திற்குப் போய்ச் சேருவர். அங்குக் கூடியிருந்த இருதிறத்தாருக்கும் விளையாட்டாகப் போர் நிகழும். அப்போர் முடிவுற்ற பின்னரே, மணம் நிறைவேறும்.

ஆபிரிக்காவில் வசிக்கும் மாண்டினர் என்னும் வகுப்பினரில் மணமகன், தான் விரும்பும் பெண்ணின் தாயினிடம் முதலில் அனுமதி பெறவேண்டும். பின்னர், குறித்த நாளின் மாலைப் பொழுதில், மணமகள் அரிசியைச் சுமந்துகொண்டிருப்பாள்; மணமகன் அங்குச் சிலருடன் சென்று, அவளைத் தூக்கிக் கொண்டு போய்விடுவான். அப்பொழுது அப்பெண் பொய்யாகக் கூச்சலிடுவதும் கதறுவதும் வழக்கமாம்.

மலைய நாட்டில் வாழும் கானவர்களுள் மணவினை நிகழ்கையில், இனத்தார் அனைவரும் கூட்டங்கூடுவர். அவர்களுக்குமுன், தரையில் ஒரு பெருங்கோடு கீறப்பட்டிருக்கும்.

மணமகள் அதன்மேல் சிறிது ஓடியபின், ஆடவன் ஓடிச் சென்று, அவளைப் பிடிக்க முயல்வான்; அவன் அவளைப் பற்றியபின் மணவினை நிகழும்.

நாகரிகமடைந்த மக்களுக்குள் நடைபெறும் மணவினை முறைகளே நமக்குப் புதுமையாகத் தோன்றும். அங்ஙனமாக, அநாகரிக மக்களின் இம்மணமுறைகள் நமக்குப் புதுமையாகத் தோன்றுதலில் வியப்பென்னே!

இவற்ருல், பண்டைக்காலத்தே மக்களிடையில் நிகழ்ந்த மணமுறை அறியப்படுகின்றது. அக்காலத்தில் ஆடவர், தாம் விரும்பிய மகளிரைத் தம்வலிமையினல் உடன்கொண்டு செல்வர். அதனை அறிந்து அவள் சுற்றத்தார் தொடர்ந்து சென்று, போர்தொடங்குவர். போரில் வென்ருனயின், அவன் அவளை மணந்துகொள்வான். இவ்வழக்கு, நமது நாட்டிலும் முன்னட்களில் நடைபெற்று வந்தது என்பது இதிகாசங் களால் அறியப்படுகின்றது.

ஐரோப்பியர்களில் மணமுடிந்த பின், மணமக்கள் தங்கள் உறவினரை நீங்கி, வேறு நகரங்களிற் போய்ச் சில மாதங்கள் வசித்திருப்பர். அவர்கள் புறப்பட்டுச் செல்லுகை யில், அவர் மனையில் பலர் கூடி, பழஞ் செருப்புக்களை அவர் மேல் எறியும் வழக்கம் இன்றும் நடைபெறுகின்றது. மலையாள தேசத்தில் உள்ள ஒருவகை மாப்பிள்ளைமார்க ளுள், மணமக்கள்மீது பழத்தோல் முதலியவற்றை எறி வது வழக்கம். இவ்வாறு ஒவ்வோர் இனத்தவருள்ளும் நிகழும் சில வழக்கங்கள் நமக்கு வியப்பை விளைப்பனவாகும். அமெரிக்காவை யடுத்துள்ள 'ஸார்லட்டு' என்னும் தீவில் வசிப்பவர்களுக்குள் மணம் என்பதே நடைபெறுதல் இல்லை. ஆஸ்திரேலியாக் கண்டத்திலும் முற்காலத்தில் மணவினை நிகழ்தல் இல்லையாம். நிற்க, இனி, சில நாடுகளில் மகப்

பெறும் தாய்க்கும், மகவின் தந்தைக்கும் நடக்கும் முறைமையைச் சிறிது கூறுவாம்:

பர்மா தேசத்தில் மகவினைப் பெற்ற மாதாவின் உடல் முழுவதும் மஞ்சள் பூசி, கம்பளி முதலானவற்றை அவள் மேற் போர்த்தி, அவளுக்கு அருகில் கனல் மூட்டுவர்; கற்களை நன்றாகச் சுட்டு, அவள் அருகில் வைப்பதும் உண்டு. மருத்துவச்சி, அவளுக்கு ஏழு நாள் வரையிலும் ஒருவகை மருந்து கொடுப்பாள்; அவள் படுக்கையிற் கிடந்தபடியே அதை உட்-கொள்ள வேண்டும். ஏழாம் நாளில், கொதிக்கக் காய்ச்சிய வெந்நீர்ஜாடியின்மேல் போர்வைகளுடன் அவளை உட்கார வைப்பர். ஒருமணி நேரத்தின்பின் தண்ணீரில் அவளைக் குளிப்பாட்டுவார்கள். அதன் பின்னரே அவள் தன் விருப்பம்போல் எங்கும் திரியலாம். இச் செயல்களினால் தாய்மார் பலர் ஆபத்துக்கு உள்ளாகின்றனர்.

அமெரிக்காவிலுள்ள மேற்கு இந்தியத் தீவுகளின் பக்கத்திலிருக்கும் கரீபர் என்னும் ஜாதியாரில், மகப்பெற்ற தாய், தன் வழக்கம்போல் வேலை செய்யவேண்டும்; ஆனால், அவள் கணவன் பிணியாளன்போற் படுக்கையில் கிடக்க வேண்டும். அவனைக் காண்பதற்குச் சுற்றத்தார் பலரும் வருவர். அவன், முதலில் ஐந்து நாட்கள்வரையில் யாதோர் உணவுமின்றிப் பட்டினி கிடக்கவேண்டும். பின்னர் ஐந்து நாட்களில் ஒருவகைப் பானம் மாத்திரம் அவனுக்கு அளிப்பர்; பின்பு ஒரு திங்கள் அளவும், பானத்தோடு ஒருவகைக் கிழங்கையும் கொடுப்பர். நாற்பதாம் நாளில் அவ்வீட்டில் ஒரு விருந்து நடைபெறும். விருந்தாளிகள் ஒவ்வொருவரும் எலும்புகளாலும் தந்தங்களாலும் அவனுடம்பிற் குத்தி, உதிரம் பெருகச் செய்வர். அதன்பின்னர், மிளகு சேர்த்துக் காய்ச்சிய வெந்நீரால் அவனை நீராட்டுவர். ஐயோ, பாவம்! அவ்வெந்நீர், புண்களிற் படுகையில் அவனுக்கு எத்துணைத்

துன்பம் உண்டாகும்! அவ்வமயத்தில் அவன் வாய்விட்டுக் கதறி அழலாகாது. அழுவானாயின், அவனைப் பாவி என்றும், கோழை என்றும் ஏளனம் செய்வர். விருந்து நடந்து சில நாட்களாயின பின்னர், அவனை எழுப்பி உலாவ விடுவர். இந்த விரதத்தில் ஏதேனும் தவறு நேருமாயின், மகவிற்குத் தீங்கு நேரும் என்பது அவர்கள் நம்பிக்கை. அக்காலங்களில், நண்டையோ, ஆமையையோ தந்தை அருந்தி விட்டால், குழவி செவிடாயும் அறிவிலியாயும் போகும் என்று கருதுகின்றனர்.

தேன் அமெரிக்காவின் சில இடங்களில் வசிப்பவர்களுக்குள், மகப்பிறந்த நாள்தொடங்கி சில நாட்கள் வரையிலும் அம் மகவின் தந்தை விரதமிருக்கவேண்டும். அந்நாட்களில், சில உணவுப் பொருள்களை உண்ணுதல் கூடாது என்பது மரபு. அது தவறினால் பிள்ளைக்குப் பிணியோ, அன்றி, மரணமோ நேரும் என்பது அவர்களின் உறுதி. அதனால், சிலர், மூக்குப்பொடி முதலியனவும் உபயோகிப்பதில்லையாம். பொடி உரிஞ்சுவதனால் தும்மல்வரின், குழவிக்கு இடையூறு இடையுறும் என்பது அவர்கள் கருத்து. தந்தை, மிகுதியாக உண்டாலும், குளிர்காற்றில் நின்றாலும், வெயில் கொண்டாலும், மகவிற்கு மரணம் நேரலாம் என்பது அவர்களது நம்பிக்கை; அதனால், குழவிக்கு மரணம் நேருமாயின், அது, தந்தையின் தவறுகளால் நேர்ந்ததே என்று துணிந்து, தாய்மார் நொந்து வருந்துவர்.

நாகரிக மில்லாத மக்களினிடையில் இவைபோன்ற அறிவில்லாச் செயல்கள் பல நிகழ்கின்றன. அறிவுடைய மக்களிடையிலும் தகுதியில்லாத சில வழக்கம் நடைபெறுதல் உண்டு. பிறரிடத்தில் காணப்படும் சிறந்த வழக்கங்களை நாம் கைக்கொள்ள வேண்டும்; தகாதனவற்றைக் கண்டபோது, அவர்களை எள்ளி நகையாடலாகாது; இயலுமானால், அவர்களை நன்னிலைமைக்குக் கொண்டுவர முயலவேண்டும்.

14. மின்னலும் இடியும்

மழைக்காலத்தில் பல வேளைகளில் மேகங்களினிடத்துப் பளீர்பளீர் எனத்தோன்றித்தோன்றி மறையும் ஒளியை நீங்கள் பலமுறை கண்டிருப்பீர்கள். அதை மின்னல் என்று வழங்குகிறோம். சில சமயங்களில், மின்னல் தோன்றியவுடனே, பெருமுழக்கம் கேட்கும். அம் முழக்கினை, இடி என்கிறோம். இடி இடிப்பதைக் கேட்கும்போது நமக்கு நடுக்கமும் அச்சமும் உண்டாகின்றன. இத்தகைய இடியும் மின்னலும் எவ்வாறு தோன்றுகின்றன என்பதைப் பற்றி முதலிற் கவனிப்போம்:

பூமியின்கண் ஒருவகை மின்சாரம் (Negative electricity) இயல்பாகவே அமைந்துளது என்று கூறுகின்றனர். கடல்நீர் ஆவியாகி மேகமாகும்பொழுது மின்சாரம் உண்டாகின்றது; அது கருமேகங்களினின்று பூமிக்கு வருகின்றது (Induction) என்று வேறு சிலர் கூறுகின்றனர். மற்றொருவகை மின்சாரம் (Positive electricity) மேகங்களில் அமைந்துளது. மேகங்களிலுள்ள மின்சாரம் மிக்க வன்மையுள்ளதா யிருப்பின், அப்பொழுது அது பூமியை நோக்கி வருகின்றது. மேகங்களுக்கும் பூமிக்கும் இடையே வாயு நிறைந்துளது அல்லவா? வாயு, மின்சாரத்தை இழுக்கும் தன்மை இல்லாதது. அதனால், மேகங்களிலுள்ள மின்சாரம், முழுவன்மையோடு வாயுமண்டலத்தைத் தாக்கிப் பூமியை நோக்கி வருகின்றது. அப்பொழுது பூமியிலுள்ள மின்சாரமும் அதனைப்பற்ற முயல்கின்றது. அவ்வாறு நிகழுங்கால், மிக்க வெப்பமும், ஒளியும், ஒலியும் உண்டாகின்றன. அவ்வொளிப்பிழம்பே மின்னல்; ஒலியே இடி. மேற்கூறிய இருவகை மின்சாரமும் மேகங்களிலும் அமைந்திருப்பதுண்டு. அப்படிப்பட்ட மேகங்கள் ஒன்றோடொன்று நெருங்கும்போதும் மின்னல் உண்டாகும். ஆனால், அவ்வாறு

உண்டாதல் அருமை. மேகங்களிலிருந்து மின்னல் பூமியிற் பாய்கையில், இடையே மரங்களாவது பிராணிகளாவது இருக்குமாயின், அவை அப்பொழுதே எரிந்துபோகும்; இடியோசையினுல் அபாயம் உண்டாகாது.

மின்னல், மேகத்திலிருந்து பூமியிற் பாய்ந்த சிறிது நேரத்திற்குப் பின் இடியோசை கேட்கின்றதாயினும், அவ்விரண்டும் ஒரே சமயத்திலேயே உண்டாகின்றன. ஆயின், மின்னலின் ஒளி முன்னும், இடியின் முழக்கம் பின்னும் அறியப்படுதல் ஏன்? ஒளி, மிகவும் விரைவாகச் செல்லும் தன்மையுள்ளது; ஓசை, ஒளியினும் மெதுவாகச் செல்லுந் தன்மையுள்ளது. ஒளி, ஒரு விநாடிப் பொழுதில் 1,86,000 மைல் தூரம் பாய்ந்து செல்லுகின்றது. ஓசையோ, அந்நேரத்தில், 1088 அடி தூரமேசெல்கின்றது. இதைக் கணக்கிடும்போது, ஒளி, ஒலியினும் 9 லக்ஷத்திற்கு மேற்பட்ட அளவு செல்கின்றது எனத் தெரிகிறது. ஒரு மரத்தை வெட்டி வீழ்த்துகையில், நாம் அங்கு இருப்போமாயின், அம் மரம் வீழ்ந்தவுடனே ஓசையுண்டாகக் கேட்போம்; அவ்வாறன்றிச் சிறிது தொலைவிலிருந்தால்,மரம் வெட்டி வீழ்த்திய சிறிது நேரத்தின் பின்பே, அது வீழ்ந்த ஓசை நமக்குக் கேட்கும். இவ்வாறே மின்னலும் இடியும் ஒரே காலத்தில் உண்டாயினும், ஒளியும் ஒலியும் செல்கின்ற வேகத்தின் ஏற்றத்தாழ்வினுல், அவை முன்னும் பின்னுமாக உணரப்படுகின்றன.

சில சமயங்களில் நெடுந்தூரத்தில் மின்னல் மட்டுமே தோன்றுகின்றது; இடியோசை கேட்பதில்லை, ஏன்? ஒளி செல்லுகின்ற தூரத்தளவு ஓசை செல்வதில்லை. ஒளி, 200 மைல் தூரம் வரையிலும் செல்வதனுல், அவ்வளவு தூரத்தில் உண்டாகும் மின்னல் நமக்குத் தோன்றும். ஆனுல், ஓசை, 30 மைல் தூரம் வரையிலுமே செல்வதாதலின், அதற்கு அப்பால் உண்டாகும் இடியோசை நமக்குக்

கேட்காது. அதனால்தான், நெடுந்தொலைவில் உண்டாகும் மின்னலின் ஒளி நமக்குக் காணப்படுகையில், அதன் ஒலி நமக்கு எட்டுவதில்லை.

பல சமயங்களில் மின்னலினால் பல பிராணிகளுக்கு இடையூறு உண்டாதலை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதற்குக் காரணம் யாது? மின்னல், பூமியை நோக்கிப் பாய்ந்து வருகையில், அதற்கு நேரேயுள்ள பெரிய கட்டடங்களையாவது, உயர்ந்த மரங்களையாவது பற்றும். வெற்றிடத்திலாயின், நேராகவந்து தரைக்குட்புகும். மின்னல், உயரமாக இருப்பவற்றையே பற்றுவதனால், மழைக்காலத்தில், நாம் மரங்களின் அடியில் போய் ஒதுங்கியிருக்க லாகாது. உயர்ந்த கட்டடங்களிலிருப்பதும் அபாயமாம். மழைக்காக மரங்களின் அடியில் ஒதுங்கிய மனிதர், சில சமயங்களில் இடியினால் இறந்துபட்டிருக்கின்றனர். தண்ணீர் மின்னலை இழுக்கும் தன்மையுடையதாதலின், மின்னலும் இடியும் கூடிய மழைக்காலத்தில், நீர்க்கரைகளி லிருப்பதுவும் அபாயத்துக்கிடனாகும். இரும்பு முதலானவற்றிலும் மின்னல் எளிதில் இறங்குமாதலின், உயர்ந்த வீடுகளி லிருப்பவர்கள், இரும்புக் கம்பிகளையுடைய சாளரங்களை யடுத்திருப்பது நன்றன்று.

உயர்ந்த மாளிகைகளின்மேல், கூர்மையான இரும்புக் கம்பியை உயரமாக நிறுத்தி, அதன் கீழ்முனையைத் தரையிற் கொண்டுவந்து விட்டிருந்தால், மின்னல் உண்டாகுங் காலத்து, அஃது, அவ்விரும்புக்கம்பியின் வழியாக இறங்கி, நிலத்துக்குட் பாய்ந்துவிடும். தண்ணீர், மின்னலை இழுத்துக்கொள்ளும் இயல்புடையதல்லவா? அதனால், கம்பியை நிலத்தோடு சேர்ப்பதினும், வீட்டின் பக்கத்தில் கிணறு தோண்டி, அதனுள் அக்கம்பியைப் புகுத்தி வைத்தல் மிகவும் நன்று.

மின்னலைத் தன்னுள் வாங்கிக்கொள்ளும் கருவி, 'மின் வாங்கி' எனப்படும். மின்வாங்கி வைக்கப்பட்டிருக்கும் வீடு

களில் வாழ்பவர்களுக்கு மின்னலால் அபாயம் நேரமாட்டாது. இதைக் கருதியே, பெரிய கட்டடங்களில் மின் வாங்கிகளை வைத்திருக்கின்றனர்.

15. கும்பகருணன்

தென்கடலின் நடுவண் தீவு ஒன்றனில் இராவணன் என்பவன் அரசு செலுத்தி வந்தான். அவனுக்குக் கும்பகருணன், விபீடணன் என்னும் துணைவரிருவர் இருந்தனர். இராவணன், கடுந்தவம் புரிந்து பெற்றவரத்தாலும், கும்பகருணன் பலத்தாலும், தன் மைந்தன் மேகநாதன் திறத்தாலும் வானவர்களையும் வாசவனையும் வென்று, மூவுலகும் தன்னடிப் படுத்தி, புகழ்பெற்று விளங்கினன். கும்பகருணன், திண்மையும் வன்மையும் வாய்ந்தவனாயினும், மீதூண் அருந்தி நெடிதுறங்கிக் காலம் போக்கினன். ஒருவர் நெடுநேரம் உணர்வின்றித் துயில்வாராயின், அவரைக் கும்பகருணன் என்று வழங்குதல் இன்றும் வழக்கில் உளது. இதனை,

> 'பண்டொரு நாள்,
> கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்
> தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?'

என்று ஸ்ரீ ஆண்டாள் அருளியிருத்தலினாலும் அறியலாம். விபீடணன், மறநெறி கடிந்து, அறநெறி யொழுகி, எவரும் பேரறிஞன் என்று புகழும்படி விளங்கினன்.

அக்காலத்தில், ஸ்ரீராமர், தம் தந்தையாரின் கட்டளைப்படி, கானுறைதலை மேற்கொண்டு, தேவி சீதையோடும், இளவல் இலக்குவனோடும் அயோத்தியினின்று நீங்கி, பஞ்சவடி என்னுமிடத்தில் வதிந்திருந்தார். இராவணன் சீதையின் பேரழகினைத் தன் உடன்பிறந்தாளாகிய சூர்ப்பணகையால் அறிந்து, சீதைமேல் வேட்கையுற்று, அவளை வஞ்சக

மாகக் கவர்ந்து சென்று, தனது இலங்கை நகரில் சிறை யிட்டான். சீதையைத் தேடித் திரிந்த இராம இலக்குவர், அனுமான் சுக்ரீவன் முதலான வானர வீரர்களைத் துணைக்கொண்டனர்; பின்னர், சீதையைத் தேடுமாறு நாற்றிசைக்கும் வானர வீரர்களை அனுப்பினர். அவ்வாறு, தென் திசைக்குச் சென்றவர்களுட் சிறந்தவனாகிய அனு மான், தென்கடலைக் கடந்து, இராவணனது இலங்கை நகருட் புகுந்து, ஆங்குப் பலவிடங்களிலும் சீதையை நாடித் திரிந் தான். கடைசியில், இராவணனது பூஞ்சோலையாகிய அசோக வனத்தில் சீதை சிறையிருத்தலைக் கண்டு, அற்றமறிந்து அவளுக்குத் தன் வரவை யறிவித்து, ஸ்ரீ ராமரின் செய்தி யைத் தெரிவித்து, அவளிடம் விடைபெற்று வெளிப்பட் டான். வெளிப்பட்டவன், அப்பொழிலின் மரங்களை ஒடித்து, காவலரை யடித்து, தன்னொடு பொருதோரைப் படுத்து, இலங்கை நகரை எரிவாய் மடுத்து, மீண்டு சென்று ஸ்ரீராம ரைச் சார்ந்தான்.

இவ்வாறு, குரங்கொன்று தன்கடிநகர்ப் புக்கு, பொழிலை யழித்து, படைகளைத் தொலைத்து, ஊரை எரித்துச் சென் றதை யறிந்த இராவணன், 'இனிச் செய்யத்தக்கது யாது?' என்று, அமைச்சர் படைத்தலைவர் முதலியோருடன் ஆலோ சனை செய்தான். ஒவ்வொருவரும் தத்தம் அறிவிற்குத் தோன்றியவாறு கூறினர். அப்பொழுது, கும்பகருணன் எழுந்து அவர்களை விலக்கி, அண்ணலை வணங்கி, 'ஐய, என் உரையை இகழாது ஏற்றுக்கொள்வீராயின், யான் உறுதி பயக்கும் செயலை உரைக்கின்றேன்' என்று பணிமொழி பகர்ந்து கூறுவான்:

'அண்ணலே, தாமோ, ஆயிரம் மறைகளையும் கற்று உணர் ந்த அறிஞர்; அத்தகைய நீவிர் தீச்செயல் புரிதல் தகுமோ?

பிறன் மனைவியைக் கவர்ந்து, சிறையிட்டிருத்தல் பழியும் பாவமும் பயக்கும். இது, நமது உயர்குடிப்பிறப்பிற்கு ஒத்ததன்று.

ஆசில்பர தாரமவை அஞ்சிறை யடைப்பேம் ;
மாசில்புகழ் காதலுறு வேம் ; வளமை கூரப்
பேசுவது மானம் ; இடை பேணுவது காமம் ;
கூசுவது மானிடரை ; நன்று நம கோற்றம்.

சீதையை, இன்னே சிறைவிடுத்து, ஸ்ரீராமர் பக்கலிற் சேர்த்தல் நலமாகும். அதனால், அவர் வென்றவராயினும் நமக்கு வசையன்று; இசையே. இது செய்ய எண்ணமில்லை யாயின், நம் படைகளெல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு சென்று, ஒரே நாளில் அம் மானவரையும் வானரரையும் கொன்று, பகைதவிர்ந்து இன்புறுதல் தக்கது' என்றான். இராவணன், 'எல்லாப் படைகளுடனும் சென்று, வென்று வருதலே நன்று' என்று ஒருப்பட்டான். அப்பொழுது, இந்திரஜித்து அதனை மறுத்து, 'இது நன்று நன்று, மானிடரையும் வானரரையும் வெல்லுதல் வேண்டி, தேவரையும் யாவரையும் வென்று மூவுலகும் கைக்கொண்ட தேவரீர், எல்லாப் படைகளுடனும் செல்லுதல் ஒல்லாது ; யான் ஒருவனே சென்று, இமைப்பளவில் அவர்களை வென்று இன்னே வருவல்' என்று தன்வீரம் தோன்ற விளம்பினன். அதுகேட்டு, விபீடணன் அவனை விலக்கி, 'சீதையை ஸ்ரீராமரிடம் விட்டுவிடுதலே நலம்' என்று பலவாறு பகர்ந்தான். இராவணன் அவ்வுரைகளை மனங்கொள்ளாது, அவனை வெறுத்துக் கூறினன். அதனால், விபீடணன், ஸ்ரீராமரிடம் அடைக்கலம் புகுந்தான். கும்பகருணன், வழக்கம்போல் உறங்குவானாயினன்.

பின்னர், ஸ்ரீராமர் வானரப்படைகளைத் துணைக்கொண்டு கடலில் அணைகட்டி, இலங்கையை யணுகினர். அதனையறிந்த

இராவணன், தன் நகரின் நாற்புறத்தும் காவற் படைகளை நிறுவி, சில படைகளுடன் தான் போருக்குச் சென்று, ஸ்ரீராமரது போர்த்திறனை அறிந்து மீண்டான். மீண்டவன், தன்மந்திரியாகிய மகோதரன் கூறியவாறு, கும்பகருணனைப் போருக்கனுப்ப எண்ணி, அவனை யெழுப்பி வருமாறு, ஏவலர் நால்வரை விடுத்தான். ஏவலர் விரைந்து சென்று, கும்ப கருணன் கோயிலையடைந்து, அவனை எழுப்பினர்; அவன் சிறிதும் உணராதது கண்டு, மனம் நொந்து, இராவணனைக் குறுகி வணங்கி, அவன் துயிலுணராமையை அறிவித்தனர்.

உடனே இராவணன், மல்லர் பலரை ஏவிக் கும்பகருண னைத் துயிலுணர்த்துமாறு பணித்தான். அவ்வளவில் மல் லர், அவன் கோயிலுட் புகுந்து, அவனை நெடுநேரம் துயி லுணர்த்தினர். பின்னர், கும்பகருணன் துயிலுணர்ந்து எழுந்து, உலகையளக்க நிமிர்ந்த திருமால் வடிவமேபோல், நிமிர்ந்து நின்றான்; உடனே, பல சகடங்களில் கொணர்ந் திருந்த உணவையும், பல குடங்களில் நிறைத்திருந்த நறவை யும் உண்டு சிறிது பசியாறினன்; பின்னர், இடியேறு அஞ்சும் படி ஆரவாரித்தான்.

அப்பொழுது பணியாளர், அவனைப் பணிந்து, 'நும் அண்ணலார் நும்மைக் காண விரும்பினர்' எனலும், அவன் கடிது சென்று, இராவணன் கோயிலுட் புகுந்து, அவனடி களில் மலைபோல் வீழ்ந்து வணங்கினன். தன்னை வணங்கிய இளவலை இராவணன் எடுத்து, மார்புறத்தழுவி, தன்னுட னிருத்தி, ஊனும் தேனும் ஊட்டினன்; நுரை போன்ற வெள் ளிய துகிலை உடுத்தினன்; பல அருங்கலன்களைப் பூட்டினன்; நறிய சாந்தைச் சாத்தினன்; கவசத்தைக் கட்டினன்; தம்பி யின் தோற்றப் பொலிவை நோக்கினன்.

கும்பகருணன், அண்ணனை நோக்கி, 'நீவிர் இவ்வாறு செய்வது ஏன்? அதனை அறிவித்தருள்க' என்று வேண்டி

னான். இராவணன், 'மானவரும் வானரரும் நமது புறநக ரடைந்தனர்; நீ சென்று அவர்களைக் கொன்று வருதி' என் ருன். உடனே கும்பகருணன்,

' ஆனதோ வெஞ்சமர்! அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்த தில்லையோ!
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ ; புகுந்ததோ போன்றுங் காலமே.

சீதையை இராமனிடம் விட்டுவிடு என்று முன்னமே சொன்னேனே ; இன்னமும் அவளை விட்டனிரல்லிரோ ! ஆ, புலத்தியன் மரபு அழிந்ததே! அந்தோ, நும் பெருமையை நீரே கெடுத்துக்கொண்டனிரே ! அறமே துணையாக நன் னெறியில் நடப்பவரை, மறமே வலியாகப் புன்னெறியில் நடப்பவராகிய நாம் எங்ஙனம் வெல்லுவோம் ? இவ்வுலகம் அனைத்தும் கல்லுதல் இயலுமாயினும், இராமனை வெல்லு தல் இயலாதே; கடலைக் கடந்து, நமது கடிநகர் புகுந்து, செயற் கருஞ் செயல் செய்த வானரத்தைப் போன்ற எண்ணிறந்த வானரங்களை எளிமையாகக் கருதுதல் தகுமோ ? நாம் உய்ய வேண்டுமாயின், சானகியை இராமன் பக்கலில் விட்டு விட்டு, அவர்களோடு அளவளாவுதல் வேண்டும் ; இன்றேல், நமது படையை யெல்லாம் ஒருங்கு சேர்த்துச் சென்று, போர் புரிந்து, அவரை யழித்தல் வேண்டும். அவ்வாறன்றி, ஒவ் வொருவரையும் தமியாக அமருக்கு அனுப்புதலால் ஆவ தில்லை' என்ருன்.

கும்பகருணன் கூறியவற்றைக் கேட்ட இராவணன், 'யான் உன்னை வருவித்தது ஆலோசனை கூறுதற்கன்று; சரி, நீ ஊனும் தேனும் உண்டனையன்றே; உறங்குதற்குச் செல். உன் வீரமே வீரம்! மானிடச் சிறுவரையும் வானரங்களையும் கும்பிட்டு உயிர் வாழ்தல், உன் தம்பிக்கும் உனக்குமே தக்கது; நீயும் அவனொடு போதி. இதோ நான் செருவிற்குச் செல்கின்

றேன்' என்று முனிந்து மொழிந்து, பணியாளரை நோக்கி, 'என் படைகளை இன்னே தம்மின்' என்றான்.

அண்ணன் அமருக்கு எழக்கண்ட கும்பகருணன், அவனை வணங்கி, 'ஐயனே, அடியேன் விண்ணப்பம் செய்வது ஒன்றுளது. அதனை முனியாது ஏற்றருளல் வேண்டும். யான் இன்னே செருக்களம் செல்கின்றேன்; விதி என்னைப் பிடர் பிடித்துத் தள்ளுகின்றது. அதற்கு எவர்தாம் யாது செய்வர்! யான் மீண்டு, ஈண்டு வாரேன். யான் மாய்ந்த பின்னராயினும், வைதேகியைச் சிறைவிடுத்து வாழ்ந்திரும். மானிடர் என்னைக் கொன்று விடுவாராயின், நும்மைக் கொல்லுதலும் திண்ணம்; ஆதலின், நீர் செய்யத் தக்கது எண்ணிச் செய்யும்; அன்றியும்,

> இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
> குற்றமும் உள எனின் பொறுத்தி; கொற்றவ,
> அற்றதால் முகத்தினில் விழித்தல்; ஆரிய,
> பெற்றனேன் விடை யெனப் பெயர்ந்து போயினன்.

இவ்வாறு பணிமொழிகூறி அகலும் துணைவனைக் காண்டலும், இராவணனுக்குக் கண்கள் கலுழ்ந்தன; கண்ணீர் ததும்பியது; கண்டோர், கரைந்தனர்; 'அந்தோ!' என இரங்கினர்; ஏங்கினர். கும்பகருணன், படைகள் புடைசூழத் தேர் மேலேறினான்; செருக்களம் நோக்கிச் சென்றான்.

செருக்களம் நோக்கிச் சினந்து செல்கின்ற கும்பகருணனை இராமர் நோக்கினார்; உடனே விபீடணனைக் கூவி, 'அன்பனே, மால்வரை கால்கொடு நடந்து வருதலேபோல், அங்கே வருகின்றவன் யாவன்? இராவணனே வேறு பேருருக் கொண்டு வருகின்றானோ!' என்று வினவினார். விபீடணன் இராமரை இறைஞ்சி, 'அண்ணலே, அங்கே வருகின்றவன் இராவணனுக்குப் பின்னவன்; அடியேனுக்கு முன்னவன்; கும்பகருணன் என்னும் பெயரினன்; ஓர் ஊழிக்காலமெல்லாம்

ஒருநாளேபோல் உறங்குபவன்; இந்திரனோடு பொருத காலத்தில், பரிய களிறு ஒன்றனை எளிதிற் பற்றிச் சுழற்றி எறிந்தவன்; கண்ணுதற் கடவுள் அருளிய சூலப்படை யுடையவன். இவன் இதுகாறும் இரவும் பகலும் உறங்கிக் கிடந்ததனால் இவ்வுலகம் உய்ந்தது. இவன், அண்ணனுக்கு அறவுரை பலவும் கூறினான்; அவன் வெறுத்தும், மறுத்தும், மீண்டும் ஆவன கூறி அறிவுறுத்தினான். அவ்வறிவுரைகளை அவன் அகங்கொள்ளாமையின், அவன் விரும்பியவாறே நம்மோடு அமர் செய்தற்கு அடைந்திருக்கிறான்' என்று பலவும் பகர்ந்தான்.

விபீடணனது மெய்மொழியைக் கேட்ட சுக்ரீவன், இராமரை வணங்கி, 'கும்பகருணனைக் கொல்வதில் பயனில்லை; அவன் நம் பக்கல் வருவானாயின், சேர்த்துக்கொள்ளுதல் செவ்விது; அவ்வாறாயின், விபீடணன் மனமும் மகிழ்வுறும்' என்றான். அதனைக் கேட்ட ரகுவீரர், 'அது நன்று' என, உடனே விபீடணன், 'ஆயின், அடியேன் இன்னே சென்று, அவனுக்கு நல்லுரை நவின்று, உடன்கொண்டு வருகின்றேன்' என்று விடைபெற்று அகன்றான்.

விபீடணன் தன்பால் வருதலை யறிந்து கும்பகருணன் மகிழ்வுற, அவனும் அணுகி, அன்புடன் அடி வணங்கினான். அடியில் வீழ்ந்த இளவலை எடுத்து, மார்புறத் தழுவி, 'அன்புடைத் தம்பி, நீ ஸ்ரீராமரை அடைக்கலம் புகுந்ததும், அபயம் பெற்றதும் கேட்டு, களிப்பென்னும் கடலுட் படிந்திருந்தேன்; புலத்தியன் மரபு நின்னால் பொலிவுறும் என்று மகிழ்ந்திருந்தேன்! நீ அவர் பக்கலினின்று இங்கு வந்ததன் காரணம் யாது? யாங்க ளனைவரும் மடிந்துபடுதல் திண்ணம். எங்களுக்கெல்லாம் நீயே எள்ளும் தண்ணீரும் இறைத்துக் கரையேற்றுவாய் என்று எண்ணினேன்; நீயும் எங்களோடு சேர்ந்துவிட்டால், எள்ளும் நீரும் இறைப்பவர் பிறர் யாருளர்?

அமிர்தம் உண்ணுபவர் நஞ்சு உண்பதுபோல, ஸ்ரீராமரைச் சார்ந்து நல்வாழ்வு பெற்ற நீ, இங்கே வந்தது எங்களோடு இறந்து படுதற்கோ! பிறர்மனை விரும்பும் தீயவனோடு சேர்ந்த எம்மை, உறவினர் என்று உளங்கொள்ளலாமோ? இன்னும் உனக்கு அரக்கர் தன்மை நீங்கிற்றில்லை போலும்! நீ இப்போது இங்கு வருதல் தகாது; யாம் அனைவரும் இறந்து பட்டபின்பு, இராமருடன் கூடி இலங்கைக்கு வா; வந்து முடி சூடி அரசுசெய்; இப்பொழுதே இராமர்பால் ஏகு' என, இன்மொழி புகன்றான்.

அண்ணன், அன்புடன் கூறியவற்றைக்கேட்ட விபீடணன் வணங்கி, 'ஐய, யான் நுமக்கு விண்ணப்பம் செய்ய வேண்டுவது ஒன்று உளது. அறத்தின் உருவாய் விளங்கும் ஸ்ரீராமபிரானை, நீரும் சரணடைந்து உய்யவேண்டும்; பாவியாகிய நாயேனுக்கும் அருள்புரிந்த வள்ளல், நுமக்கு அருள்புரிவதில் ஐயமின்று. இராமபிரான் அடியேனுக்கு நல்கியருளிய இலங்கையரசை, யான், நுமக்குத் தந்து, நுமது ஏவலின்படியே நடப்பேன். தேவரீர், இளைஞனாகிய அடியேனது மனத்துயரைப் போக்கி, வாழ்வு பெற வேண்டும். நீர் இனி, இராவணனிடத்திற்குப் போதல் தகாது; ஆங்குப் போகாது அமர் புரிவீராயின், ஆருயிர் கெடுதல் திண்ணம். தாமோ, அறநூல்களைக் கற்ற அறிஞர்; தமக்கு நாயேன் கூறுதல் யாதுளது? தீத்தொழில் புரிபவர் தாயராயினும் தந்தையராயினும் அவர்பால் அன்பு செலுத்துதல் அறமாமோ? ஒருவன் தீங்கிழைப்பானாயின், அவனைச் சார்ந்த நன்னெறியாளரும் அவனுக்காக ஆருயிர் விடுத்தல் அழகிதோ? உறவினராயினும் மறவினை புரிவாரை அழித்தல் முறையேயாகும். நமது உடம்பில் தோன்றும் பருவைக் கருவியாலறுத்துச் சுட்டுத் துயர் தீர்கின்றோமன்றோ? அதுபோல, நம்மோடு உடன் பிறந்தானாயினும், அவனால்

துன்பமுண்டாகுமாயின், அவனை நீத்தல் அவமாகாது. அவனோ, தாம் கூறும் நல்லுரைகளை யுள்ளங்கொள்கின்றிலன். அப்பாவியின்பொருட்டு அநியாயமாக உயிர் விடுத்தல் அறமாமோ? தேவதேவராகிய ஸ்ரீராமரால், தாம் இலங்கையரசு எய்தினால், எவராலும் அழிக்க இயலாது; அதனால் பெருமையே யன்றிச் சிறுமை யுண்டாகாது; தேவர் முனிவர் முதலாக எவரும் நமக்கு அருள் செய்வர். நமக்குப் பகைவரான வானவர்களே நண்பின ராகுங்கால், வேறு யாவர் பகை யாவர்? ஒருவரும் இலர். ஆதலின், நீவிர் எனது வேண்டுகோளுக்கு இணங்கி இராமரிடத்து இன்னே வரல்வேண்டும். அவர், தாமே நும்மிடத்து அருள் கூர்ந்து, என்னை அனுப்பினார். இதனை யுளங்கொண்டு என்னோடு வாரும்' என்று இசைத்து, இணையடிகளில் இறைஞ்சினான்.

தன் பாதங்களில் விழுந்து புலம்பும் விபீடணனைக் கும்பகருணன் எடுத்து இன்புறத்தழுவி, அன்புறக் கூறுவான்: 'அன்பு மிக்க தம்பி, நீயோ நான்முகன் நல்கிய வரங்களால் நன்னெறியில் ஒழுகுகின்றாய்; ஆதலின், நீபோய் இராமபிரானை யடைந்தது நேர்மையே. யானோ புலைத்தொழில் புரிவேன். ஆதலின், இன்னுயி ரிழத்தலே ஏற்புடையது. நம் அண்ணல், தீத்தொழிலில் மனங்கொண்டால், அதனை மாற்றுதல் நமது கடமை. அஃது இயலாதாயின், நாம் அவருக்குமுன் இறந்துபடுதலே சிறந்தது. அதுவே செஞ்சோற்றுக் கடனும் ஆகும். அவ்வாறன்றி, யான் உன்னோடு அங்கு வருவேனாயின், செய்நன்றி கொன்றவ னாவேன்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் : உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்னும் மறைமொழியை மறக்கலாமோ? அமரரை வென்று அரும்புகழ் படைத்த அண்ணலார், துணைவரின்றித் தமியராய்ச் சாதல் தகுமோ? என் ஐயனுக்குப் பகைவராயிருக்கும்

அவர்பால் சரணம்புக்கு உயிர்வாழ்தலினும், இழிவு வேறு யாதுளது? யான், அவ்வாருன இழிதொழில் புரியேன்.

'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்.'

யான், இராம இலக்குவரையும், அனுமன், அங்கதன், சுக்ரீவன் முதலாயினேரையும் நொடியில் மடித்து, வெற்றி பெறுவேன். என்முன் எதிர்ப்போர் எவரேயாயினும், அவர், இரவிமுன் பனியேபோல் விரைவில் கெடுவர். அன்றியும், ஆகுங்காலத்தில் ஆதலும், போகுங்காலத்திற் போதலும் இயற்கை. அவை, ஒருவர் தடுப்பினும், அடுக்காமல் அகலா. ஆதலின், நீ என்னைக் குறித்து இரங்குதல் வேண்டா; இராமரிடம் இப்பொழுதே ஏகு; இங்கு நின்று கவலாதே. யாங்கள் நரகில் அழுந்தாவாறு எங்களுக்கு எள்ளும் நீரும் இறை; அதுவே நீ எங்கட்குச் செய்யவேண்டுவது. நீ அகத்துயர் விடுத்து, அவர்பால் அடைந்து உய்வாய்.'

இவ்வாறு தன் மனநிலை கூறிய கும்பகருணன், மீட்டும் இளவலை யெடுத்து மார்புறத் தழுவி, அவனை நோக்கி, 'இன்றோடு நம் உடன்பிறப்பு ஒழிந்தது' என்று, கண்ணீர் வடியக் கரைந்தான். அதனைக் கேட்ட விபீடணன், அருந்துயர் மேலிட்டு, அவனடிகளில் வீழ்ந்து வணங்கி, உடலொடுங்கி, உரை யொடுங்கி, அவன்பால் விடைபெற்றுமீண்டான்; மீண்டு இராமரைச் சார்ந்து, கும்பகருணன் மனநிலை கூறிமாழ்கினன்.

பின்னர், கும்பகருணனுக்கும் இராமருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. கும்பகருணன் கண்டோர் வெருவுமாறு கடும்போர் புரிந்து, பல வானரர்களை மாய்த்து, தன் சோற்றுக் கடனை யாற்றி, முடிவில் இராமரால் கொல்லப்பட்டு, வீர சொர்க்கத்து விளங்கினன். அவனது அருஞ் செயலும் பெருங்குணமும் என்றும் அழியாது நிலவுதலாயின.

16 அபாயங்களில் உடனுதவி

மாந்தர், பலசமயங்களில் தாம் நினையாதவாறு, திடீரென்று பற்பல அபாயங்களுக்கு உள்ளாகின்றனர். அபாயங்கள் நேரும்போழ்து, அவர்கள், இன்னது செய்வது என்று அறியாராய் மயங்கி நின்றுவிடுகின்றனர். அருகில் இருப்பவர்களும் திகைப்புற்று, வாளா இருந்துவிடுதலும் உண்டு. அதனால் பெருந்தீங்கு விளைதல் காண்கின்றோம். ஆதலின், மாந்தருக்குப் பெரும்பாலும் நேரக்கூடிய சில அபாயங்களையும், அவற்றிற்கு உடனே செய்யவேண்டிய பரிகாரங்களையும் நாம் அறிந்திருப்பது அவசியமாகும். அது கருதியே அவற்றைக்குறித்து இங்கே சில கூறுகின்றோம்:

கருவிகளைக் கையாளுபவர்களுக்கு, கவலைக் குறைவினாலும், அறியாமையினாலும் சில சமயங்களில் வெட்டுக் காயம் உண்டாகும். அப்படி உண்டாயின், முதன் முதலில் அது, சுத்த ரத்தக் குழாயிற் பட்டுள்ளதோ, அன்றி, அசுத்த ரத்தக் குழாயில் தாக்கியுள்ளதோ என்பதை அறியவேண்டும். அதனை அறிவது எப்படி? நம் இருதயத்திலுள்ள இரத்தப்பை, சுருங்கி விரியும் தன்மையதாகலின், எந்நேரமும் சிறிதும் ஓயாது அங்ஙனம் இயன்று கொண்டேயிருக்கும். மார்புக்குழியை யடுத்து, இடப்பக்கத்தில் கையை வைத்து நோக்கினால், எந்நேரமும் படபடவென்று அடித்துக் கொண்டேயிருப்பதை அறியலாம். விரிந்த பை சுருங்குகையில் இரத்தம் அங்கிருந்து வெளிப்படுவதனால், சுத்த ரத்தம் இருதயத்தில் நின்று புறப்பட்டு, பிற உறுப்புக்களில் செல்லுகின்றது; அசுத்த ரத்தமோ, பிற வுறுப்புக்களிலிருந்து இருதயத்தை நோக்கிச் செல்கின்றது; சுத்த ரத்தம் நல்ல செந்நிறமுள்ளது; அசுத்தரத்தம், சிறிது நீல நிறமாகத் தோன்றுவது; சுத்த ரத்தம் இடையே நின்று நின்று பாயும்; அசுத்த ரத்தம்,

எப்போதும் ஒரே நிலையிற் செல்லும். அன்றியும், அசுத்த ரத்தக் குழாய்கள் உடம்பினுள் மேற்றோலை யடுத்து அமைந்துள்ளன; சுத்த ரத்தக் குழாய்கள் அவற்றினும் உள்ளிடத்தே அமைந்துள்ளன. மேற்கூறியவற்றால், இருவகையான ரத்தங்களின் இயல்பையும் அறியலாமல்லவா?

இவ்விருவகை ரத்தக்குழாய்களுள் அசுத்த ரத்தக்குழாயில் காயம் ஏற்படின், அக்காயத்திற்குக் கீழிடத்தில் கயிற்றால் இறுகக் கட்டவேண்டும்; சுத்த ரத்தக் குழாயிலாயின், காயத்திற்கு மேலிடத்தில் கட்டுக் கட்டவேண்டும்; படத்திற்

காட்டி யிருப்பது போல, கைக்குட்டையாற் கட்டி, அதன் மேல், பென்ஸிலையோ, அல்லது, சிறு குச்சியையோ வைத்து முடிச்சிட்டு, அதைப் பிடித்துக்கொண்டு முறுக்கி, அந்தக் கட்டினை யிறுக்கலாம். இவ்வாறு செய்தால், இரத்தம் வெளி வாராமல் நின்று விடும். தலையிலாயின், கழுத்துக்கு மேலாகச் செல்லும் இரத்த நாளத்தை நன்கு அழுத்திப் பிடித்துக் கொள்ளவேண்டும்.

காலிற் காயம் ஏற்படின் நின்றுகொண்டிருக்கலாகாது; கீழே படுத்துக் கொண்டு, ஒரு மணையின் மேலோ, அல்லது, வேறு யாதாவதொன்றன் மேலோ காலை வைத்து உயர்த்திக் கொண்டிருப்பது நல்லது. அவ்வாறு செய்தால், இரத்தம் மேல்நோக்கிச் செல்லுதல் குறைவு படும். நாம் செய்யும் சிகிச்சைகளினால், சிறிதளவு இரத்தம் தடைப்பட்டு நிற்பினும், அது பெரிதும் நன்மையாகுமன்றோ?

ஒருவருக்கு மூக்கினின்று இரத்தம் வடியுமாயின், அப்பொழுது அவரை உட்காரச் செய்து, தலையைப் பின்புறமாகச் சிறிது சாய்த்து, அவர் கைகளைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும்; கால்களை வெந்நீருள்ள பாத்திரத்துள் வைக்க வேண்டும். கழுத்திலும் நெற்றியிலும் பனிக்கட்டியை வைக்கலாம்; அது கிடைக்காவிடின், குளிர்ந்த நீரில் துணியை நனைத்து, அவ்விடங்களில் நன்கு ஒற்றலாம். இவ்வாறு செய்தால், இரத்தக்குழாய் சுருங்குமாகலின், இரத்தம் வெளியே பாய்தல் குறைந்துவிடும்.

சுவாசாசயத்தினின்று இரத்தம் வந்ததாயின், அம்மனிதனைப் படுக்க வைத்து, தலையையும் தோள்களையும் மேலே உயர்த்திப் பிடித்துக்கொண் டிருக்கவேண்டும்; பனிக்கட்டியை உரிஞ்சும்படி செய்தல் வேண்டும். இரத்தமாக வாந்தி செய்பவருக்கும் மேற்கூறியவாறே செய்து, பனிக்கட்டியை உட்கொள்ளச் செய்யவேண்டும். இவற்றிற்கெல்லாம் ரணவைத்யர் உதவியை உடனே நாடுதல் இன்றியமையாததாகும்.

சிலர், இரத்தக்காயம் பட்டவர்களுக்குச் சாராயம் முதலியன கொடுக்கின்றனர். அதனால், இரத்தம் விரைவில் பரவி, மிகுதியாக வெளிப்படுமேயன்றி நிற்காது. இரத்தம் அதிகமாக வெளிப்படின், அதனால் சோர்வு உண்டாகும்; அறிவும் மயங்கிவிடும்.

II

நாம் உட்கொள்ளும் வாயுவானது நுரையீரலுட்சென்று, இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, உடம்பின் எல்லாப் பக்கத்தும் சுத்த ரத்தம் பரவச் செய்கின்றது. சிறிது நேரம் வாயுவை யுட்கொள்ளாமல் இருப்போமாயின், சுத்தவாயு உட்புகுதலும், அசுத்தவாயு வெளிப்படுதலும் இன்மையால், உயிரிழக்க நேரும். தோல்துருத்தி, காற்று உட்புகுந்தால் விரிதலும், அது வெளிப்படின் சுருங்குதலும் நீங்கள் கண்டிருக்கலாம். அதுபோலவே, வாயு, உள்ளே நிறைந்திருக்கின் மார்புக்கூடு விரியும்; அது குறைந்திருக்கின் மார்புக்கூடு சுருங்கும்.

மார்புக்கூடு விரிதற்கும் சுருங்குதற்கும் காரணமாயிருப்பது, நுரையீரலுள்ளிருக்கும் ஜவ்வேயாகும். அந்த ஜவ்வானது யாதேனும் ஒரு காரணத்தால் சிறிது நேரம் தன் தொழில் செய்ய இயலாது நின்றுவிடுமாயின், பின்னர், அது, தானே தன் வேலையைச் செய்யத் தொடங்குதல் இயலாது; அது, மூச்சுவாங்கி வெளிவிடும்படி பிறரொருவர் துணை செய்ய வேண்டும்.

நீரில் வீழ்ந்து அமிழ்ந்தவர்களை வெளியே எடுத்துப் பார்க்குமிடத்து, அவர் ஆவி நீங்கியவர்போற் காணப்படுவர்; ஆயினும், பெரும்பாலோர் அவ்வாறே உண்மையில் ஆவி நீங்கினவர் ஆகார். நுரையீரலின் ஜவ்வு மீண்டும், முன்போல் தன்தொழிலைச் செய்தற்கு நாம் சில செயல்கள் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால், வாயு உட்செல்லும்; அவர்கள் உயிர் பெற்று உய்தல் கூடும். ஆயினும், இறந்துபோனவர் திறத்தில் நாம் செய்யும் முயற்சி ஒன்றும் பயன்தாராது.

நீரில் விழுந்து மூச்சுத் திணறியவர்களை எடுத்ததும் முதன்முதலில் அவர்களின் மார்பு முதலிய இடங்களிலிருக்

கும் உடைகளை அவிழ்த்துவிட வேண்டும். பின்னர், அவர்களைத் தரைமேற் கிடத்தி, தலையின் கீழும் கைகளின் கீழும் தலைக்கணையாவது, கனமான துணிகளையாவது வைத்து, தலையையும் தோள்களையும் உயர்த்தவேண்டும்; அதன்பின், நாக்கு உள்ளே போய்விடாதபடி, அதனை இழுத்துப் பிடித்துக் கொள்ளவேண்டும். அவர் தலைக்குப் பின்னால் இருந்து கொண்டு, அவருடைய முன்கைகளைப் பற்றி, மெதுவாகவும் அமைதியாகவும் இழுத்து, அவர் தலைக்குமேலாக வரும்படி செய்யவேண்டும். இவ்வாறு செய்யின், மார்புக்கூடு விரியுமாகலின், சுத்த வாயு உட்புகக் கூடும். சிறிது நேரத்தின்பின்,



கைகளைப்பற்றி, அவருடைய விலாப்புறங்களின் நேராகக் கொண்டுபோய், மார்பின்மேல் வைத்து அழுத்தவேண்டும். அப்பொழுது மார்புக்கூடு சுருங்குமாதலின், உள்ளிருக்கும் அசுத்தவாயு வெளிப்படும். மேற்கூறியவாறு மாற்றி மாற்றி, கைகளைத் தலைக்குமேலும் மார்பின்மேலும் ஒரு நிமிடத்தில் 15 தடவை கொண்டு வரவேண்டும். இவ்வாறு செய்கையில் அவர், தாமாக மூச்சு வாங்கத் தொடங்கின், அப்பொழுது நம்முடைய உதவியை நிறுத்திவிட்டு, நம் கைகளால் அவருடம்பில் நன்கு தேய்க்க வேண்டும். தேய்ப்பதனால், உடலில் சூடுண்டாகுமாதலின், இரத்த ஓட்டம் தொடங்கும்.

நீருள் விழுந்து ஆழ்ந்து கிடந்தவர்களின் வாய்க்குள், சேறு மண் முதலானவை புகுந்திருக்குமாதலால், அவர்

களை யெடுத்ததும், அவர்கள் வாய்க்குள் விரல் விட்டு அவற்றை யெடுத்துவிட வேண்டும்; அவர்களைத் தரையில் குப்புறக் கிடத்தி, கைகளைத் தலைக்குமேல் சேர்த்துவைக்கவேண்டும்; மார்பிற்கு அடியில் தலைக்கணை, அல்லது துணி மூட்டைகளை அமைத்துவைக்க வேண்டும். அவர்கள் உடம்பினுள்ளிருக்கும் நீர் வெளிப்படும்படி, முதுகில் அழுத்த வேண்டும். அதன்பின், அவர்களை மல்லாந்து படுக்கவைத்து, அவர்களின்

84747

நாக்கை உறுதியாகப் பற்றிக் கொள்ளவேண்டும். அதன்மேல், முற்கூறியவாறு மூச்சு வாங்குதற்கான முறைகளைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதனால் உடல் தளர்ச்சியடையுமாதலின், அப்பொழுது அவர்களுக்கு வெப்பம் அவசியமாகும். ஆதலால், வெம்மை தரத்தக்க உடைகளையாவது, வெந்நீர்க்குப்பிகளையாவது, மிதமாகச் சுடுகின்ற செங்கல்லையாவது, அவர்களின் கால், வயிறு, தொடை, அக்குள் இவ்விடங்களில் வைக்கவேண்டும். ஆனால், அவற்றால், உடம்பு வெந்துபோகாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். இரத்த ஓட்டம் ஆரம்பித்தபின், சூடான காப்பி, அல்லது, தேத்தண்ணீர் பருகும்படி கொடுக்கவேண்டும். அதனால், உடலில் சூடுண்டாகும்; இரத்த ஓட்டம் நன்கு பரவும். உணர்ச்சியில்லாத சமயத்தில் எந்த வகையான உணவும் கொடுத்தல் ஆகாது.

III

பல தடவைகளில், உடைகளில் நெருப்புப் பிடிப்பதனால் எரியுண்டு இறந்தவர் பலரைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். உடைகளில் நெருப்புப் பற்றிய சமயங்களில் செய்ய வேண்டியவற்றைக் குறித்து இங்கே சில கூறுவோம்:

நெருப்புக்குச்சியில் விரைவாகத் தீப்பற்றி எரியாவிடின் நாம், யாது செய்கின்றோம்? அதனைத் தலைகீழாகப் பிடிக்கின்றோம். அப்பொழுது, நெருப்பு மேல்நோக்கி எரிகின்றதல்லவா? அதனால், தீ, மேல்நோக்கி எரியும் இயல்புள்ளது என்பது அறியலாகும். ஒருவர் உடையில் நெருப்புப் பற்றிக் கொள்ளின், அவர் நின்றுகொண்டிருந்தால், நெருப்பு விரைவில் மூண்டு எரியும் என்பது மேல் உதாரணத்தால் தெளிவாகும். ஆதலால், உடையின் முன்பக்கத்தில், தீப்பற்றிக் கொண்டால், தரையில் மல்லாந்து படுக்கவேண்டும்; பின்பக்கத்திலாயின் கவிழ்ந்து படுக்கவேண்டும். அவ்வாறு படுத்தால் அனற்கொழுந்து, மேல் நோக்கி எரிய இடமில்லாமையால் விரைவில் அணைந்துவிடும். உடை, எளிதில் அவிழ்க்கத்தக்கதாயிருப்பின், நெருப்புப் பற்றியதும், உடனே அதனை அவிழ்த்து எறிந்து விடுதல் சிறந்தது; அன்றேல், தரையிற் படுத்துப் புரளுதலும் அமையும்.

ஒருவர் உடையில் அனல் பற்றிக்கொண்டால், நீ என்ன செய்யவேண்டும்? கனமான முரட்டுத் துணியையோ, அல்லது, கம்பளி, சாக்கு முதலியவற்றையோ சுருட்டி, எரியும் பாகத்தின்மேல் போடவேண்டும். அவ்வாறு செய்யின் அழற்கொழுந்து அணையும். பின்னர், தீப்பற்றிய உடையை மெதுவாக அவிழ்க்கவேண்டும்; அவிழ்க்க முடியாதாயின், கத்தரித்து எடுக்கவேண்டும். எரியுண்டு புண்பட்ட விடத்தில், நெய், வெண்ணெய், விளக்கெண்ணெய் இவைபோன்றவற்றில் பஞ்சைத் தோய்த்து வைக்க வேண்டும். இத்தருணங்களில்,

அனலை நீரால் அணைத்தல் கூடாது. மூளை, கழுத்தின் பக்கம், இருதயம், சுவாசப்பை இவற்றில் எரியுற்றிருக்குமாயின், ஆபத்துக்கு இடமாகும். ஆதலால், டாக்டருடைய உதவியை உடனே நாடுதல் அவசியமாகும்.

மேற்கூறியவாறு எல்லாவித அபாயங்களுக்கும் உதவி செய்வது சாலப் பயன்தருவதாகும். சாதாரணமான காலங் களில் இத்தகைய செயல்களைப் பிறருக்குச் செய்து பழகினால் தான், அபாய காலங்களில் துணிவாக நின்று உதவி புரிதல் கூடும். ஆதலின், இம்முறையைச் செய்து பயிலுதல் வேண்டும்.

17. உழவுத்தொழிலின் நிலைமை.

மாந்தர், முதன் முதலில் காய் கனி கிழங்குகளை யருந்தியும், பிராணிகளை வேட்டையாடிக் கொன்று தின்றும் உயிர் வாழ்ந்து வந்தனர். பின்பு, அவர்கள், தங்கட்கு விருப்பமான காய் கனிகளைப் பயக்கும் மரஞ் செடி கொடிகளைப் பயிரிட்டு வளர்க்கலாயினர். ஆதலின், மக்கள் முதலில் தொடங்கிய தொழில்கள் வேட்டையாடுதலும் பயிரிடுதலுமே என்னலாம். அதனால், பயிர்த்தொழில், உயிர்கள் வாழ் விற்கு பெரிதும் இன்றியமையாததென்பது ஒருதலை. இது பற்றியே, 'உழவர், தம் தொழிலைச் செய்யாது விட்டுவிடுவா ராயின், பற்றற்ற துறவிகளும் உலகத்தில் வாழ முடியாது' என்னும் பொருளமைத்து,

> உழவினார் கைம்மடங்கின் இல்லை; விழைவதூஉம்
> விட்டேம் என் பார்க்கும் நிலை

என்று, திருவள்ளுவர் அருளிச் செய்தனர்.

உலகத்தில் எந்தத் தொழிலைப் புரிபவரும், தம் தொழி லில் வரும் பயனால் பசியைத் தீர்த்துக்கொள்ளுதல் இயலாது. அவர்கள் தம் பசிப்பிணியைப் போக்கி உயிர்வாழ்வதற்கு

உழவர்களின் உதவியையே நாடுகின்றனர். அதனால், உழவுத் தொழிலே எல்லாத் தொழில்களினும் தலைமையாய் விளங்குகின்றது. இதனாலேயே,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

என்று, செந்நாப்புலவர் திருவாய்மலர்ந்தனர். இவ்வாறே உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறும் செய்யுட்கள் மிகப் பல. இவற்றால் நம் முன்னோர் அதனை மிகச் சிறந்த தொழிலாகக் கருதி வந்தனர் என்பது தேற்றம்.

எவ்வகைத் தொழிலினும் கேடுகள் உண்டாகக் கூடும் என்றும், உழவுத்தொழிலிற் கேடு உண்டாகாது என்றும் புகழ்ந்து கூறுதலும் உண்டு. ஆயினும், இக்காலத்தில் உழவுத் தொழிலின் நிலைமையும், அதனால் உண்டாகும் சிறு பயனும் நோக்கின், உழவுத்தொழில்போலச் சீர்கேடடைந்த தொழில் பிறிதில்லை என்பது புலனாகும். உழவர் எவ்வளவு வருந்தி முயன்றாலும், அதனால் கிடைக்கும் வருவாய், பயிர்ச் செலவிற்கும், வித்திற்கும், எருதுகளில் நேரும் நஷ்டத்திற்கும், அரசாங்க வரிக்கும் போக மிஞ்சுவதில்லை; சில காலங்களில் இவற்றிற்கே போதாமல், கடன் கொண்டு, கடைசியில் தம் புலங்களை விற்று, கடன் இறுக்கும்படியும் நேருகின்றது! அந்தோ! ஏழைக் குடிகளில், உழவுத்தொழில் செய்து, வயிற்றுக்கும் உணவின்றி, வாங்கிய கடனைக் கொடுத்தற்கும் வழியின்றி, வேறு தேசங்களிற் பிழைப்பைக் கருதிச் செல்கின்றவர் எத்தனை பேர்! பாவம்! இவ்வாறு உழவுத்தொழில் சீர்கேடு அடைந்துவரின், நாட்டின் நிலைமை என்னாகும்! ஆதலின், இத்தொழில் இவ்வாறு தாழ்வுற்றதன் காரணங்களை இங்கே ஆராய்வாம்:

உழவுத்தொழில் தாழ்ந்த நிலைமையை அடைந்ததற்குக் காரணங்கள் பலவுள. அவற்றுள்,

முதற்காரணம்:—இக்காலத்தில் உழுதொழில் புரிவோர் கல்வியறி வில்லாதவர்களா யிருப்பது. ஒரு குடியிற் பிறந்த பலருள், அறிவு மிக்க மக்கள் கல்வி பயின்று உத்யோகம் செய்யவும், அவரினும் அறிவிற் குறைந்தவர் வாணிகம் முதலியன நடத்தவும், ஒரு தொழிற்கும் உதவாத மந்தமதிகளே உழவுத்தொழிலை மேற்கொள்ளவும், பெற்றோர்களே பிரித்துவிடுகின்றார்கள். அறிவில் மிக்கவர் ஆற்றுந் தொழில் சிறப்பாக நடைபெறுதலும், மிகுந்த பயனைத் தருதலும், அறிவிற் குறைந்தவர் மேற்கொண்ட தொழில் சிறப்பாக நடைபெறாமையும், தக்கபயன் தாராமையும் இயல்பே. ஆதலின், பெரும்பாலும் அறிவு குறைந்தவர்களாலும் கல்வியறிவில்லாதவர்களாலும் நடைபெற்று வரும் பயிர்த்தொழில், நாளுக்கு நாள் இழி நிலையை அடைந்து வருதலில் வியப்பு என்!

இரண்டாவது:—இக்காலத்தில் நம் நாட்டினர், உழவுத் தொழிலைத் தாழ்வாகக் கருதி, அத் தொழில் புரிபவரையும் இழிந்தவராக எண்ணுகின்றனர். இவர்கள்பிறநாடுகளில் நடைபெறுவனவற்றை அறிந்திலர்போலும்! லண்டன் நகரிலுள்ள 'பார்லிமெண்டு' மகாசபையின் அங்கத்தவர்களுள் பயிர்த் தொழில் நடத்துபவர் பலர். உரோம ராஜ்யத்துப் பெரு மன்னர்களில் சிலர், அரசியலையும் துறந்து, பயிர்த்தொழில் புரிந்து வந்தனர் என்று சரித்திரம் கூறும். சீனதேசத்துச் சக்கரவர்த்தி, இன்றும் யாண்டுக்கொருமுறை உழுதொழில் செய்கின்றனர். நம்முடைய மாட்சிமை தங்கிய ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தியார், 200 ஏக்கருக்கும் அதிகமான நிலத்தைத் தாமே பயிர் செய்து வந்தனராம்! இவற்றால் உழுதொழிலைப் பிறநாட்டார் எவ்வளவு உயர்வுடையதாக மதித்திருக்கின்றனர் என்பது தெரியவரும். நம் நாட்டிலும், பெருஞ் செல்வம் படைத்தவரும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடரை ஆதரித்து வந்தவருமாகிய சடையப்ப வள்ளல்,

மள்ளர்களுடன் கழனிகளில் தாமும் உழுதொழில் நடத்தினர் என அறிகின்றோம்.

மூன்றாவது:—உழவுத்தொழில் புரிபவருக்குச் சாஸ்திர ஞானம் அவசியமன்று என நம்மவர் கருதுகின்றனர். அது சரியன்று. உழவர், ஒவ்வொரு பொருள்களின் இயல்பையும், அவற்றின் வேறுபாடுகளையும், பலவகை நிலங்களின் இயல்புகளையும் நுட்பமாக அறிந்திருக்கவேண்டும்; இன்ன மண்ணில் இன்ன பயிர் நன்றாக விளையும் என்று கண்டுபிடிப்பதற்கும், ஒரு நிலத்தில் பயிர் செழித்து வளராததன் காரணங்களை ஆராய்ந்தறிந்து அந்நிலத்தைச் சீர்ப்படுத்துதற்கும், பயிர்களுக்கு உண்டாகும் நோய்களை அறிந்து அவற்றை வாராமல் தடுப்பதற்கும், வந்த நோய்களைப் போக்குவதற்கும், ஆடுமாடுகளுக்கு வரும் பிணிகளைத் தீர்ப்பதற்கும், அவர்களுக்குப் பலவகையான சாஸ்திரங்களின் அறிவும் ஆவசியகம். யந்திர நிர்மாண சாஸ்திரமும் அவர்கள் பயின்றிருப்பின் நலம். ஆதலால், மற்றைத்தொழில் செய்பவரினும் உழவுத் தொழில் செய்பவரே பலவகையான சாஸ்திரங்களையும் நன்கு கற்றிருக்க வேண்டும் என்பது தெளிவாகுமன்றோ? உழவர், நூற்பயிற்சியும் அநுபவஞானமும் உடையவராயிருப்பின், அப்பொழுது அவர்கள் செய்யும்பயிர்த்தொழில் பெரும் பலனைத் தரும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

குடிகளுக்கு வியவசாய சாஸ்திர ஞானம் அவசியமாகும் என அறிந்து, துரைத்தனத்தார் வியவசாய கலாசாலை ஒன்று ஏற்படுத்தி நடத்திவருகின்றனர்; வித்துக்களைக் குறித்தும், எருக்களைக் குறித்தும், வியவசாய முறைகளைக் குறித்தும் அங்கே ஆராய்ச்சி செய்து அறிவிக்கின்றனர்; இரும்புக் கலப்பைகளை அயல் நாடுகளிலிருந்து தருவித்து, அவற்றின் நன்மையை யெடுத்துரைத்து, அவை பரவுமாறு செய்கின்றனர். பல இடங்களுக்கும் சென்று, உழவுத் தொழிலின் புதிய

முறைகளை எடுத்துரைக்கும்படி அதிகாரிகளை நியமித்திருக்கின்றனர்; நமது நாட்டில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்த லால்குடி என்னும் ஊருக்கருகில், பழைய முறைப்படி சில வயல்களிலும், புதிய முறைப்படி சில வயல்களிலும் பயிரிட்டு, அம்முறைகளின் ஏற்றத் தாழ்வுகளைக் கண்கூடாகக் காட்டி வருகின்றனர்; சமீபகாலத்தில் வியவசாயச் சீர்திருத்தத்தைக் குறித்து ஆலோசனை செய்யுமாறு வியவசாய சபை (The Royal Commission of Agriculture) ஒன்று ஏற்படுத்தி, அச்சபையார் கூறியவாறே உழவுத் தொழில் ஆராய்ச்சி சங்கம் (Agricultural Research Council) ஒன்று அமைத்திருக்கின்றனர்.

நான்காவது:—நம் நாட்டில், பயிர்த் தொழிலுக்குத் துணைபுரிபவர் இல்லை. வாணிகம் முதலான தொழில்களுக்கு உதவியாகப் பொருள்நிலையங்கள் (Banks) அமைக்கப்பட்டிருத்தல்போல, இத் தொழிற்குப் பொருள்நிலையங்கள் பல இடங்களிலும் ஏற்படுத்தப்படாதிருப்பது பெருங் குறை. சில காலங்களாகத் துரைத்தனத்தார், வியவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, உழவுத்தொழிலை விருத்தி செய்கின்றனர்; உழுதொழில் செய்பவர்களுக்குப் பொருளுதவி செய்யும் பொருட்டு, பல சட்டங்களை விதித்துள்ளனர்; ஐக்ய நாணய சங்கங்களை அமைத்து, குறைந்த வட்டிக்குக் குடிகளுக்குக் கடன் கொடுத்து, பல தடவைகளாகப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கின்றனர்; சமீபகாலத்தில், பொருள்நிலையம் ஒன்று ஏற்படுத்தியுள்ளனர். குடியானவர்கள், பெருந்தொகையைக் கடனாக வாங்கி, அதனை இருபது. இருபத்தைந்து வருடங்கள் வரையிலும் சிறிது சிறிதாகத் திருப்பிக் கொடுக்கலாம். இவ்வாறு அரசாங்கத்தார் பல உதவிகளைச் செய்திருப்பினும், அவற்றின் நன்மையை உழவர்கள் நன்கு அறிந்துகொள்ளவில்லை. உழவர், பயிரிடுவதற்கு

வேண்டும் பொருளை, செல்வர்களிடத்தில் அதிக வட்டிக்கு வாங்குதலினால், அவர்கள், பயிர் விளைந்து அறுவடையான வுடனே, அம்மாசூலைக் குறைந்த விலைக்கு விற்றுக் கடன் கொடுத்துவிடுகின்றனர். அந்தத் தானியத்தின் இலாபத்தை வியாபாரிகளே அடைகின்றனர். வேறு சிலர், பொருளின் ஆவசியகத்தைக் கருதி, விளையும் தானியத்தை மிகவும் குறைந்த விலைக்குக் கொடுப்பதாக உடன்பட்டு, முன்னரே கடன் வாங்குகின்றனர்; அந்தோ! பல நாள் வருந்தி யுழைத்துப் பயிரிட்டு விளைத்த தானியத்தில் ஒரு சிறிதும் அவர்கள் அடைய முடியவில்லையே! சில காலங்களில், விளைவித்த தானியம், வட்டிக்கு மட்டும் போதுமானதாக, வாங்கிய கடனைக் கொடுக்க வழியின்றிப் பரிதவிக்கும் ஏழை யுழவர்களின் நிலைமை என்னே! அற்றைக் கூலிவாங்கிப் பிழைக்கும் எளிய கூலியாட்கள், நம் உழவர்களினும் பெருஞ் செல்வம் படைத்தவர்களா யிருக்கின்றனர் என்பது அதிசயோக்தி அன்று.

ஐந்தாவது:—ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் வேண்டிய அளவு இல்லாமையாகும். முற்காலத்தில் ஒவ்வோர் ஊர்ப் பக்கத்தும் பெருங்காடுகள் பொதுநிலங்களாக இருக்கும்; அந்நிலங்களில் யாரும் பயிரிடுவதில்லை. அதனால் உழவெருதுகள் முதலானவை அவற்றில் நன்றாக மேய்ந்து வளரும். மிகுந்த வலிமையுடைய காளைகளை ஏரிற் பூட்டின், நிலத்தை அதிக ஆழமாக உழமுடியும். ஆழ உழுதால்தான் பயிர் செழிப்பாக வளர்ந்து நல்ல பயனைத் தரும். இக்காலத்தில், மேய்ச்சற்குரிய நிலங்களெல்லாம் தனித்தனியே ஒவ்வொருவருக்கு உரிமையாய் விடுவதனால், பொதுவான மேய்ச்சல்நிலமே இல்லை என்னலாம். அரசாங்கத்தார் இவ்விஷயத்தைக் கவனிப்பது இன்றியமையாததாகும். தோலுங் காலும் வாலும் உடையனவாய், நடக்கவும் திறமையற்றுக் கிடக்கும் தூங்கல் எருதுகளே இப்போது நம் உழவர்களுக்குக் காளைகளா யிருக்கின்றன. மேல்

நாடுகளில் குதிரைகளாலும் யந்திரங்களாலும் நிலத்தை உழுது வரும் இக்காலத்தில், நம் நாட்டில் வலியுடைய எருதுகளால் உழுதலும் குறைவுபட்டது! இதனினும் இழி நிலைமை என்னே! நாட்டின் நன்மையைக் கருதும் பெருமக்கள் இவ் விஷயத்தில் நாட்டம் செலுத்தினாலன்றி, நாட்டின் வறுமை நீங்காது.

ஆறுவது:—வியவசாயிகளின் ஊக்க மின்மையைக் கூறலாம். உழவரில் பெரும்பாலோர் புலங்களுக்கு இடும் எருக்களைச் சேர்ப்பதில் கருத்துக்கொள்வதில்லை; வித்துக் களைப்பற்றியும் நினைப்பதே யில்லை. எந்தத் தானியத்தையும் வித்தாக உபயோகிக்கின்றனர். விளைவு குறைவதற்கு முதற் காரணம் இதுவே என்பதைப் பலரும் மனங்கொள்வதில்லை. வளமுடைய நிலத்தில் நன்றாக விளைந்த பயிரைத் தெரிந்தெடுத்து, அவற்றிலுள்ள தானியத்தையே வித்தாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு தடவையும் சிறந்த தானியத்தையே தெரிந்தெடுத்து, அவற்றை விதைப்பார்களானால், அதிகமாகப் பலன் கிடைக்குமென்பதில் ஐயமில்லை. பயிர்த்தொழில் செய்பவர்களிற் பலர், கையிற் பொருள் இன்மையாலும், உழவுமாடுகள் இல்லாமையாலும், 'பருவத்தே பயிர்செய்' என்பதை யறிந்திருந்தும், தக்க காலத்திற் பயிரிட முடியாமல், காலம் தாழ்த்துப் பயிரிடுகின்றனர்; இதனாலும் தகுந்த விளைவு விளையாமற் போகின்றது. வேளாண்மை செய்பவர் தாளாண்மை மிகுந்தவராய், உரியகாலத்தில் செய்வன செய்யத் தவறாமல், தம் தொழிலைச் சரிவரச் செய்து நற்பயனடைய முயல்வாராக.

நம் முன்னோர் உழவுத்தொழிலை நன்கு நடத்திப் பெருமை படைத்திருந்தனர். அவர்கள் அத்தொழிலில் கண்ணுங் கருத்துமாயிருந்து, பலவற்றின் இயல்புகளைத் தம் அநுபவத்தில் அறிந்து, அவற்றைக் கட்டுரைகளாக

அமைத்து வழங்கியிருக்கின்றனர். அம்மொழிகளுள் சில வற்றை இங்கே குறிப்போம்:

அகல உழுவதை ஆழ வுழு.
அவரைக்கு ஒரு செடி; ஆதீனத்துக்கு ஒரு பிள்ளை.
ஆடிப் பட்டம் தேடிவிதை.
ஆடிமாதம் அவரை போட்டால், கார்த்திகை மாதம் காய்.
ஆடியானை வாலோத்த கரும்பு—--புரட்டாசி பதினைந்தில் [விதைத்த வித்து.
எப்பயிர் செய்யினும் நெற்பயிர் செய்.
எள்ளுங் கொள்ளும் எழுபது நாள்.
ஏரற்றவன் இரப்பாளி.
காய்க்கு அலைந்தவன் பீர்க்குப் போடு.
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
சமுசாரம் பெருத்துப்போச்சுது என்று சாலுக்குக் குறுணி [விதைத்தானும்.
தட்டத்தட்ட எள்ளு; கொட்டக் கொட்டக் கேழ்வரகு.
நாலடி வாழை; பத்தடி பனை.
பருவத்தே பயிர்செய்.
பிடிவிதை விளையும் மடிவிதை தீயும்.
முடிச்சு முடிச்சாக நட்டால் கோட்டை கோட்டையாக [விளையுமா?
வாழை வாட்டமும் வரகு வாட்டமும் தெரியாது.
விளையும் பயிர் முளையில் தெரியும்.

I. அறநெறிச்சாரம்.

பலகற்றோம் யாம் என்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி அன்னதோர் சொல். 1.

ஈட்டிய ஒண்பொருளும் இல்லொழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்—மூட்டும்
எரியின் உடம்பொழியும் ஈர்ங்குன்ற நாட
தெரியின் அறமே துணை. 2.

காலைச்செய் வோம்என் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலை
கிடந்தான் எழுதல் அரிதால் மற் றென்கொல்
அறம் காலைச் செய்யாத ஆறு. 3.

வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும் அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு. 4.

அஞ்சினா யேனும் அடைவ தடையும்காண்
துஞ்சினாய் என்று வினைவிடா—நெஞ்சே
அழுதாய் எனக்கருதிக் கூற்றொழியா தாற்றத்
தொழுதேன் நிறையுடையை ஆகு. 5.

பிறர்க்கின்னா செய்தலின் பேதைமை இல்லை
பிறர்க்கின்னா தென்றுபேர் இட்டுத்—தனக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
பித்தும் உளவோ பிற. 6.

காலொடு கைஅமுக்கிப் பிள்ளையை வாய்நெரித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாய்அனையர்—சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிந்து நாளும்
கொடுத்து மேற் கொண்டொழுகு வார். 7.

வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றால்
மனைவாழ்க்கை நன்று தவத்தின்—புனைகோதை
மெல்லியல் நல்லாளும் நல்லள் விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லாள் எனின். 8.

உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுண்ணக் கால்அது கூராதாம்—தொக்க
உடம்பும் பொருளும் உடையான் ஓர் நன்மை
தொடங்காக்கால் என்ன பயன். 9.

பாம்புண்ட பால் எல்லாம் நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீர் அமுதமாம்—ஓம்பற்
கொளியாம் உயர்ந்தார்கண் ஞானம் அதுபோல்
களியாம் கடையாயார் மாட்டு. 10.

II. நீதிநெறி விளக்கம்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். 2.

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். 3.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று. 4.

கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். 5.

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. 6.

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. 7.

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. 8.

தம்முடை ஆற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக—பின்னர்ச்
சிறுவரை ஆயினும் மன்ற தமக்காங்
கிறுவரை இல்லை எனின். 9.

இகழின் இகழ்ந்தாங் கிறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப—இகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை. 10.

காலம் அறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து—மேலும் தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை ஆளப் படும். 11.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். 12.

தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
ஒத்த கடப்பாட்டில் தாளூன்றி—எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறர்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள். 13.

கற்புடைத் தன்பு முடித்து நாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு. 14.

III. சந்திரமதி திருமணம்

அருந்தவ முனிவ ரெல்லாம் அரசனை நோக்கி ஐய
பெருந்தவ முடையார் மண்ணில் நீயலால் பிறரும் உண்டோ
திருந்திழை தனை உ னக்கே திருமணம் முடிக்கத் தாதை
பொருந்தினன் வல்லை நீயும் எம்முடன் போதி என்றார். 1.

கன்னலங் கழனி வேலிக் கன்னோசி நோக்கி இவ்வூர்
மன்னரும் அமைச்சர் தாமும் சேனையும் மாத ராரும்
முன்னரே செல்க என்னு மொழிந்து சூ தனைக்கண் சாத்தி
வன்னமா மணித்தேர் கொண்டு வருகென அருளிச் செய்தான்.

வேறு

மாதங்கம் மடங்கல் வயப்பரிமா
பூதம்பல தேரொடு பூணநிறீஇச்
சூதன்கொடு வந்து சுடர்க்கழலோன்
பாதங்களின் மீது பணிந்தனனே. 3.

வாரேறு செழுந்தட மாமுரசும்
நீரேறிய சங்கமும் நின்றதிரத்
தாரேறு புயங்கள் ததும்ப நெடுந்
தேரேறி விரைந்து செலுத்தினனே. 4.

நற்றேரினை மன்னன் நடத்திடவே
சுற்றேற நிறைந்தயல் துன்னினவால்
குற்றேவல் செயும்பல கொற்றவர்தம்
பொற்றேர் சத கோடி பொருப்பெனவே. 5.

சிறையோதிமம் மேல்வரு தேவனெனப்
பொறையோடொளிர் வெண்சிவி கைப்பொலிவுற்
றிறையோனொ டமைச்சர் இறைஞ்சிட மா
மறையோதி வசிட்டனும் வந்தனனே. 6.

தரைசேர் கடல் ஒத்தன தானை கடற்
றிரைபோல நடந்தன திண்பரிமா
விரைசேர் அரு வித்திரள் வீழ் பல மால்
வரைபோல நடந்தன வாரணமே. 7.

வேறு

வாள்செலச் சிலைசெல மாத ரார்செல
ஆள்செலத் தேர்செல ஆனை செல்ல நீள்
தோள்செலுஞ் சுடர்மணித் தோளி னான் பல
நாள் செலக் கனோசிமா நாட்டை நண்ணினான். 8.

இடியென முழங்கிட இயம்பி யங்களால்
வெடிபடும் உலகமும் விசும்பும் என்ன நீள்
கொடிகளும் குடைகளும் குழுமக் கொற்றவன்
கடிகமழ் கங்கையின் கரையை நண்ணினான். 9.

வரைசெறி வேழமும் மாவின் கூட்டமும்
விரைசெறி தார்ப்புய வேந்தர் மக்களும்
பிரசமா மலர்க்குழற் பேதை மாதரும்
அரசனும் கங்கை நீ ராடி ஏறினார். 10.

அன்னமா டுந்துறை அகழும் வாவியும்
வன்னமா மதில்களும் மாட கூடமும்
பொன்னின்மா மேடையும் பொலிந்து தோன்றவக்
கன்னமா புரிதனைக் கண்ணி னோக்கினான். 11.

வேறு

முன்ன மன்னன் முகூர்த்தமோ ரேழ் எனச்
சொன்ன நற்றினம் வந்து தொடங்கலும்
மன்ன னும் மறை யோர்களும் மாதரும்
கன்ன லந்திருக் காவணத் தெய்தினார். 12.

வேந்தர் ஈண்டினர் வேதியர் ஈண்டினர்
மாந்தர் ஈண்டினர் மங்கையர் ஈண்டினர்
ஆய்ந்த நீதி அமைச்சரும் அவ்வவர்ச்
சேர்ந்த சேனையும் சேரவந் தீண்டின. 13.

சென்னி நின்றிரு சீறடி மட்டும் வான்
மின்னி னாலமைத் தன்னசெம் மேனியைப்
பொன்னி னால் மணி யாற் புதைத் தே எழிற்
கன்னி தன்மணக் காவணத் தெய்தினாள். 14.

அன்ன காலையின் அங்கைகள் நீட்டியே
கன்னல் மாமொழிக் காரிகை தோழிமார்
மன்னர் நாமமும் நாடும் வழிகளும்
இன்ன தின்ன தெனஎடுத் தோதுவார். 15.

வேறு

மந்தரம் அனையதோள் வள்ளல் பேர்சொலச்
சுந்தரத் தோகைமார் தோளைத் தாழ்த்தியச்
சந்திர மதிஅரிச் சந்திரன் தனைக்
கந்தரம் நீட்டியுட் கருத்து நோக்கினாள். 16.

அங்கைவேல் மன்னனும் ஆசை மீக்கொள
மங்கைதன் பங்கய வதனம் நோக்கினன்
செங்கயற் கண்ணினாள் திருக்க ழுத்தினில்
மங்கல நாணுறீஇ வயங்கக் கண்டனன். 17.

கன்னிஎன் றெண்ணினம் கன்னி யோ அலள்
முன்னரே மங்கலம் பூண்ட மொய்குழல்
இன்னமும் ஒருவருக் கெய்து மோ என
மன்னவன் மாதுலற் குரை வ ழங்கினன். 18.

பொறுத்து முன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மணமு டிப்பரோ
சிறுத்தவர் செய்தொழில் திரை வ ரைப்பிதில்
நிறுத்தினீர் நீர்என நெடிது கூறினன். 19.

வள்ளல் ஈ துரைத்தலும் மதித யன்தன
துள்ளம்விட் டோங்கிய உவகை யம்பெரு
வெள்ளம்உள் ளடக்கியே வேந்தர் காள்இவன்
கள்ளமோ மெய்ம்மையோ கட்டு ரைத்ததே. 20.

தையலாள் கழுத்தினில் தாலி உண்டெனில்
கையினால் கண்ணுறக் காட்டும் நீர்எனச்
செய்யகை அறைந்தணி மூக்கிற் சேர்த்திஇவ்
வையனும் பொய்யனென் றரசர் கூறினர். 21.

மண்டல வேந்தன்எம் மடந்தை மங்கலம்
கண்டதும் நீங்கள்தாம் கண்டி லாததும்
திண்டிற வீர்ஒரு தேவ ராசியம்
உண்டென மதிதயன் உரைப்ப தாயினன். 22.

அண்டர்நா யகன்வரம் அளித்த நாளையில்
வண்டணி குழலியோ டுதித்த மங்கலம்
கண்டவர் பதிஇவட் கென்ற கட்டுரை
உண்டஃ தன்றிவே றுண்டு கேட்டிரால். 23.

மஞ்சனச் சடையினன் வரத்தில் வந்தநாள்
கஞ்சன நீழலிற் காண்ப தன்றியே
அஞ்சனக் கண்ணிக்கும் அங்கைக் கெய்திடா
தெஞ்சலில் யாவரும் யானும் கண்டிலேம். 24.

வேறு

என்றலும் வல்லிமுன் எண்ணிய நாமம்
ஒன்றல துள்ளுற உன்னல ளாகிச்
சென்றவன் மார்பிது சேர்கென உன்னு
மன்றலர் மாலையை வானில் எறிந்தாள். 25.

வஞ்சி வழங்கிய மாலை யணிந்தோன்
செஞ்சுட ரின்முகம் நின்றொளி செய்ய
வெஞ்சுடர் முன்சசி ஆம்என மிக்கோர்
கஞ்ச முகங்கள் கரிந்தன அன்றே. 26.

மாதர்கள் ஆர்த்தனர் வானவர் ஆர்த்தார்
கீதர்கள் ஆர்த்தனர் கேளிரும் ஆர்த்தார்
சூதர்கள் ஆர்த்தனர் துறவரும் ஆர்த்தார்
வேதர்கள் ஆர்த்தனர் வேலை அடங்க. 27.

நல்லியல் நூல்அறி நாவலர் பாடப்
பல்லிய மும் பல பாடலும் ஆர்ப்ப
அல்லி மலர்த்தொடை மாலை அணிந்த
வல்லியும் மன்னனும் மாளிகை புக்கார். 28.

IV. கோவிந்த சதகம்

தானே கனியாத காய் தடிகொண் டடித்தாற் கனியாது

அண்டினர்க் கீபவர் தாமே தருவதல் லாதிரப்போர்
தெண்டனைக் காகக் கொடுப்பதுண் டோசெழுங் காய்மரத்திற்
கண்டிடிற் றானே கனியாத முன் கனி யத் தடிகைக்
கொண்டடித் தாற்கனி யாதச்சு தாநந்த கோவிந்தனே 1.

தோட்டிபோ லுழைக்கவேண்டும்
துரைபோற் சுகிக்கவேண்டும்

தோட்டியைப்போ லுழைப்பார்பொருள்தேடிச்சுகிப்பதல்லாற்
பூட்டி யறைக்குட் புதைத்துவைத் தாற்புசி யாரெவர்க்கோ
ஈட்டிடத் தேன்பல பூவினிற் சென்று சென் றீயெடுத்துக்
கூட்டி யிழப்பது வாமச்சு தாநந்த கோவிந்தனே. 2.

பொருளும் போகமும் கூட வாரா

கூடவ ராதிட்ட பொற்பூஷ ணங்கள் துரையெனக்கொண்
டாடவ ராது சதுரங்க சேனையும் ஆண்மையும்போம்
ஓடவ ராதெம தூதர்வந் தாலுள்ள ரொக்கமுந்தன்
கூடவ ராதென் றெண் ணுரச்சு தாநந்த கோவிந்தனே. 3.

இயல்பாய் மணமில்லாத சந்தனக்கட்டை
இழைத்தாலுங் குழைத்தாலும் மணக்காது

அழைத்தா யிரந்தரம் புத்திசொன் னாலடங் காதவம்பர்
தழைத்தா லுமென்னவர் கெட்டா லுமென்கந்த மற்றகுற
டிழைத்தா யிரந்தரஞ் சாணையிற் சுற்றி யெடுத்து நன்னீர்க்
குழைத்தா லும் வாசந் தராதச்சு தாநந்த கோவிந்தனே. 4.

வஞ்சகர்க்கு எத்தனை வாஞ்சையாய் நடக்கினும்
நெஞ்சகந் தன்னில் நேசங் கொள்ளார்.

மஞ்சனந் தேடி மலர்தேடி யுன்னை வணங்கப்பெற்றேன்
நெஞ்சகந் தன்னில் நினைக்கப்பெற் றேனினை யாவிடினும்

அஞ்சலென் றென்ன வுனக்கே பரமட லாழிகொண்டு
குஞ்சரங் காத்தவ னேயச்சு தாநந்த கோவிந்தனே. 5.

குட்டிக்கரணம் போட்டாலும் கொடுக்கிறதரிது

தடுப்பார் புலியையும் பாம்பையும் வாய்கட்டித் தாங்கிக்கையா
எடுப்பார் மழுவைத்தண் ணீர்மேல் நடப்பர் எவருமெய்ச்ச[ல்
அடுப்பார் சபையினில்நூற்றெட் டடிக்கம்பத் தாடுவர்பொன்
கொடுப்பா ரரியர்கண் டாயச்சு தாநந்த கோவிந்தனே. 6.

கொடுத்தாற் குறை வராது

எடுத்தாலும் ஊறும் இறைத்தாலும் ஊறும் இடைநடுவே
மடுத்தால் மறிபடு மோமணற் கேணித்தண் ணீரதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கச் செல்வமுண் டானவ ரன்புடனே
கொடுத்தாற் குறைவரு மோவச்சு தாநந்த கோவிந்தனே. 7

பொல்லாக் குணத்துக்கு நல்ல மருந்துண்டோ

உணத்தக்க நன்மருந் தாற்பிணி போமென் றுலகிலுள்ளோர்
பணத்துக்குக் கொண்டு பரிகரிப் பார்விடம் பாய்ந்து செத்த
பிணத்துக்கும்பச்சிலையுண்டுபுல்லோர்க்குப்பிறக்கும்பொல்லாக்
குணத்துக்கு நன்மருந் தேதச்சு தாநந்த கோவிந்தனே. 8.

நாய்வாலைக் குணக்கெடுக்க யாராலாகும்

இணக்கா திரார்வல் லிரும்பொடிந் தால்வைத் திருதலையும்
வணக்கா திரார்வின் னிமிர்ந்ததென் றூற்புல்லர் மாறுபடும்
பிணக்கார் தடுப்பவர் நாய்வாலை நீளப் பிடித்திழுத்துக்
குணக்கா ரெடுக்கவல் லாரச்சு தாநந்த கோவிந்தனே. 9.

கோவுக் கழகு செங்கோல்

பாவுக் கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக் கழகு மயிலுங் குயிலுங் கண் டாய் கமலப்
பூவுக் கழகு மணமுந் திருவும் புவிபுரக்கும்
கோவுக் கழகு செங் கோலச்சு தாநந்த கோவிந்தனே. 10.

கங்காநதியில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆமா.

ஒளித்தாலுந் துர்க்குணம் போமோ குருவுப தேசமந்த்ரம்
அளித்தாலும் புல்லர்நல் லோராவ ரோசென் றடுத்தடுத்துக்
களித்தா யிரந்தரங் காக முழுகிக்கங் காநதியிற்
குளித்தாலும்அன்னமொவ்வா தச்சு தாநந்தகோவிந்தனே. 11.

V. பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை இடைநடுவில்
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே 1.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே 2.

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை அண்டினர்க்கொன்
றீயார் இருந்தென்ன போயென்ன காண்கச்சி ஏகம்பனே 3.

நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டை யாடி நயம்புரியும்
தாயார் வயிற்றில் நராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவும்என்ன
ஈயா மனிதரை ஏன்படைத் தாய்கச்சி ஏகம்பனே 4.

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குங் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங் கொடார்குரு சொன்னபடி
நில்லார் அறத்தை நினையார்நின் நாமம் நினைவிற் சற்றும்
இல்லார் இருந்தென் இறந்தென் புகல்கச்சி ஏகம்பனே 5.

TB
O31(8)
N31

சொல்லால் வருங்குற்றம் சிந்தனை யால்வருந் தோடம்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள் ஆயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே 6.

பொன்னாற் ப்ரயோசனம் பொன்படைத் தாற்குண்டு பொன்
[படைத்தான்
தன்னாற் ப்ரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மையைப்
[போல்
உன்னாற் ப்ரயோசனம் வேணதெல் லாமுண் டுனைப்பணியும்
என்னாற் ப்ரயோசனம் ஏதுண்டு காளத்தி ஈச்சுரனே. 7.

காடோ செடியோ கடற்புற மோ கன மே மிகுந்த
நாடோ நகரோ நகர்நடு வோ நல மே மிகுந்த
வீடோ புறந்திண்ணை யோ தமி யேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றில் ஈசா உயிர்த்துணை நின்பதமே. 8.

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க ஈசன் இருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீர்இந்த மானிடமே 9.

அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மிஇரு
கைத்தலை மேல்வைத் தழுமைந்த ரும்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினை புண்ணியம் பாவமுமே 10.

ஒன்றென் றிருதெய்வம் உண்டென் றிருஉயர் செல்வமெல்லாம்
அன்றென் றிரு பசித் தோர்முகம் பார்நல் லறமும்நட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேஉனக் கேயுப தேசமிதே 11.

Printed in Madras at the B. N. Press, Mount Road, (P.O.)

84747